# நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்

முனைவர் கே.ஏ. குணசேகரன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்

முனைவர் கே.ஏ. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை – 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Nattuppurak kataigalum nataga akkamum |
| Author | : | Dr. K.A. Gunasekaran |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai 600 113. |
| Edition | : | First |
| Date of Publication | : | 2002 |
| Publication No | : | 420 |
| Language | : | Tamil |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | x +125 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- |
| Printed by | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Mylapore, Chennai - 4<br>Ph: 4984693, 4661807 |
| Subject | : | Drama |

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

# அணிந்துரை

தாய் வழிச் சமுதாயம், தந்தை வழிச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் என்றவாறு சமுதாயம் பல மாற்றங்களுக்கு ஆட்பட்டு வந்திருப்பதனை வரலாற்றின் வழி அறியலாம். இவ்வாறு மாற்றங்களுக்கு ஆட்பட்டு வந்திருக்கின்ற சமுதாயத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆளும் வர்க்கத்தை அல்லது ஆளும் வர்க்கம் கொண்டுள்ள சட்டங்களை, நியதிகளை, ஒழுக்க முறைகளை எதிர்ப்பவர்கள் அல்லது மீறுபவர்கள் அடக்கப்படுகின்றனர்; ஒடுக்கப்படுகின்றனர்.

சாதிய அமைப்பை எதிர்த்து மனித நேயத்தை விரும்புவோரும், காதல் வெளிப்பாட்டுடன் கலப்புத் திருமணத்தை விரும்புவோரும் மாறுதலை விரும்பாத ஆதிக்கச் சாதியினரால் அழித்தொழிக்கப்படுகின்றனர்.

சமுதாயக் கட்டமைப்பில் தாழ்ந்த சாதியில் இருப்போர் பெறும் சமூக மதிப்பை அழிக்க அவர்களையே அழிக்கும் செயல்களும் நடைபெறுகின்றன. இவ்வாறு சமுதாயத்தின் உயர் வர்க்கத்தை, அவ்வர்க்கம் கொண்டுள்ள சட்டங்கள், நியதிகள், ஆணைகள், சிந்தனைகளை எதிர்ப்போர் அல்லது மீறுவோர் சமுதாய விரோதிகளாகக் கருதப்படுவதும் அழிக்கப்படுவதும் நடைமுறையாக உள்ளது. இத்தகையோர் நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் வீரர்களாகப் போற்றப்படுகின்றனர். உயர்ந்த நோக்கத்திற்காக உயிர் நீத்தவர்களை வீரர்களாகப் போற்றிப் பாடப்பட்ட பாடல்களே நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஆகும்.

அண்ணன்மாரே! தம்பிமாரே!
அருமையுள்ள அய்யாமாரே!
மன்னன் மணிக்குறவன்
மாண்ட கதையைச் சொல்லிவாரேன்!

என்றவாறு மணிக்குறவன் கதையும்,

'தென்பாண்டி வீரசிங்கம்
சேது முத்துராமலிங்கம்'

என்றவாறு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கதையும் கதைப்பாடல்களாகப் பாடப்படுகின்றன. இவ்விரு கதைப்பாடல்களும் நாட்டுப்புறக் கலை நிகழ்வுகளில் குறவன்-குறத்தி வேடக்காரர்களால் இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

வாழ்ந்து செழித்தவர்கள், பிறர் வாழ்க்கைக்காகப் போராடியவர்கள், நாட்டுக்கு உழைத்தவர்கள், வீர வாழ்க்கை வாழ்ந்து மடிந்தவர்கள் போன்றோரின் வரலாறுகள் கதைப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன.

காத்தவராயன் கதை, கான்சாகிப் கதை, கள்ளழகர் கதை, அல்லி அரசாணி கதை, பூலித்தேவன் கதை, கோவலன்-கண்ணகி கதை, முத்துப்பட்டன் கதை, அழகுத்தேவன் கதை, மதுரைவீரன் கதை, கட்டபொம்மு கதை என்பன தமிழில் வழங்கி வரும் கதைப்பாடல்களுக்குச் சான்றுகளாகும்.

இவ்வாறு பத்துக்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் வழக்கிலிருந்தும் இவற்றில் மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கதை ஆகிய இரண்டுமே இன்றளவும் நாடகமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பது கருதுதற்குரியதாகும்.

இந்நூலாசிரியர் முனைவர் கே.ஏ. குணசேகரன், நடிகராக; நாடக ஆசிரியராக; நாட்டுப்புறப் பாடகராக; இசையமைப்பாளராகத் தமிழுலகிற்கு அறிமுகமானவர். நாடகப் பேராசிரியராகவும் இவர் விளங்குவதால் கதைகளிலிருந்து நாடகம் ஆக்கம் பெறுவதற்கான முறைமைகள் மற்றும் உத்தி முறைகளைக் கண்டறியும் நோக்கில் இந்நூலைப் படைத்துள்ளார்.

அம்மானை, ஒப்பாரி, கும்மி, கூத்து, நாடகம் என்றவாறு வெவ்வேறு வடிவங்களில் பத்துக்கும் மேற்பட்ட கதைகள் கதைப்பாடல்களாக வழக்கில் இருப்பினும், மதுரை வீரன், கட்டபொம்மு கதைகள் மட்டுமே நாடக வடிவம் பெற்றுள்ள சூழலில், இவ்விரு கதைகளும் நாடக ஆக்கம் பெற்றமைக்கான பொதுமை வினைகளைக் காணும் முயற்சி இந்நூலில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வெளிவந்திருக்க வேண்டிய இந்நூல் இப்பொழுது வெளிவருகிறது. இந்நூலை உருவாக்கித் தந்திருக்கின்ற பேரா. முனைவர் கே.ஏ. குணசேகரன் அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பில் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறுவனத்தின் வளர்ச்சியில் ஆர்வத்துடன் அக்கறை காட்டிவரும் நிறுவனத்தின் தலைவரும், தமிழக அரசின் கல்வி மற்றும் தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறையின் **மாண்புமிகு அமைச்சருமான முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் **செயலர் திரு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும் **கூடுதல் செயலர் திரு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலுக்கு ஒளியச்சுக்கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகிய முறையில் நூலை அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியும் வாழ்த்துகளும் உரியன.

**இயக்குநர்**

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| இயல் - 1 | 1 |
| இயல் - 2 | 50 |
| முடிவுரை | 73 |
| பின் இணைப்பு | 77 |
| தகவலாளர் விவரம் | 124 |
| துணை நூற்பட்டியல் | 125 |

# நன்றி

'நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்' எனும் இத்தலைப்பில் குறுகிய கால (1991 - 92) ஆய்வுத் திட்டத்தின் கீழ் ஆய்வு செய்ய அனுமதி தந்து நிதி உதவியும் தந்த எம் பல்கலைக்கழகமாம் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்திற்கும், ஆய்வுத் திட்டக் குழுவினருக்கும், அந்நாள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளி இயக்குனரும் பல்கலைக்கழக கலாச்சாரத் துறை இயக்குனருமான பேராசிரியர் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி அவர்களுக்கும் எனது மனங்கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்த ஆய்வு செய்யும் காலத்தில் ஆலோசனைகள் வழங்கியும் கலந்துரையாடல் செய்யும் போது அரிய கருத்துக் களையும் தந்து உதவிய விமர்சகர் பேராசிரியர் தோழர் அ. மார்க்ஸ் அவர்களுக்கும் பேராசிரியர் டாக்டர். சி. கனகசபாபதி அவர்களுக்கும் எனது நன்றிகள் என்றும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் எங்கோ உறங்கிக் கொண்டிருந்த இந்த நூலின் தட்டச்சுப்படியைத் தேடி எடுத்து நூலாக்கித் தந்திருக்கின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் இனிய நண்பர் முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி அவர்களுக்கு என் நன்றி.

கலைப்பணி செய்யத் துணை நின்றும், ஒலிப்பதிவு நாடாக்கள் வழியே எழுத்தாக்கம் செய்தும், தட்டச்சு பிரதிகள் எடுத்தும் உதவியுள்ள டாக்டர். ஜீவா, பிரதிகளை வாசித்து விமர்சனம் தந்து உதவியுள்ள நண்பர் பிரேம், துணைநூல் பட்டியல் தயார் செய்வதில் துணை நின்ற முனைவர் வ. ஆறுமுகம், தட்டச்சு மற்றும் நகலச்சு, அச்சுப்பிரதிகள் எடுப்பதில் பெரிதும் உதவியுள்ள எனது மைத்துனர் திரு. வாலசமுத்திரம், படம் வரைந்து உதவியுள்ள எனது மாணவர் வேலு சரவணன் ஆகியோர் உதவிகள் என்றும் என் நெஞ்சத்தே நன்றிக் கடன்களுடன் பதிந்துள்ளன.

விடிய விடிய நாடகம் நிகழ்த்திக் காட்டியும், வேடமிட்ட நிலையிலும் எழுப்பப்பட்ட பல்வேறு வினாக்களுக்கு விடையளித்து அரிய தகவல்களைத் தந்துதவிய நாடகக் கலைஞர், கூத்து கலைஞர், வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் ஆகியோருக்கு என்றும் என் நன்றிகள்.

தொடர்புடைய ஆய்வேடுகள், நூல்கள் ஆகியன தந்தும் எழுத்துப்படிகள் எடுக்கத் துணை செய்துள்ள எனது சகோதரி முனைவர் கே.ஏ. ஜோதிராணி அவர்களுக்கும், பல்வேறு வகைகளில் வழக்கம் போல் என்னுடன் துணைநின்று எனது ஆய்வுப் பணிகளுக்கு ஊக்கம் தரும் எனது துணைவியார் திருமதி. ரேவதி அவர்களுக்கும் எனது நன்றிகளை மரபு கருதி கூறிக்கொள்கிறேன்.

அன்பன்

கே.ஏ. குணசேகரன்

# முன்னுரை

உயர்ந்த நோக்கங்களுக்காக உயிர் நீத்தவர்கள் நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும், கதைகளிலும் வீரர்களாகப் போற்றப் படுகிறார்கள். பிறர் நன்மைக்காக நின்றமை, பணக்காரர்களோடு மோதியமை, ஜாதிக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடியமை, பெண்களின் நலனுக்காக நின்றமை, குடும்பத்தில் முதன்மைப் பங்கெடுத்து உயர்ந்த குணநலன் கொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் நின்றமை, நாட்டுப்பற்று கொண்டு தியாகம் செய்தமை இவை போன்ற கருத்துக்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு உயிர்நீத்தோர் நாட்டுப்புறங்களில் நாயகர்களாக மக்களால் போற்றப்படுகின்றனர்.

கதை கூறுவோர், கதைகேட்போர், இசைத்தன்மை, முன்பாட்டு, பின்பாட்டு போன்ற ரீதியிலும் கதை அல்லது கதைப்பாடல் நிகழ்வு அமையும். ஒரு கதை காலம், இனம், நோக்கம், இடம், தேவை ஆகியனவற்றின் அடிப்படையில் பல்வேறு கலை இலக்கிய வகைகளில் வெளிப்படலாம். கும்மி, அம்மானை, வில்லுப்பாட்டு, உடுக்கடிக்கதைப் பாடல், கூத்து எனும்படி ஒரு கதை பல கலை இலக்கிய வகைகளில் உருப்பெற வாய்ப்புண்டு.

காத்தவராயன் கதை, கள்ளழகர் கதை, அல்லி அரசாணி கதை, பூலுத்தேவர் கதை, கோவலன் கர்ணகி கதை, முத்துப்பட்டன் கதை, அழகுத்தேவன் கதை.* மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கதை என்பன பல்வேறு சூழல்களைச் சுமந்து வடிவங்கள் பல பெற்றுள்ளன. நடந்தவைகளையும், சொல்லப்பட்டு வரும் சம்பவங்களையும் நிகழ்த்திப் பார்க்க ஆசைப்பட்டதன் விளைவு, நிகழ்த்துக் கலை (Performing Arts) களின் உருவாக்கத்திற்கு அடிப்படையாயின. அசையாத சாமியை ஊர்வலம் விட்டுப் பார்த்து மகிழ்ச்சி கொள்வதும், உண்ணாத சாமிகளுக்குப் படையல் செய்து தாங்கள் உண்பதும் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கன.

இச்சூழலில் மதுரைவீரன் கதை, கட்டபொம்மு கதை இரண்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மதுரைவீரன் கதை, கட்டபொம்மு கதை இரண்டும் அரசர், அரண்மனை, நாடு, எதிரிகள் போன்றவற்றுடன் தொடர்புடையதா கின்றன. மேற்சொன்ன இரண்டும் தமிழகத்தில் மிகவும்

---

* பிரெஞ்சு நாட்டுத்தமிழ் ஆய்வாளர் முனைவர் உல்ரிக்நிக்லாஸ் அம்மையார் அவர்களால் பதிப்பிக்கப் பெற உள்ளது. இது மதுரை மாவட்டக் கள்ளர் சமூகத்தின் வீரத்தைப் பேசவந்ததாகும்.

செல்வாக்குப் பெற்றவை. மதுரைவீரன், மதுரை, திண்டுக்கல், கரூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி ஆகிய பகுதிகளில் போற்றப் படுகிறான். கட்டபொம்மு திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் தொடர்பு கொண்டவனான போதும் தமிழகமெங்கும் வீச்சு கொண்ட புகழ்வீரனாகவும், சுதந்திரப் போரில் மடிந்த தியாகியாகவும் போற்றப்படுகிறான். இரண்டு பேர்களுமே நாயக்கர் சமூகத்தவர்கள். எண்ணற்ற கதைகள் தமிழகத்தில் விளங்குகின்ற போதும் மதுரை வீரன், கட்டபொம்மு ஆகிய இருவரது கதைகள் மட்டுமே இன்று நாடகம், கதைப்பாடல், வில்லுப்பாட்டு, கும்மி, கூத்து எனப்பல வடிவங்களில் மக்களிடையே விளங்குகின்றன. மதுரைவீரன், கட்டபொம்மு இவ்விரண்டு கதைகளும் நாடகங்களாக இன்றளவும் பரவலாக நடத்தப் படுகின்றன.

**ஆய்வின் எல்லை:**

இந்த ஆய்வின் கால எல்லை ஓராண்டு ஆகும். அறுவடைக்காலங்களில் அதாவது, கோடைக்காலங்களில் தான் கிராமங்களில் கலை நிகழ்ச்சிகள் பரவலாய் நடக்கும். இந்த நாடகங்களையும் இக்காலங்களில் தான் காணமுடியும். ஆய்வாளர் சிறு வயது முதல் மேற்சொன்ன இரு நாடகங்களையும் கண்டு வந்தவராகையால் இதனை ஆய்வு செய்ய ஓராண்டுக் காலம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மதுரை, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள நாடக (தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் பெயரில் பரம்பரையாய் நடந்து வருவது) மன்றங்கள் வழியே நாடகங்கள் நடக்கும் இடங்களை அறிந்து இரு நாடகங்களையும் முறையே மூன்று தடவைகள் நேரில் கண்டு, (வெவ்வேறு நடிகர்கள் பங்கேற்று நடிக்கப் பெற்றவை) களப்பணி மேற்கொள்ளப்பட்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்:**

1. ஆய்வாளர் நாடகத் துறையில் பணிபுரிவதால் கதைகளிலிருந்து நாடகங்கள் ஆக்கம் செய்வதற்கான முறைமைகள், உத்தி முறைகள் ஆகியவற்றைக் கண்டறிவது தேவையாகிறது.

2. பல்வேறு கதைகள் விளங்கும் மண்ணில் ஒரு சில கதைகள் மட்டுமே நாடக வடிவம் பெறுகின்றன. எனவே, இதற்கான பொதுமை வினைகள் யாவை எனக்காணும் முயற்சி தேவையாகிறது.

**ஆய்வின் மூலாதாரங்கள்:**

மதுரை வீரன் நாடகம் நாடக ஆசிரியர் ஒருவரது கையெழுத்துப் பிரதி, நாடகக் கலைஞர்கள் பங்கேற்று நடித்த போது ஒலிப்பதிவு நாடாவழியே பெற்ற எழுத்துப் பிரதி, மற்றும் ஆங்காங்கு முன்னோடிக் களப் பணி (Pilot Research Field Work) மேற்கொண்டபோது பெற்ற கும்மிப்பாடல், ஒப்பாரி, கூத்துப்பாடல் ஆகியன மேலும் இவை தொடர்பான பதிப்பிக்கப்பெற்ற நூல்கள், ஆகியவை இந்த ஆய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாயின. கலைஞர்கள், தகவலாளிகள், நாடகமன்றத்தார் போன்றோரிடம் பெற்ற தரவுகள், தகவல்கள்* ஆகியவை துணை நிலைச் சான்றாதாரங்களாயின.

**கருதுகோள்கள்:**

1. நாட்டுப்புறக் கதைகளிலிருந்து நாட்டுப் புறங்களில் நாடகங்கள் செய்யப்பட்டுள்ளன. கி.பி. 17-18ஆம் நூற்றாண்டுகளில் இம்முயற்சி பெரிதும் கையாளப்பெற்றுள்ளது.

2. எழுதப்பட்டுள்ள நாடகங்களிலிருந்து மேடையில் நடிக்கப்படும் நாடகங்கள் வேறுபட்டுள்ளன.

3. ஒரு கதை கதைப்பாடல், கும்மி, அம்மானை, கூத்து, வில்லுப்பாட்டு என்பன போன்ற பல்வேறு கலை இலக்கிய வடிவங்களில் உருப்பெற்றுள்ளன. ஒவ்வொரு வடிவங்களும் சில நேரங்களில் ஒரே கதையினை அதனதன் நோக்கில் கருத்து வெளிப்பாடு செய்கின்றன.

நாட்டுப்புறக் கதைகள் பற்றிய ஆய்வும் நாடகங்கள் பற்றிய ஆய்வும் தனித்தனியே நிகழ்த்தப் பெற்றுள்ளன. நாட்டுப்புறக் கதைகளிலிருந்து நாடகங்கள் உருவாகும் விதம் குறித்து ஒருங்கிணைந்த ஆய்வு என்பது இங்கு முதன்முறையாக முயற்சிக்கப்படுகிறது.

**ஆய்வுக்கட்டமைப்பு:**

இந்த ஆய்வு இரண்டு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. நாட்டுப்புறக் கலை இலக்கிய வகைகளில் மதுரை வீரன், கட்டபொம்மு கதை பற்றிய கருத்து வெளிப்பாடுகள்.

---

* கையெழுத்துப்படிகள் தட்டச்சு செய்யப்பட்டு பின் இணைப்பில் உள்ளன.

2. மதுரை வீரன், கட்டபொம்மு கதைகளில் நாடகமாக்கிட அமைந்த பொதுமை வினைகள்.

முதல் இயலில் நாட்டுப்புறக் கதைகள், கும்மி, அம்மானை, வில்லுப்பாட்டு, உடுக்கடிக் கதைப்பாடல் போன்ற வெவ்வேறு வகைகள் எக்கருத்தினை முதன்மைப்படுத்தி வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளன என அறிந்து கொள்ளப்படுகின்றது.

இரண்டாவது இயலில், வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட கருத்தை மையமாய்க் கொண்டு வடிவங்கள் வேறுபட்டுள்ளன என்றும் நாடகவடிவம் பெற பொதுமை வினைகள் எவை நின்று செயல்பட்டுள்ளன என்றும் அறியப்படுகிறது. இதில் நாட்டுப்புறக் கதை இயக்கப் பொதுமை வினைகளும் நாட்டுப்புற மக்களின் உளவியல், வாழ்வியல் நிலைகளும் எனும் தலைப்பிலும், மதுரைவீரன், கட்டபொம்மு கதைகள்: நாடகத்தன்மைகள் எனும் தலைப்பிலும், 'நாட்டுப்புறக் கதைகளை மறுவாசிப்புச் செய்தலும் நாடக ஆக்கங்களாக்குவதும் பற்றிய சில குறிப்புக்கள் எனும் தலைப்பிலும் ஆக வீரன், பொம்மு கதைகளில் நாடகமாக்கிட அமைந்த பொதுமை வினைகள் ஆய்வு செய்யப்படுகிறது.

# இயல் — 1

# நாட்டுப்புறக் கலை இலக்கிய வகைகளில் மதுரை வீரன் - கட்டபொம்மு கதை பற்றிய கருத்து வெளிப்பாடுகள்

## 0.1 முன்னுரை

சமூகத்தின் அங்கமாக அமையும் பல்வேறு வர்க்கங்கள் அவற்றின் தேவைக்கேற்பக் கருத்துநிலைகளை வெளிப்படுத்த வேண்டி வெவ்வேறு படைப்புக்களைப் படைக்கின்றன. மதுரைவீரன் கதை, கட்டபொம்மு கதை இவ்விரண்டு கதைகளும் பல்வேறு கலை இலக்கிய வடிவங்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்றும் எக்கருத்தினை வெளிப்படுத்த அவ்வடிவங்கள் முனைகின்றன என்றும் இந்த இயலில் காணலாம்.

நாட்டுப்புறங்களில் மக்களின் கலை இலக்கிய வகைகள் எண்ணற்றனவாயிருக்கின்றன.[1] தாலாட்டுப் பாடல்களில் குடும்பநிலை, மாமன், தாய் உறவுமுறைகள் மற்றும் உறவு முறையாளர்களின் வழியே குழந்தையின் வாழ்க்கை, இயல்புநிலை, பின்னணி போன்றவை கற்பனைப் புனைவுடன் இயைந்து வெளிப்படக் காணலாம்.[2] ஒப்பாரிப் பாடல்களில் வாழ்ந்து முடிந்தவர்களின் வாழ்க்கைநிலை, உறவுமுறையாளர்களுக்கும், இச்சமூகத்தாருக்கும் அவர்(ள்) செய்த நல்லவைகள் முக்கியமாகப் பேசப்படும்.[3] கும்மிப் பாடல்களில் சிறுதெய்வங்களை முதன்மைப்படுத்தி வாழ்த்துதல், வேண்டுதல் போன்ற பாடல்கள் விளங்குவதை அவதானிக்க முடியும்.[4]

இப்படி எண்ணற்ற தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, ஏசல் பாடல், ஏற்றப் பாடல், மாரடிப்புப் பாடல் எனப் பல வகைகளில் பாடல் வடிவங்கள் நாட்டுப்புறங்களில் கிடைக்கின்றன.

---

1. மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும் எனும் நூல். அ. மார்க்ஸ் (அ) நவீனத்துவம் - படைப்பும் உத்தியும் எனும் கட்டுரை
2. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் எனும் நூலில் எண் 4 இல் உள்ள கட்டுரையில் 'உறவுமுறை' பற்றிய செய்திகள். பக்95-96
3. தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை, (ப.ஆ.) பக்.371-72, 501, 510-11 மாரடிப்புப் பாடல்கள் 590-5-30
4. நாட்டுப்புற ஆட்டப்பாடல்கள் (இராமநாதபுரம் மாவட்டம் - கிழக்கு) பதிபிக்கப் பெறாத பிஎச்.டி ஆய்வேடு, கே.ஏ.குணசேகரன், 1985, பின் இணைப்பில் உள்ள கும்மிப்பாடல்கள், 1-35

விடுகதைகள், பழமொழிகள், சொலவடைகள், கதைகள், கதைப்பாடல்கள், உடுக்கடிக் கதைப்பாடல், வில்லிசைப் பாடல், அம்மானைப் பாடல் எனப் பல்வேறு கலை இலக்கிய வடிவங்கள் நாட்டுப்புற மக்களால் படைக்கப்பட்டுள்ளன; படைக்கப்படுகின்றன.[5]

பாடல் வடிவமே தொடக்க காலத்தில் சூழும நிலையில் மக்களால் பெரிதும் உருவாக்கப்பட்டுள்ளன[6] என ஆய்வாளர்கள் கருதுவர். நாட்டுப்புறங்களில் விடுகதை போன்ற இவற்றைச் சொன்னாலுங்கூட இசைமைத்தன்மை இயைந்து வெளிப்படக் காண முடியும் என்பதை நாட்டுப்புற மக்களுடன் வாசம் புரிந்தவர்கள் ஏற்பர். மனதில் பட்ட கருத்தைப் பாடல் வடிவில் தருவதில் நாட்டுப்புற மக்களுக்குப் பாரம்பரியம் உண்டு. 'அழுதாலும் பாட்டு, தொழுதாலும் பாட்டு' எனும் முதுமொழியை இங்கு எண்ணிப்பார்க்கலாம். மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கதை ஆகியவை பாடல்கள் வழியே வெவ்வேறு வகைகளாகியுள்ளன என்பதை இந்தப் பின்னணியில் அறிந்து கொள்ள இயலும்.

## 1.0 மதுரை வீரன் கதை கொண்ட கலை இலக்கிய வகைகள்

1. மதுரை வீரன் சுவாமி கதை
2. மதுரை வீரன் அம்மானை
3. மதுரை வீரன் உடுக்கடிக் கதைப்பாடல்
4. மதுரை வீரன் கூத்து

## 1.1 கட்டபொம்மு கதை கொண்ட கலை இலக்கிய வகைகள்

1. கட்டபொம்மு கதைப்பாடல்
2. கட்டபொம்மு ஒப்பாரி
3. கட்டபொம்மு வில்லிசைப்பாடல்
4. கட்டபொம்மு கூத்து

ஆய்வாளருக்குக் கிடைத்த மேற்கண்ட நாட்டுப்புறக் கலை இலக்கிய வகைகள் பற்றி அறியும் முன் பொதுவான கலை இலக்கிய வகைகள் பற்றி அறிந்து கொள்வது அவசியம் எனலாம்.

## 1.2 கதையும் கலை இலக்கிய வகையும்

நாட்டுப் புறங்களில் விளங்கும் கதைகள் கதைப்பாடல் களாகவும், கும்மிப்பாடல்களாகவும், தெம்மாங்குப் பாடல்களாகவும், ஒப்பாரிப் பாடல்களாகவும், அம்மானைப்

---

5. பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை, டாக்டர் கோ. கேசவன் ப.37
6. Folk Community, Folk Society, Folklore, Folk ways, Dictionary of Sociology, William P. Scott. p.p.158-159

பாடல்களாகவும், நாடகங்களாகவும் பல்வேறு கலை இலக்கிய வகைகளில் விளங்குகின்றன.

தன்கதை கூறுவது போலவும், பாத்திரங்கள் வழிக் கதை விளக்கம் பெற்றுச் செல்வது போலவும், மக்கள் கூற்றுப் போலவும் கதைகளின் கருத்து நிலைகள் வெளிப்படுகின்றன. வர்க்க வேறுபாடுகள், சமூக முரண்பாடுகள், ஆட்சியாளர் தேவை என்பனவற்றின் வழியேயும் மேற்கண்ட வகைகள் உருவாகின்றன. கதைகள் வெளிப்படுத்தும் கருத்து நிலை என்பதை வெறும் கருத்துக்களின் தொகுதியாகக் காணக்கூடாது என்றும் மக்களை அவர்களது சமூக நடவடிக்கைகளுடன் இணைக்கும் கருத்துக்கள், விழுமியங்கள், படிமங்கள் ஆகியனவற்றின் முழுமையான தொகுதியாகவே கருத்து நிலையைக் காண வேண்டும் என்றும் கூறுவது[7] சிந்திக்கத்தக்கது.

ஒரு செய்தி ஒரு படைப்பாளனை அல்லது கலைஞனை எவ்விதம் பாதித்துள்ளதோ அப்பாதிப்பினை ஒட்டியே அவரது படைப்புக்களும் வெளிப்படும். அப்படைப்பானது வெளிப்படுத்தும் அவர் கொண்ட வாழ்வின் அனுபவத்துடனே அவரது உணர்வு, கல்வி, நோக்கம், யாருக்குச் சென்றடைய வேண்டும் எனும் நோக்கம், தலை முறைகளின் தொடர்ச்சியால் பெற்ற உள்வாங்கல்கள், சில விடுதல்கள், சில மாற்றங்கள், இலக்கிய வழி உற்பத்தி முறை, சமூகம் அவ்வக் காலகட்டங்களில் கற்றுக்கொண்ட பொதுக் கருத்தியல், சாதி, மதம், மொழி, இனம், வயது, அரசியல் ஈடுபாடு ஆகியவற்றைப் பொறுத்தது. மேற்சொன்ன கூறுகள் படைப்புக் கருத்தியலுடன் தொடர்புடையனவாகும்.[8]

நாட்டுப்புறக் கலை இலக்கிய வகைகள் சிலவற்றை அறிந்து கொள்ளலாம்.

---

7. மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும், அ. மார்க்ஸ், ப.115

8. 'படைப்புக் கருத்தியல் என்பது நிலவுகிற கலை இலக்கிய வடிவங்கள், பாரம்பரியங்கள், இலக்கியக் கோட்பாடுகள் விமரிசன முறைகள், விநியோக முறைகள் சராசரி வாழ்க்கை முறைகள் ஆகிய பல்வேறு அம்சங்களால் தீர்மானிக்கப் படுகின்றது.

மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும், அ.மார்க்ஸ், ப.137

### 1.2.1 கும்மி

கும்மி என்பது பெண்களாடும் ஆட்டம். அதில் ஒருவர் முன்பாட்டாளராகவும், பிறர் பின்பாட்டாளர்களாகவும் அமையப் பாடல் ஆடல் அமையும். இதில் சிந்தித்தலும், படைப்புச்செய்து வெளிப்படுத்தலும் பெண்களே என்பது எண்ணுதற்குரியது. பெண்கள் கூடி வெளிப்படுத்தல் என்பது இங்கு முக்கியமாகிறது. பெண்ணடிமைச் சமூகம் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் பெண்களின் படைப்பு என்பது தனித்துக் கவனிக்கக் கூடிய ஒன்றாகிறது. மகிழ்ச்சி, தேவை ஆகிய உணர்வு முக்கியமாய் அமையும் இதில் கூட்டுணர்வு கலந்திருக்கும்.[9]

மந்தை எனும் பொது இடத்தில் கருத்து வெளிப்படல், கும்மிப்பாட்டின் ஓர்மைத்தன்மையிலான இசை, பெரும்பாலும் இளம் வயதுப் பெண்கள் பங்குபெறல், பார்வையாளர் போன்றவை யாவும் கும்மியின் படைப்புக் கருத்தியல் வெளிப்பாட்டுடன் தொடர்புடையதாகின்றன. கும்மியில் கதைப் பாடல்கள் பொதிந்திருப்பதைச் சிவகங்கைக் கும்மி, கட்டபொம்மு கும்மி என ஒரு சிலவற்றில் மட்டும் காணமுடிகிறது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னரே கும்மியில் கதைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன போலும்.

### 1.2.2 ஒப்பாரி

கும்மிபோலவே ஒப்பாரி எனும் வகையும் பெண்களின் படைப்பாக அமைகிறது. பெண்களின் அவலம், அல்லல் இயலாமை, பாசம், உறவு, இழப்பு என்பன போன்றவற்றின் வடிகாலாக ஒப்பாரி வெளிப்படக் காணலாம். ஆண்கள் ஒப்பாரி பாடுவதில்லை. பெண்களுக்கே உரிய வடிவமாக இதனைக் காணலாம். ஒப்பாரியில் தனி நபர் உணர்வு வெளிப்படும். தன்னிலை சுட்டுவதாக அமையும்[10] ஒப்பாரி இசை ஓரியல்புத் தன்மை கொண்டதாகும்.

---

9. மு.பா: மாரியாத்தா கோயிலுக்கு
பி.பா: கோயிலுக்கு
மு.பா: நாங்க மகிமையுடன் பாடவந்தோம்
பி.பா: பாடவந்தோம் (கும்மிப்பாடல்)

10. உருண்டமலையோரத்திலே
உளுந்து காயப் போட்டிருந்தேன் - அந்த
உளுந்தக்கூட்டி அள்ளுமுன்னே - இந்தச்
சண்டாளச் சீமையிலே இன்னக்கி
உறுமிச் சத்தந்தான் கேட்டதென்ன.
ம். ம்கூம். ம்கூம். ம். ம்.

சொத்துரிமையற்ற பெண்கள் உறவுகளையே பெரிதும் ஆல விழுதுகளாகக் கொண்டுள்ளனர். எனவே, இழப்பு அவர்களைப் பெரிதும் வருத்துகிறது. பெரும்பாலும் சம்பவங்கள், சிற்சில நிகழ்வுகள் மட்டுமே ஒப்பாரியில் பாடுபொருளாய் அமையக் காணலாம்.

என்ன பெத்த அம்மா / அப்பா /

என்ன வளத்த மாமா / அத்தே / அய்யா / சாமி

என ஒப்பாரியில் உறவு முறை விளிச்சொற்கள் நிறைந்து காணப்படுகின்றன. வெகுசன ஊடகங்களில் இதனை இன்று நாம் கேட்பது அரிது.[11]

ஒப்பாரி இசைப்பாடல்களை வெகுசன ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி போன்றவை ஒலிபரப்புவதில்லை காரணம் மக்களின் துயரங்கள் மட்டுமே ஒப்பாரியில் பேசக் காண முடியும் என்பதாகும்.

### 1.2.3 அம்மானை

அம்மானை என்பது இளம் பெண்கள் விளையாடும் ஒருவித விளையாட்டாகும். இவ்விளையாட்டின் போது பாடப்படும் பாடல் அம்மானைப் பாடல் ஆகும். இளம் பெண்கள் சிறு பந்து அல்லது சிறு கற்களைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடுவர். கல்லைத் தாமே உயரே தூக்கிப் போட்டு அக்கல் திரும்பத் தன் கைக்கு வரும் கால அளவு வரை பாடல் பாடிக்கொண்டே கீழே விழுந்திடாது பிடித்து மீண்டும் அடுத்த கல்லினைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடுவர். கல் கீழே விழும் போது அடுத்த நபர் விளையாட முன்வருவர். கழலாடுதல் என்றும் இதனைக் கூறுவர். நிகழ்ச்சிகளை அல்லது கதைகளைத் தொடர்ந்து இசையுடன் பாடி ஆடும் விளையாட்டு அம்மானையாகும். விளையாட்டுப் பாடல்கள், ஆட்டப்பாடல்கள் காலப்போக்கில் இலக்கிய வடிவம் பெற்றன. நாட்டுப்புற விளையாட்டுப் பாணியிலிருந்து உதிர்ந்தது அம்மானை வகையாகும். இதில் பாடல்கள் சிறிய அடிகள் கொண்டமையும். காரணம், அம்மானை விளையாட்டின் கால அளவு குறைவானதாகும். தொடர்ச்சியான

---

11. காண்க : பின் இணைப்பில் உள்ள கட்டபொம்மு ஒப்பாரி

கதை கொண்டமையும் படியான அம்மானைப் பாடல்கள் கி.பி.17, 18 - ஆம் நூற்றாண்டு வாக்கில் உருப்பெற்றுள்ளன எனலாம்.

மேற்கண்ட கும்மி, ஒப்பாரி, அம்மானை இம்மூன்று வடிவங்களும் பெண்கள் ஈடுபாடு கொண்டமைந்த படைப்புக்கள் ஆகும். இன்றளவும் கதைப் பாடல்களைப் பெரும்பாலும் பெண்களிடமே பெறமுடிகிறது.

## 1.2.4 உடுக்கடிக் கதைப்பாடல்

புராணங்களில் உள்ள கதைகளை எடுத்தும், நடப்புச் செய்திகளை எடுத்தும் புனைந்துரைத்துக் கதை செய்வது இயல்பு. புனைந்த கதைகள் மக்களுக்கு நீதி, சமயம், மொழி, பாலியல் போன்ற பல்வேறு செய்திகளைக் கூற அக்காலத்தில் இப்புனைகதைகளே / வாய்மொழிக் கதைகளே பெரிதும் துணைநின்றன. பாட்டுக் கட்டுதல் என்று வழங்கப்படும் பாடல் கட்டுதல் வழியே நமது கதைகள், கருத்துக்கள் பரவின.

கைவிரல்களால் மெல்லிய தோல்கொண்ட இருபுற முழவு வகையைச் சேர்ந்த உடுக்கினை இசைக்க அதன் இசையினைத் துணையாகக் கொண்டே கதைகளைப் பாடிச் சொல்லி வருதலை நாட்டுப்புறங்களில் பரவலாக இன்றும் காணமுடிகிறது.

உடுக்கடிக்காரர்கள் பெரும்பாலும் பாடும் குரல்வளம் கொண்டு கதை புனைந்துரைக்கும் திறனும், பாடிக் கொண்டே உடுக்கினை இசைக்கும் திறனும், கதையைப் புனைந்து செல்லும் போது பாடல், வசனம், பின்பாட்டாளர் துணை போன்றவற்றைப் பயன்படுத்திச் செல்லும் பாங்கும் கொண்டவர்கள். பூசாரி எனும் நிலையைஅவ்வூரில் பெற்றிருப்பதோடு (இது பெரும்பாலானது) கூடவே மருத்துவ ஆலோசனைகள் கூறும் மருத்துவராகப் பணியாற்றும் நிலைகளையும் அவர் கொண்டிருக்கக் காண முடிகிறது.[12]

உடுக்கடிக் கதைப்பாடல்களில் பெரும்பாலும் கதைசொல்லிகள் 'சாமி' நிலை பெறுவதுண்டு அல்லது மனிதசக்திக்கு மேலான சக்தி பெற்றவராக அமைவதுண்டு. உடுக்கடிக் கதைப்பாடல் பெரும்பாலும் இரவு நேரங்களில் சிறு கூட்டத்தாரிடையே நிகழ்த்தப் பெறுவதாகும்.

---

12 குறி சொல்லுதல், பேய் விரட்டுதல், வைத்தியம் செய்தல், சிறு ஊராயின் அவ்வூர்ப் பூசாரியாக இருந்து கோவில் சடங்குகள் செய்தல் இவரது பணிகள் ஆகும்.

காத்தவராயன் கதை, நல்லதங்காள் கதை போன்ற கதைகளைப் பாடிச் செல்லும் இவர்கள் ஒரு கதையைப் பல இரவுகள் தொடர்ந்து பகுதி பகுதிகளாகக் கூறும் வல்லமைபடைத்தவர்களாவர். ஊரார் சில வேளைகளில் இவர்களுக்குக் காணிக்கை செலுத்துவதோடு கடைசி நாள் கதையில் மங்கலம் நிகழ்த்தும் போது பரிசில்களும் வழங்குவதுண்டு.

இன்று உடுக்கடிக்கதைப்பாடல் பாடுவோர் சடங்கு முறையிலிருந்து மாறி தொழில் முறையில் கதை சொல்வதைப் பல இடங்களில் காண முடிகிறது. வழிப்பாட்டின் போது தெய்வம் வருவிக்கப் பாடுவதால் இதனை வரத்துப் பாட்டு என்றும் சிலர் கூறுவர்.[13]

## 1.3.0 மதுரை வீரன் கதைச் சுருக்கம்

மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கதை இவ்விரண்டும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு கலை இலக்கிய வகைமைகளில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் கருத்து வெளிப்பாடுகளை அறிவது இங்கு நோக்கமாகிறது. மதுரை வீரன், கட்டபொம்மு கதைகள் கொண்டுள்ள கலை இலக்கிய வகைமைகளை அறிந்து அவை எக்கருத்தினை முதன்மைப்படுத்திக் காட்ட முனைகின்றன எனக் காணலாம்.

காசி நகர மன்னனுக்கு, மதுரை வீரன் மகனாகப் பிறக்கிறான். தன்னுடைய மகன் மாலைசுற்றி பிறந்தமையால், தீங்கு நேரும் எனக்கருதிய மன்னன், அவனைக் காட்டில் தனியே விட்டு விடுகின்றான். வீரனை, நாகமொன்று குடைபிடித்துக் காத்து வருகிறது. ஆவாரம் பட்டையை வெட்டுவதற்காகக் காட்டிற்கு வந்த, மாதிகனின் மனைவி குழந்தையைக் கண்டு தன் வீட்டிற்குக் கொண்டு சென்று அருமையாக வளர்த்து வருகிறாள்.

மாதிகனும், அவன் மனைவியும் வடக்கே இருந்து புறப்பட்டுத் தெற்கே வந்து பொம்மணன் நாட்டில் வாழ்கின்றனர். பொம்மணனிடம் காவல் பொறுப்பு ஏற்கிறான் மாதிகன். வாலிபனான வீரன், தன் மகளைச் சிறையெடுத்துச் சென்றதை அறிந்து புறப்பட்டு வந்த பொம்மணன் வீரனோடு போரிட்டு மடிகிறான்.

---

13 மதுரை வீரன் கதை - ஓர் அறிமுகம், ந. நீலமோகன், 21 வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-3 இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1989. ப. 535

திருச்சி மன்னனான விஜயரங்க நாயக்கரிடம் வீரன் காவல் பொறுப்பு ஏற்கிறான். இந்நிலையில் திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கு இணங்க, கள்வர் கூட்டத்தை ஒழிப்பதற்கு மதுரை வீரனை விஜயரங்க நாயக்கன் மதுரைக்கு அனுப்பி வைக்கிறான்.

திருமலை நாயக்கரின் வரவேற்பில் மகிழ்வடைந்த வீரன், கள்வர் கூட்டத்தை ஒழித்துக் கட்டுகிறான். மதுரையில் இருந்த மன்னன் மகள் வெள்ளையம்மாளைச் சிறையெடுக்க முயற்சி செய்து, நகர்வலம் வந்த காவலரால் பிடிபட்டு, மாறுகால் மாறுகை வாங்கப் படுகிறான். பின் மீனாட்சியம்மன் அருள் பெற்று, அம்மன் கோவிலுக்கு முன் கம்பத்தடியில் நின்று தலைகொடுத்து முதல் மாலையும், முதற் பூசையும் பெற வரம் பெற்று, முடிவில் வீரன் தெய்மாகிறான்.

இனி, கலை இலக்கிய வகைகளில் மதுரைவீரன் சுவாமி கதையை அறியலாம்.

### 1.3.1 மதுரை வீரன் சுவாமி கதை*

உயர்காசி நகராளு வோன்
உலகமகிழ்ந் திடமதலை யாயுதித் தாயன்று
வொலகு காட்டில் வைகியே
கனாலாதரவு பெற்றபின் புன்னாட்டி
லுறை மாதி கன மனையினில்
நில்லெனத் தோற்றியவனால் வீரனென்பெயர்
நிலையாகவே யடைந்தே
நிருபனாம் பொம்மணன் சீமையுற்றவனீன்ற
நேரிழை தனைக் கவர்ந்ததும்
நிறைபுகழ் பெறும்விஜய ரங்கனெனு மன்னனது
நீள் வாயல் காவல் செய்தும்
நிகரில்பல வளமெய்து மதுரையிற் கள்ளர்தமை
னெஞ்சங் கலங்க மோதி
வலனுயர்ந்தே நல்லகுண பூஷணங்கொ டிருமலை
நாய்க்க னிடமேவியே
மங்கைவெள்ளயம் மையைக் கண்டன்பு பூண்டவளை
மருவிடச் சிறை யெடுத்தும்

* தெலுங்கு வட்டார வழக்கு மொழிகளும் இயைந்து பாடல் விளங்குகின்றது

வதிதவழுமாடகச் சிகரகோ புரமதனில்
வளர்சொக்க நாதரருகில்
மன்னும்மீ னாஷியரு ளினையடைந் தேயும்பர்
வாழ்த்தி மலர்மாரி சொரிய.[14]

எனச் சுருக்கமாய் அமைந்த பாடல் கொண்டு மதுரை வீரசுவாமி கதை துவங்குகிறது. இடையிடையே படங்கள் கொண்டமைந்த இந்நூலில் காப்பு, வெண் செந்துறை, நாட்டுச் சிறப்பு, மழைவளம், நகரச்சிறப்பு 'சொல்லமைச்சர் சூழ்ந்து வரத் துளசி மகாராஜன் வல்ல முடிதரித்து மனு செங்கோல் கைபிடித்து' அமைந்த அரசிருக்கை, காசி நதியின் மகிமை, மூர்த்தி மகிமை, அரசன் முப்பத்திரண்டு அறம் செய்தல், மதுரைவீர சுவாமி உற்பத்தி,

'மாலை சுற்றித்தான் பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
சாலப் பெருங்குற்றந் தரணியோர் சொல்வார்கள்
கொடி சுற்றித்தான் பிறந்தால் குலத்துக்காகாதென்பார்'

என்பதனால் மதுரை வீரனை வனத்தில் விடச்சொன்னமை,

காட்டில் மகனைவிட்ட கடும்பாவி என்பாரே
தவமா தவமிருந்து தான்பிறந்த ரத்தினமே
அத்வானக் காட்டில் விட அரசர் மனங்கொண்டாரே

என அரசி புலம்ப, மன்னர் அவளைத் தேற்றி மதுரை வீரனைக் காட்டுக்குள் கொண்டு சென்று போட்டுவிட்டனர்.

மதுரை வீரனுக்கு நாகம் உதவி செய்தது. மதுரை வீரனைச் சக்கிலிச்சி கண்டெடுக்கிறாள்.

வீட்டிலே தான்வந்து மெல்லியுடன் சின்னானும்
சக்கிலிச்சி கையில் தன்னயன்றனைக் கொடுத்து
-----------------------------------------

தங்கக் கொலுசு செய்து தான்பூட்டித் தச்சனாரு செய்து மதுரைவீரனுக்கு தாலாட்டுச் செய்கின்றனர்.

கானகத்தில் நீயும் கவிழ்ந்து விளையாட
நானகத்தெடுத்து வந்த நாயகமே கண்வளராய்
எந்தனுக்குப் பிள்ளையென்று ஈஸ்வரனார்தந்த கண்ணே

எனப்பாடல் அமைகிறது.

---

14 மதுரை வீரசுவாமி கதை, ஸ்ரீமகள் கம்பெனி சென்னை, 1991 (புகழேந்திப் புலவர் இயற்றியது)

மதுரை வீரனுக்குக் காது குத்துதல், மதுரைவீரன் சக்கிலியன் வீட்டில் வளருவதைக் காசி ராஜாவுக்குத் தெரிவித்தல், மாதிகச் சின்னான் பொம்மண நாயக்கனிடத்தில் சேவகனாய் அமர்தல், மதுரை வீரன் பராக்கிரமம், தொட்டியன் மகள் ருதுவானவிடத்தில் மதுரைவீரன் காவலிருந்தது, மதுரை வீரன் பொம்மியம்மாளிடம் சேருதல்,

கன்னிகழியாமல் கல்யாணஞ்செய்யாமல்
சக்கியன் கற்பழிக்கத் தலையெழுதினானோ

எனப் பொம்மியம்மாள் புலம்பிட

காசிராஜன் பெற்ற கருத்துள்ள வீரனடி
மகிமை தெரியாமல் மயங்குகிறாய் பெண்மயிலே

என அவளுக்கு மதுரை வீரன் ஆறுதல் கூறுகிறான். பொம்மியம்மாளுக்குப் பொருந்தாச் சடங்கு செய்ய தந்தை பொம்மணன் கூட்டத்துடனே குடிசைக்குத் தான்வந்து, குடிசை பிடுங்கிக் கொளுத்திவிட்ட பிற்பாடு.

மார்பில் பதக்கம் வகையுடனே தானணிந்து
கடகள் சரிபவளம் கைவளையல் தானணிந்து
பத்து விரலுக்கும் பசும் பொன்னாள் காலாழி

என அணிகலன்கள் இட்டு அலங்கரிப்புச் சடங்கு செய்கின்றான்.

இத்துடனே கூட ஏற்ற கறிவகைகள் பந்தி
பரிமாரி பாங்காய் விசாரித்து

என விருந்தமைகிறது. இந்நேரம் மதுரைவீரன் ஈயைப்போல் வடிவெடுத்து, பொம்மியைச் சிறையெடுத்து, திருச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டான். மகளை இழந்த பொம்மணன் படையெடுக்கிறான். மதுரை வீரன் சண்டைக்குப் போய் 'உன் தகப்பனும் ஒக்கமடிந்தானடி' எனத் தன் மனைவியிடம் கூற, பொம்மி தந்தையை இழந்து புலம்பிடத் தேற்றுகிறான். இருவரும் நீத்தார் கடன் செய்கின்றனர். மதுரை வீரன் விஜயரங்கனிடம் சம்பளத்துக்குப் போய் பணியாற்றுகிறான். பின்னர், மதுரையிலிருந்து கள்ளர்களை ஒடுக்க வேண்டி வீரன் ஒருவன் வேண்டும் எனக் கடிதம் விஜயரங்கனுக்கு வருகிறது. அதன் பொருட்டு மதுரைவீரன் படைவீரர்களுடன் கள்ளர்களை ஒடுக்கிட மதுரைக்கு அனுப்பி வைக்கப்படுகிறான். மதுரை வீரன் பொம்மியுடன், மணப்பாறை, நத்தம் வழியே பாளையப்பட்டு மன்னர்களால் செல்லும் வழிநெடுக வரவேற்புப் பெறுகிறான். பின்னர் மதுரை சென்றடைகிறான்.

திருமலை நாயக்கன் வரவேற்பு அளிக்கிறான். மதுரைவீரன் கள்ளர்களை அழிக்கிறான். அவன் பாராட்டுப் பெறும் போது வெள்ளையம்மாள் எனும் மதுரை மன்னன் மகள் மீது மோகம் கொள்கிறான். அவளை வீரன் சிறையெடுத்துச் செல்லும் வேளையில் பிடிபடுகிறான். திருடன் என மன்னனுக்குத் தெரிவிக்க மன்னன் மாறுகை மாறுகால் வாங்க ஆணையிடுகிறான். அதன்படி மதுரைவீரன் மாறுகை மாறுகால் வாங்கப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான். பொம்மியும் வெள்ளையம்மாளும் தீக்குளிக்கின்றனர்.

மன்னன் வருந்துகிறான். மதுரை மீனாட்சி கோயில் வாசலில் மதுரை வீரன் தெய்வமாய்க் குடியிருந்து கன்னிகைப் பெண்கள் கண்ணுரங்கும் வேளையில் கன்னியர் அருகில் வந்து காளை முத்து வீரன் அபயம் தருகிறான் என மதுரை வீர சுவாமி கதை நிறைவுறுகிறது.

## 1.3.1.1 மதுரை வீரசுவாமி கதை கருத்து வெளிப்பாடு

இக்கதையில் இடம் பெற்றுள்ள நிகழ்வுகளை அறிந்து கொள்ளின் அதன் வழியே எந்நிகழ்வு இங்கு அழுத்தம் பெற்றுள்ளது என அறியலாம்.

குழந்தைப் பேறு இல்லாதவளை மலடி எனச் சமூகம் பலித்தது. மங்கலக் காரியங்களில் அவள் முன்னிற்க முடியாது. பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள பெரும்பாவம் என அக்காலத்தில் பிள்ளையில்லாதவர்களுக்கிருந்தது. நாட்டுப்புறங்களில் இது பெரிதும் நம்பிக்கையாக வழக்கிலிருந்தது. இது இன்றளவும் இருந்து வருகிறது. காசி ம்ன்னன் மனைவி பிள்ளைப் பெற்றாதவளாய் உள்ளாள். பிள்ளைக்காய் அரசன் 32 அறங்கள் செய்வது கூறப்படுகிறது. பின் குழந்தை பிறக்கிறது. தவமாய்ப் பிறந்த குழந்தை கொடிசுற்றிப் பிறந்துள்ளதால் குலத்துக்காகாது எனக் காட்டில் விடப்படுகிறது. அரசி புலம்பல், காட்டிலே குழந்தையைப் பாம்பு காத்தல், குழந்தை சக்கிலியக் குடும்பத்தாரால் கண்டெடுக்கப்படுதல் என நிகழ்வுகள் அமைகின்றன. தாலாட்டு, காதுகுத்துச் சடங்கு செய்தல், வளர்தல், அரசன் மகள் ருதுவான இடத்தில் காவலிருக்கும் போது அவளை மதுரை வீரன் காதல் கொள்ளல், பின் அரண்மனையிலிருந்து சிறையெடுத்தல், அரசன் பொம்மணன் படையெடுத்தல், சண்டையில் மன்னன் மடிதல், மன்னனுக்கு நீத்தார்

கடன் செய்தல், திருச்சி அரசனிடம் வேலைக்கு இருத்தல், மதுரைக்குக் கள்ளர்களை ஒழிக்க மன்னனால் வீரன் அனுப்பி வைக்கப்படுதல், செல்லும் வழிகளில் விருந்து நடைபெறல், மதுரை சென்று கள்ளர்களை ஒடுக்கிப் பாராட்டுப் பெறுதல், மதுரை நாயக்கர் மன்னர் மகள் வெள்ளையம்மாள் மீது காதல் கொள்ளுதல், அவளைச் சிறையெடுத்துச் செல்கையில் பிடிபடுதல், தண்டனைபெற்று மடிதல், பொம்பி, வெள்ளையம்மாள் இருவரும் தீக்குளித்தல், அரசன் வருந்துதல், மதுரைவீரன் தெய்வமாகிக் கன்னிகளுக்குக் காவல் தெய்வமாதல் என மதுரை வீரசுவாமி கதையில் நிகழ்வுகள் அமைகின்றன.

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பலவும் கொலை, தற்கொலையில் முடியும்படியாகவே அமைந்துள்ளன. மேலும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் பல இறப்பிற்குப் பின்னர் இறந்த கதைத் தலைவனைக் கடவுள் நிலைக்கு எடுத்துச் சென்றன. (தமிழில் கொலைச்சிந்து. அரு. மருததுரை. ப.22) அவச்சாவு கொண்டவர்கள் பெண்களை ஆவி வடிவில் வந்து பேய் பிடிப்பதாக நாட்டுப்புறங்களில் நம்பப்படுகிறது. (காண்க. 'பேயாட்டம்', கட்டுரை, நாட்டுப்புற மண்ணும் மக்களும் பக். 125-132. டாக்டர் கே.ஏ குணசேகரன்) மேற்சொன்ன கருத்துப்படி மதுரை வீரன் கொலையுண்ட பின் தெய்வ நிலை பெறுகிறான்.

மேல்ச்சாதியில் பிறந்த ஒருவன் தாழ்ந்த குடியில் வளர்கிறான். சாதி மீறிய கதலுக்காகக் கொலை செய்யப்படுகிறான். சமூக யதார்த்தமான வீரர் வழிபாடு கதைப்பாடலில் அமைகிறது.[15] மதுரை வீர சுவாமி கதை 'மதுரை வீரனை' ஒரு வீரனாகவும், தெய்வ நிலைக்கு உரியவனாகவும் காட்டியுள்ளது. இந்நூலின் அதாவது இக்கதைப்பாடலின் பெயருக்கேற்ப மதுரை வீரன் சுவாமி எனும் நிலை பெற்றதாக 'மதுரை வீர சுவாமி' கதை அமைகிறது.

### 1.3.2 மதுரை வீரன் அம்மானை

இரண்டாயிரத்து இருநூற்று முப்பத்தேழு (2237) அடிகள் கொண்டமைந்த மதுரை வீரன் அம்மானை கடவுள் வாழ்த்து,

---

15 'ஆரிச்சன், சப்பாணி வீரன், ஈனமுத்து, வண்ணக்கருப்பன், காத்தவராயன் போன்றவர்களுடைய கதைப்பாடல்கள் இங்கு வீரர் வழிபாடு எனும் முறையில் கதைப்பாடல்களில் அமைந்துள்ளன. காண்க. பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, ஆ. சிவசுப்பிரமணியன் நியூ செஞ்சுரிபுக் 'ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 1989

காசிநகரச் சிறப்பு, மதுரை வீரன் பிறப்பு, காசி மன்னன் தன் மகனைக் காட்டில் விடச் செய்தல், சக்கிலிய வகுப்பினனான மாதியன் வீட்டில் வீரய்யன் வளர்தல், காசிமன்னன் மகனான வீரய்யன் மாதியான் எனும் சின்னான் வளர்ப்பில் காளைப்பருவம் எய்துதல், பொம்மைநாயக்கர் மன்னன் மகள் பொம்மியம்மாள் தனிக்குடிலில் காக்கப்படுதல், வழக்கப்படி காவல் செய்யக் கடமைப்பட்ட சக்கிலியக் குலத்தவருள் ஒருவனான மாதியான் செல்லல், தொடர்ந்து பொம்மியுள்ள தனிக்குடிசைக் காவலுக்கு வீரைய்யன் செல்லுதல், மழை பொழியும் வேளைவர வீரையன் பொம்மி ஆகியோரது சந்திப்பும் உரையாடலும் அமைதல், வீரய்யனும் பொம்மியும் இன்புற்றிருத்தல், வீரன் பொம்மிக்குத் தான் காசிராஜன் மகன் எனத் தன்வரலாறு கூறுதல், பூப்புச்சடங்கு அமைதல், பொம்மி தன் மாளிகையில் புகுதல், பொம்மணன் விருந்து இடுதல், வீரன் பொம்மியைச் சிறையெடுத்துச் செல்லுதல், பொம்மணன் மதுரை வீரனைப் பிடிக்கத் தொடருதல், வீரனாகப் பொம்மணன் மடிதல், விஜயரங்கனிடம் வீரன் காவல் பொறுப்பு ஏற்றல், வீரன் மதுரைக்குப் பயணமாதல், வீரன் மதுரையை அடைதல், திருமலை நாயக்கர் மதுரை வீரனை வரவேற்றல், மதுரை வீரன் கள்வரை அழித்தல், மதுரைவீரன் வெள்ளையம்மாளை விரும்பிச் சிறையெடுத்தல், சேவகர் மதுரை வீரனை மாறுகால் மாறுகை வாங்குதல், பொம்மி புலம்புதல், வெள்ளையம்மாள் புலம்புதல், திருமலை நாயக்கர் வருந்துதல், பொம்மியும் வெள்ளையம்மாளும் தீக்குழியில் இறங்குதல், மதுரைவீரனுக்கு மீனாட்சிவரம் அளித்தல், மதுரைவீரன் முதற்பூசை கொள்ளுதல், மதுரைவீரன் திருச்சிக்குப் புறப்படுதல், மதுரைவீரன் வரங்கொடுத்தல், வாழ்த்து என மதுரைவீரன் அம்மானையில் காணமுடிகிறது.

> **கஞ்சாவுடன் சாராயம் கொண்டுவந்து தான் படைத்துக்**
> **கரும்புகளும் சாராயம் கன்றுடனே தேங்காயும்**
> **ஆடுபன்றி கோழியும் அன்பாகத் தான்கொடுத்துப்**
> **பூசை நடத்திப் பூம்பாளை தான் விரித்துச்**
> . . . . . . .    . . . . . .    . . . . . . .    . . . . . . .
> . . . . . . .    . . . . . . . . . . . . . .    . . . . . . .
> **அண்ணாகயிறு கட்டும் ஆண்பிள்ளைகள் எல்லோரும்**
> **சேனைபடை மன்னா சீக்கிரமாய் வந்துநின்று**
> **வினைதீர்க்க வேணுமய்யா விருதுபெற்ற வீரையனே**
>
> (2115 - 2124)

நலமுடனே வீரையனும் நடந்தான் காண் அம்மானை

கச்சித் திருமலையான் கனத்த கொளுவதினிலே
திறமான தூதுவர்கள் செப்பலுற்றார் அம்மானை (1637)

கோட்டை தனிலேறிக் குதித்தான் காண் அம்மானை (1676)

என ஆங்காங்கே அம்மானை எனச் சொல் இடம் பெறக் காணமுடிகிறது

## 1.3.2.1 மதுரை வீரன் அம்மானை – கருத்து வெளிப்பாடு

மதுரை வீரன் பொம்மியைச் சிறையெடுத்தல்; எவ்வளவு எதிர்ப்புக்கள் வரினும் காதலித்தவளை, நம்பியவளை மணமுடித்தல் எனும் கருத்து இதில் வலியுறுத்தப்படுகிறது.

இதுபோல் பெற்றோரிடமிருந்தும், சமூகத்தாரிடமிருந்தும் எதிர்ப்புக்கள் வரினும், சாதிய ரீதியில் குறைந்தவனாக இருப்பினும் காதலித்தவனோடு வாழ்க்கை வாழ்ந்தாக வேண்டும் எனும் கருத்து பொம்மி வழியே காட்டப்படுகிறது.

மதுரை வீரன் காசிமன்னன் மகனாயிருந்தும் சமூகத்தாரால் அங்கீகரிக்கப்படாத காரணத்தால் தம் புதல்வியைச் சக்கிலியச் சமூகத்தில் வளர்ந்த மதுரை வீரனுக்கு மணம் முடிக்க பொம்மணன் மறுக்கிறான்.

ஆண் பிள்ளைகளுக்கும் (2115.2124) (இளையோர்) வீரன் காப்பாளன் இளைய பெண்களுக்கும் வீரன் காப்பாளன் எனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. ஆண் பெண் காதலுறவு, கல்யாணம் நடத்தல் போன்ற உறவு முறையினை மதுரை வீரன் அம்மானை குறிப்பாக வலியுறுத்தக் காணமுடிகிறது.

## 1.3.3 மதுரை வீரசுவாமி உற்பத்தி பூசாரிப் பாட்டு*

இது கடவுள் வாழ்த்துடன் தொடங்கிறது. கணேசர் விருத்தம், கணேசர் சரஸ்வதிதுதிப் பாடல், முருகர், பெருமாள்,

* மதுரை வீரசுவாமி உற்பத்தி பூசாரிப் பாட்டு - ஆர்.ஜி.கம்பெனி சென்னை. ஆண்டு காணப்படவில்லை (உடுக்கடிக்கதைப் பாடல்) பூசாரிமார்கள் கோவில் வாசலில் உடுக்கு எனும் இருபுற தோலிசைக் கருவி கொண்டு தானே இசைத்தும், கதைசொல்லியும், பாடல்பாடியும் பார்வையாளர் முன் வெளிப்படுத்துவர்.

வீரமாங்காளி, மீனாட்சி ஆகிய தெய்வங்களின் துதிப்பாடல்கள் அமைய மதுரைவீர சுவாமி உற்பத்திப் பூசாரி கதைப் பாடல் தொடங்குகிறது.

அடுத்துள்ள விருத்தப் பாடல் கதைச் சுருக்கத்தைக் கூறுகிறது.

'குருதியானம்' எனத் தொடர்ந்து குருவணக்கப் பாடல் தொடங்குகிறது.

பின்னர் 'சபை வணக்கப்' பாடல் அமைகிறது. கதைப் பாடல் தொடர்ந்து இறுதியில் கதை முடிவுப் பாடலில் தெய்வங்களையும், மக்களையும், கதைபடித்தோரையும் கதை கேட்போரையும் வாழ்த்தி முடிப்பதாய் இது விளங்குகிறது.

உடுக்கு கொண்டு இயக்கிய நிலையில் பூசாரி பாடும் இதில் நையாண்டி, கும்மி, ஏலேலோ போன்ற தொழிற்களப் பாடலிசை, சுடலைத் தெய்வ வணக்கப் பாடலிசை போன்ற சந்தங்களில் நாட்டுப்புற இசை வடிவங்களையும், சொற்களையும் கொண்டு மதுரை வீரசுவாமி உற்பத்திப் பூசாரிப் பாடல் அமைகிறது.

உடுக்கடிக் கதைப் பாடல் கிராமங்களில் தெய்வங்களின் தளங்களில் விடிய விடிய பாடக் கேட்கலாம். சுற்றியிருந்து கதைகேட்போர் அமைய இக்கதைப் பாடல் நிகழ்வு அமையும்.

மன்னன் மனைவி பூமாயி குழந்தை பெறுவது குறித்து கனவு காணல் :

நடுசாம வேளையிலே நாதனந்த சிவபெருமான்
நற்கனியளித்தாரோ நங்கையந்த பூமாயிக்கு
பிள்ளை வரம் தந்தேனென்று பிஞ்சகனார் தந்தாராம்
வாங்கிவுண்ட பாவனை போல் வடிவழகி பூமாயிக்கு
சொர்ப்பணம் கண்டவள் தான் சொக்கி எழுந்தாளாம் (27)

சிவபெருமான் கனிகொடுக்க அதனை உண்டதன்பின் பிள்ளைபிறந்ததாகக் காட்டுவது சிவபெருமான் கனி - பிள்ளையார் - முருகன் திருவிளையாடல் கதையினை நமக்கு நினைவுபடுத்துகிறது. ஒரு செய்தி நடப்பதற்குமுன் அது பற்றிய நினைவு, கனவாக இடம் பெற்றுக் கதையில் ஊடோடி இடம்

பெறுவதைப் பல கதைகளில் காணமுடியும். இவ்விடத்து கட்டபொம்மு கதையில் 'வெள்ளையம்மா பாடும் பொல்லாத சொப்பனம் நானுங் கண்டேன்' என்னும் பாடலடிகளை நினைவுக்குக் கொள்ள இடமுண்டு.

**மாதிகன் மனைவி கண்டெடுத்தக் குழந்தைக்குத் தாலாட்டுச் செய்தல் :**

அடவிதனில் அய்யா கண்டெடுத்த
வீரய்யா கண்டெடுத்த
அற்புதமே வீரப்பா[16] கண் வளராய் (30)

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் தாலாட்டு என்பது விடிய விடிய நடைபெறும். கதை நிகழ்வில் தாலாட்டு, ஒப்பாரி போன்றவை இடம் பெற்று நேரத்தைக் கடத்திச் செல்லவும், கதை கவனிப்போருக்கு உறவுமுறை குறித்த நினைவோடைகளை அசையச் செய்து நிகழ்வில் ஒன்றிணையவும் வாய்ப்பாக அமைகிறது[17] இது ஒரு உத்தி முறையாகக் கதை நிகழ்த்துவோர் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

மதுரை வீரன் தனது தாய் தந்தை, யாரென்று அறிந்து கொள்ள வேண்டுமெனக் காளியிடம் வேண்டுகிறான். வீரமாகாளியும் வீரனுக்கு அவனது வரலாற்றைக் கூறுகிறாள்.

**உன்னுடைய தாய் தந்தையை உறுதியாய் உரைக்கிறேன் கேள்:**

**காசியை ஆள்பவனாம் கனம் பெருகும் துளசிங்கன்**
**செய்த தவப்பலனால் செல்வனாக வரங்கள் தந்து**

---

16 1. வீரப்பா - மதுரை வீரன்
2. மதுரை வீரன் திருமலை நாயக்கரின் காலத்தவன் என நம்பப்படுகிறது

17 ஐவர் ராசாக்கள் கதையில் 260 அடிகள் தொடங்கி 275 அடிகள் வரை தாலாட்டு இடம் பெறுகிறது. வானமாமலை (ப.ஆ.) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை - 2, 1974 (27, 30, 23, 14, 22 எனும் எண்கள் நூலில் உள்ள பாடலடிகளைக் குறிப்பன)

**அவனுக்கு ஆசை காட்டி அத்வானக் காட்டில் விட்டார்**
**தோல் தைக்கும் சக்கிலியன் தோகையராம் பூமாயி**
**கண்டெடுத்துத் தான் வளர்த்தார்** (23)

மன்னன் மனைவி பெயரும், சக்கிலியன் மனைவி பெயரும் 'பூமாயி' என்றே இடம்பெற்றுள்ளது.

மதுரை வீரன் பிறப்பு, தாலாட்டு, குழந்தையை குலத்துக்கு ஆகாது என்று காட்டில் விட்டபோது வருந்தி ஒப்பாரி செய்வது. மாதிச்சி குழந்தையைக் காட்டில் கண்டெடுத்து வளர்த்தல். ஆளான மதுரை வீரன் மன்னன் மகளுக்குக் காவலிருக்கையில் பொம்மியைக் காதல் செய்தல். தாழ்ந்தக் குலத்தவனான மதுரை வீரனை வெறுத்து அவள் ஒதுக்கும் வேளையில் காசி மன்னன் மகன் மதுரை வீரன் எனக் காளி வந்து சொல்லிக் காதலுக்கு உதவுதல், பின்னர் சிறையெடுப்பு நிகழ்ச்சி, மதுரைக்குக் காவலனாக அழைக்கப் பெற்றுக் கள்ளர்களை ஒழித்த போது வெள்ளையம்மாள் காதல் கொள்ள அவளைச் சிறையெடுத்த போது இறக்கிறான் வீரன். பின்னர்,

**'கும்பிடும் கரத்தினிலே குவலயத்தில் தங்கியிருந்தார்**
**அழைக்கும் சமயத்தில் அடிமுடி நிறைந்திருந்தார்** – 14

இப்பாடலடிகள் வழியே மதுரை வீரனைத் தெய்வமாக வழிபடுவது தெளிவாகிறது.

**'கல்கண்டு சீனி கதலி வாழைப்பழமும்**
**கஞ்சாவும் அபினும் கனமாகத் தான் படைத்து'**[22]

தெய்வமான மதுரை வீரனுக்குக் கஞ்சா, அபின், கோழி ஆகிய பொருட்களையெல்லாம் படைத்து அவனை வழிபடுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3.1 மதுரை வீர சுவாமி உற்பத்தி பூசாரி பாட்டு – கருத்து வெளிப்பாடு (உடுக்கடி)

இதில் வீரன் 'சாமி' நிலையில் போற்றப்படுகிறான்.

காளி துணை நின்று மதுரை வீரன் பூர்வீகம் உரைக்கிறது.

மதுரை வீரன் மாறுகால் மாறுகை வாங்கப்பட்டு இறந்த போது மதுரை மீனாட்சி அருளுடன் மதுரை மீனாட்சி வாசலில் முன் பூசை பெறுகிறான்.

பார்வையாளருக்கு அல்லது கதை கேட்போருக்கு மதுரை வீரன் சாமி கதை 'சாமி' எனும் உணர்வுடனேயே தொடங்கப்பட்டு முடிக்கப்படுகிறது.

இக்கருத்தை வலியுறுத்தியே கதை செல்லக் காணமுடிகிறது.

உடுக்கடிக்கதை கோயில் வாசலில் தொடர்ந்து நடைபெறுவதும், சாமியை வேண்டிக் காவல் தெய்வமாக 'வரவேணும் காக்க வேணும்' எனும் நோக்கிலேயே கதை உள்வாங்கப்படுகிறது என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கதாகும். மதுரை வீரன் சாமி கதை என்றே சொல்வதும், கோயில் பூசாரியே இக்கதையை நிகழ்த்துவதும் இவ்விடத்து மனங்கொள்ளத் தக்கதாகும்.

## 1.3.4 மதுரை வீரன் கூத்து*

மதுரை வீரன் கூத்துதனில் மதுரை வீரனின் வீரம் புகழ்ச்சியாகக் கூறப்படுகிறது. 'மதுரை வீரன் ஜெயமங்கலம்' என்னும் வரி அடிக்கடி இடம் பெறுகிறது. பூசாரி வாழ்த்துப் பாடலில் மதுரை வீரனின் வாழ்க்கைக் கதை விவரிக்கப்படுகிறது. இடையிடையே மதுரை வீரன், மாதிச்சி, மன்னன் பொம்மணன் ஆகிய பாத்திர, வேடமிட்டு அரங்கில் வந்து ஆடியும், பாடியும், வசனம் பேசியும் நடித்துச் சுய சரிதையாகக் கூறுவதும் பிற பாத்திரங்களுடன் பேசுவதுமாகக் கதை நிகழ்த்தப்படுகிறது.

கள ஆய்வின் போது கிடைக்கப் பெற்ற மதுரை வீரன் கூத்துப் பாடல் மிகவும் சிறியதாகவும், தற்போது முழுமையாகப் பாட ஆள் இல்லாத காரணத்தால் கதையோட்டத்தில் விடுபாடுகள் கொண்டதாகவும் உள்ளது. கிடைத்த பகுதியின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் இங்குக் காணலாம்.

பூசாரியின் வாழ்த்துப் பாடல் தொடங்கி, மன்னன் பொம்மணன், மாதிச்சி, மதுரைவீரன், மீண்டும் கோமாளி இடம் பெற்று மதுரை வீரன் தரு என்பதுடன் கூத்துப் பாடல், வசனம் கொண்ட பகுதி அமைகிறது.

---

* காண்க. பி.இ. இல் உள்ள மதுரை வீரன் கூத்து

இக்கூத்தில் எல்லாப் பாத்திரங்களுமே குறிப்பாக மதுரை வீரன் தவிர்த்த பிற அனைத்துப் பாத்திரங்களுமே மதுரை வீரன் புகழ்பாடுவதாகவே விளங்கக் காணமுடிகிறது. மதுரை வீரனை மனிதனாகப் பார்ப்பதிலிருந்து தெய்வநிலையில் பாடுவதாகவே அமையக் காணமுடிகிறது.

இக்கூத்தில் முதல் 25 அடிகள் வரை மதுரை வீரன் சாமி புகழ் பாடப்படுகிறது. 26 அடிகள் தொடங்கி 35 அடிகள் வரை மதுரை வீரனின் வீரம், தெய்வத்தன்மை ஆகியவை பேசப்படுகின்றன. தொடர்ந்து 50 அடிகள் வரை மதுரை வீரன் பிறப்பு வளர்ப்பு பற்றிக் கூறப்படுகிறது.

மன்னன் பொம்மணன் தன் வசனத்தின் போது தன் நிலை பற்றிக் கூறுகிறான். ஐந்தடி கொண்ட பாடல் அடிகளில் மதுரை வீரன் சாமியின் சக்தியும், புகழும் புகழ்ந்துரைக்கக் காணமுடிகிறது. தொடர்ந்து இடம் பெறும் வசனப் பகுதியில்,

> கொடி சுத்திப் பிறந்ததால் கோத்திரத்துக் காகாது-இவன்
> மாலை சுத்திப் பிறந்ததால் அரண் மனைக்காகாது[18]

எனக் குறிகாரர் கூற, தங்கத் தாம்பூலத்திலே குழந்தையைவைத்து காட்டில் ஆவரஞ்செடி அடியிலே போட்டுவிட்டமையை நினைவு கூறிப் பார்வையாளருக்குத் தான் 'பாவி' எனக்கூறிட அறிய முடிகிறது. தொடர்ந்து வேட்டைக்குப் போகையில் சித்தர்கள் தனக்கு எப்போதும் துணையிருந்தனர் எனக் கூறக் கேட்க முடிகிறது.

மாதிச்சி எனும் பெண் பாத்திரம் இடம் பெற்றுச் சக்கிலியக் குடியில் பற்பல பிரிவுகள் இருப்பினும் இனத்தார் அனைவருக்கும், மாதியன்களுக்கும், மாதிச்சிகளுக்கும் மதுரை வீரன் உறவு முறையாளன் அவன் என் மடியில் தவழ்ந்து வளர்ந்தவன் எனக் கூறுகிறாள். மதுரை வீரன் (பெண் நிமித்தமாய்) பன்னிரண்டாயிரம் படையையும் துரத்தியடித்த பெருமைக்குரிய வீரன், மதுரை வீரசாமியைத் துதிக்க வேண்டுமேல் தீப்பந்தம் கட்டிட வேண்டும். தீப்பந்தம் கட்டுவோர், மண்டி போட்டு பயத்தோடு வீரன் நினைவோடு கட்டவேண்டும் எனக் கூறுகிறாள்.

18 காண்க. மதுரை வீரன் கூத்து - வசனப் பகுதி (பொம்மனன் பேசுவது)

மதுரை வீரன் பாடல் - வசனப் பகுதியில் (பாடல்) முதல் பாட்டு அடிகளில் தன் வீரம், எல்லாத் திசைகளிலும் புகழ் பரவியுள்ளமையினைக் கூறுவதாக அமைகிறது. தொடர்ந்த பதினெட்டு அடிகளில் பொம்மியைச் சிறையெடுத்த செய்தியும் கடைசி 23 அடிகள் வரை தாழ்ந்த குலத்தே வளர்ந்த போதும் தான் காசி மன்னன் மகன், பாம்பு பாலூட்ட காட்டில் வளர்ந்தவனும் ஆவேன்; குழந்தைகளுக்கும் குமரிப்பிள்ளைகளுக்கும் காவல் தெய்வம் நானே எனப் பாடி, எப்போதும் துணையிருப்பேன் நான் எனத் தன் விபரம் கூற முடிகிறது.

பூசாரியே கோமாளியாகப் பாத்திரமேற்று கதை நடத்திச் செல்வோனாக இக்கூத்தில் அமைகிறான். மன்னன் பொம்மணன் மகள் தொட்டிச்சி (பொம்மி) யைக் காட்டில் குடிசையில் காவல் செய்து நின்ற போது காதல் கொள்கிறான். மாதிகன் (வீரன்) வகுப்பைச் சேர்ந்த மதுரைவீரன் தாழ்ந்த குடியன். (பொம்மி) தொட்டிச்சி உயர்ந்த குலத்தவள் எனத் தொட்டிச்சி எண்ணியிருந்த போதும் விபரம் கூறி அவளைச் சிறையெடுத்துச் செல்கிறான் வீரன். அப்போது மன்னன் படையெடுத்து வர 5000 பேரையும் கொன்று மன்னனையும் கொன்று விட்டவன் எனக் கூற்றமைகிறது.[19] மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முன் பூசை பெறத்தகுதி பெற்றவனாகியுள்ளேன்[20] எனக் கூறக் கதை நிகழ்ந்து முடிகிறது.

### 1.3.4.1 மதுரை வீரன் கூத்து – கருத்து வெளிப்பாடு

மதுரை வீரன் கூத்துதனில் நம்பகத் தன்மையற்ற கதைச் செய்திகள், சுய கதைகள், எல்லாப் பாத்திரங்களுமே மதுரை வீரனை சாமியாகப் போற்றுதல், மீனாட்சியம்மையே வீரனுக்கு முதவிடம் கொடுத்துள்ளமை என மதுரை வீரன் உட்பட அனைவரும் பேசிடக் காண முடிகிறது.

இங்கு மதுரை வீரன் கூத்து பற்றிய சில செய்திகள் (காண்க. பி. இணைப்பு) எனும் பகுதியையும் கவனத்தில் கொண்டு இதன் கருத்து வெளிப்பாட்டினை அறிய முற்படலாம்.

---

19 மாதிச்சி பேசும் போது 12 ஆயிரம் படை என்கிறாள். ஆனால் பூசாரி (கோமாளி) யின் வசனப் பகுதியில் 'இவளச் சிறையெடுக்க 5000 பேர் படையைக் காசிராஜன் பொம்மணன் எல்லாத்தையும் மதுரை வீரன் கொன்னுட்டான் என அமையக் காண முடிகிறது.

20 மதுரை வீரன் தரு - பகுதியில் மதுரைக்கு நாயகியாம் மீனாட்சி வாசலிலே குடியிருக்கிறேன். மதுரை வீரன் ஜெய மங்கலம் என அமையக் காணலாம்.

மதுரை வீரன் ஒரு சாமியாகவே போற்றப்படுவதால் அனைத்துப் பேச்சுக்களும், பாட்டுக்களும் சாமி போற்றுதல் எனும் நிலைப்பாட்டினையே கொண்டுள்ளன. கூத்துக்கான தொடக்க வேலைகளில் குறிப்பாக இரவுக்கூத்திற்குத் தேவையான தீப்பந்தம் கட்டுவோர் மண்டிநிலை போட்டே கட்டியாக வேண்டும்[21] என்பது (மதுரை வீரன் சாமி மண்டிநிலையிலேயே பல இடங்களில் சாமியாகத் தோற்றமளிக்கிறார்)[22] சாமி எனும் உணர்வை ஊட்டவல்லதாகவே அமைகிறது.

மதுரை வீரன் பெண்களை அதாவது பொம்மி, வெள்ளையம்மாள் ஆகியோரை மணமுடித்தது பற்றிய விமர்சனத்தையோ, மதுரை வீரன் தண்டனை பெற்றதையோ மாறுகால் மாறுகை வாங்கப்பட்ட செய்தியையோ இக்கூத்தில் காண இயலவில்லை. மாதிச்சி பாலுண்டு மடியில் தவழ்ந்தவனான சக்கிலியன் குலத்து மதுரை வீரன் எக்குறையுமற்றவன் எனக்கருதிக் கூத்து நடத்தும் இவர்கள் கூத்திற்கு தொட்டிச்சியர், அதாவது நாயக்கர் சமூகத்தவர் பார்வையாளர்களாகப் பங்கேற்க முன் வருவதில்லை.[23]

சக்கிலியர் இனத்தவரே பார்வையாளராக; சக்கிலியர் குலத்தவரே பங்கேற்று நடித்தாடும் இம் மதுரை வீரன் கூத்தில் 'சாமி' 'இறைமை' எனும் நோக்கிலேயே கூத்து நிகழ்த்தப்படுகிறது.

மேல் சாதிக்காரர்கள் எத்தனை படை திரண்டுவரினும் நமது நியாயமான வீரத்தைக் கைவிடலாகாது. 'வீரமே' வாழ்வுக்குத் துணை எனும் குறியீட்டினையே மதுரை வீரனாக மனங்கொண்டு வாழும் சமூகத்தவர் நடத்தும் கூத்தில் அறிந்திட நேர்கிறது.

---

21 பந்தங்கட்ட வேணுமய்யா
மண்டிபோடவேணுமய்யா
மண்டிபோடலையின்னா
சாமி அடித்து விடும்
- மதுரை வீரன் கூத்து மாதிச்சி பாடும் பாடல்

22 வெட்டுக்காடு புகாரில் மதுரை வீரன் சிலை மண்டிநிலையிலே உள்ளது

23 காண்க. பி.இ. மதுரை வீரன் கூத்து பற்றிய சில செய்திகள்

## 1.4 கட்டபொம்மு கதைச் சுருக்கம்

கட்டபொம்மன் காலத்தில் நாயக்கர் ஆட்சி முடிந்து விட்டது. அவர்கள் காலத்தில் வரிவசூலுக்காகவும், யுத்தங்களை நடத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட பாளையப்பட்டுக்கள் யாருடைய மேலதிகாரத்தின் கீழும் இல்லாத நிலை ஏற்பட்டது. நாயக்கர் ஆட்சிக்குப் பின் ஆற்காட்டு நவாப்பின் ஆட்சி ஏற்பட்டிருந்த போதிலும் அது தென்பாண்டி நாட்டில் பெயரளவிற்கே நிலை கொண்டிருந்தது. கான் சாகிபுவின் மரணம்24 திப்புவின் தோல்வி, ஆற்காட்டு நவாப்பின் வீழ்ச்சி இவற்றின் காரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனி தென்னாட்டில் நேரடியாட்சியை மேற்கொண்டது. தமிழ்நாட்டுப் பாளையங்களின் ஆதிக்க உரிமைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தி வரி வசூலிக்க நிலங்களை 'செட்டில்மெண்ட்' செய்தனர். இச்செட்டில்மெண்ட் மூலம் பணிந்த பாளையக்காரர்களுக்கு, பணியாத பாளையக்காரர்களின் நிலங்களைப் பிடுங்கி வழங்கினர். இவ்வாறுதான் பாஞ்சாலங்குறிச்சி பாளைய நிலங்கள் உள்ள அருங்குளம், சுப்பலாபுரம் என்ற கிராமங்களை எட்டயபுரத்தாருக்கு வழங்கினர். கட்டபொம்மன் ஆங்கிலேயே உரிமையை எதிர்த்தான். அவர்களுக்கு வரி செலுத்தவும் மறுத்தான். 1792 இல் வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் மன

---

24 கான்சாகிப் : நவாப்பின் படையில் சேர்ந்து தனது வீரத்தாலும் திறமையாலும் தளவாயாக உயர்ந்தான். பரங்கி மலையிலும் சதுரங்கபட்டினத்திலும் காலூன்றியிருந்த டச்சுக்காரர்களின் கோட்டைகளைப் பிடிக்க ஆங்கிலேயருக்குத் துணையாக இருந்தான். திறமைக்குப் பரிசாக ஆங்கிலேயர் அவனை கம்மாண்டராக (Commonder) ஆக்கினர். தென்னாட்டை ஒடுக்க அவனை அனுப்பினர். தென்னாட்டில் சுயேட்சை அரசை நிறுவ எண்ணி மதுரையில் கான்சாகிப் முடி சூட்டிக் கொண்டான். ஆங்கிலேயரின் கையாளான இவன் பாளையக்காரர்களின் விரோதத்தைப் பெற்றான். ஆங்கிலேயர் கான்சாகிப் வளர்ச்சியை ஒழித்திட எண்ணினர். சமகாலத்தில் சிவகங்கையையும் ஆங்கிலேயரையும் எதிர்த்தான். சிவகங்கையார் ஆங்கிலேயருடன் சேர்ந்திட கான்சாகிப் வெள்ளையரால் தூக்கிலிடப்பட்டான்.

காண்க : கான்சாகிபு சண்டை, நாட்டுப்பாடல் வெளியீடு - 5
நா.வானமாமலை, (ப.ஆ.) மதுரைப் பல்கலைக்கழகம் மதுரை - 1972.

முறிவு ஏற்பட்டது. ஜாக்சன் என்ற ஆங்கில அதிகாரி ஒரு வாரத்திற்குள் தன்னைக் காண வேண்டுமென்று கட்டபொம்மனுக்குத் தூது அனுப்பினான். 1798 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் தளபதிகள் முன் செல்ல தம்பிமார் புடை சூழ ஜாக்சனைக் காணத் திருநெல்வேலிக்குச் சென்றான் கட்டபொம்மன்.

குற்றாலம் சிவகிரி எனப்பல இடங்களுக்குச் சென்றும் கூட ஜாக்சன் பேட்டி தராது இராமநாதபுர இராமலிங்க விலாசத்திற்கு படைகளின்றி தனியே வரவேண்டும் எனக் கட்டளையிட்டான். எனினும், இப்பயணத்தில் தானாபதிப்பிள்ளை, ஊமத்துரை, வெள்ளையத்தேவன் ஆகியோர் உடன் சென்றனர்.

கட்டபொம்மன் அங்குச் சிறைப் பிடிக்கப்படவே கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைத்தளபதி லெப்டினன்ட் கிளார்க் என்பவனுக்கும், வீரபாண்டியனுக்கும் சண்டை ஏற்பட்டது. இதில் வீரபாண்டியனின் தளபதி கிளார்க்கை வெட்டி வீழ்த்தினான். சிவசுப்பிரமணியப்பிள்ளையான பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் தலைமை நிர்வாகி தானாபதிப்பிள்ளை இராமநாதபுரத்தில் நடந்த போரின் போது சிறை பிடிக்கப்பட்டார். பிறர் தப்பினர். இராமநாதபுரத்தில் நடந்த சம்பவம் சென்னையில் விசாரிக்கப்பட்டு ஜாக்சனுக்குப் பதில் எஸ்.ஆர். லூசிங்டன் மாவட்ட புது அதிகாரியாகப் பதவி ஏற்றார். 1799 ஆம் ஆண்டு மார்ச்சு 16 இல் கட்டபொம்மனால் கொலை செய்யப்பட்ட கிளார்க் குடும்பத்திற்கு இழப்பீடு தரச்சொல்லி கம்பெனியாரிடமிருந்து கடிதம் கட்டபொம்மனுக்குச் சென்றது. கட்டபொம்மன் மறுத்தான். பாளையக்காரர்கள் தேவி சக்கமாளைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள். திருச்செந்தூரில் சக்கம்மாவுக்குத் திருவிழா நடந்ததால் அங்கு அதிகமான படை வீரர்கள் சென்றிருந்தனர். அச்சமயம் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சி மீது முன்னறிவிப்பின்றித் திடீர்த் தாக்குதல் செய்தான்.

முதற்போரில் தளபதி காலின்ஸ் இறந்தான். முற்றுகை உடைந்தது. வெள்ளையர் படை சிதறியது. 1799இல் மறுபடியும் பெரும்படையுடன் மேஜர் பானர்மேன் கோட்டையைத் தாக்கினான். கோட்டை பிடிபட்டது. கட்டபொம்மன் தப்பித்தான். கோலார்ப்பட்டிப் பாளைக்காரரான இராஜகோபால நாயக்கர் இல்லத்தில் வீரபாண்டியன் தங்கியிருப்பதை அறிந்த எட்டப்பன் டால்டாசுடன் அங்கு சென்றான். தானாபதிப் பிள்ளை உட்பட இருபத்து நான்கு பேர் பிடிபட்டனர். வீரபாண்டியக்

கட்டபொம்மன் அங்கிருந்து தப்பித்துவிட்டான். கட்டபொம்மு தேசத்துரோகி என கம்பெனியாரால் நாடெங்கும் அறிவிக்கப் பட்டது. விஜயரகுநாததொண்டைமான் கொடுத்த துப்பு மூலம் கட்டபொம்மு தங்கியிருந்த புதுக்கோட்டை அரண்மனையில் கைது செய்யப்பட்டான். புதுக்கோட்டையிலுள்ள திருக்களம்பூரி லிருந்து 1799 ஆம் ஆண்டு அக்டோர் திங்கள் முதல் நாள் பானர்மேனின் படையுடன் கட்டபொம்மனும் அவனைச் சார்ந்த பலரும் கயத்தாறு எனுமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். 1799 அக்டோபர் 16 ஆம் நாள் விசாரணை நடைபெற்றது.[25] கட்டபொம்மன் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுப் பின்னர் அவனைத் தூக்கிலிட்டனர். பாஞ்சாலங்குறிச்சி தடம் தெரியாமல் அழிக்கப்பட்டது. ஆனால், வீரபாண்டியக் கட்டபொம்மனது தியாகம் சுற்றிலுமுள்ள மக்கள் மனங்களில் வீர உணர்வை எழுப்பியது. மக்கள்படை திரண்டது. பாளையங்கோட்டைச் சிறையிலிருந்த ஊமத்துரையும் அவனது உறவினர்களும் விடுதலைப் படையால் விடுவிக்கப்பட்டனர். ஏழு நாட்களில் கோட்டை மறுபடியும் கட்டப்பட்டது. வெள்ளையர் அணி மீண்டும் பாஞ்சாலங்கோட்டையைக் கைப்பற்றியது. ஊமையன் 2-2-1801 இல் தப்பியோடிச் சிவகங்கைக்குச் சென்றான். வெள்ளையர்கள் ஊமத்துரையையும் சிவகங்கை மருது சகோதரர்களையும் கைது செய்து தூக்கிலிட்டனர். 10-6-1801இல் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு மேற்புரத்திலுள்ள பீரங்கி மேட்டில் தூக்கிலிடப்பட்டார். நியாயத்துக்காகப் போராடி உயிர் நீத்தவர்களது கதைகளும் வரலாயின. உயர்ந்த நோக்கங்களுக்காக உயிர் நீத்தவர்கள் கதைப் பாடல்களில் வீரர்களாகப் போற்றப் படுகிறார்கள் எனக் கட்டபொம்மு கதை அமைகிறது.

## 1.4.1 வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்[26]

இக்கதைப் பாடலின் போக்கிலேயே சென்று இதன் கதையை அறியலாம். வணக்கம், காப்பு எனத் தொடங்கும் இக்

25 கெட்டி பொம்மு நாயக்கரை 16.10.1799இல் கயத்தாறில் தூக்கிலிடப்படுவதற்கு முன்னர்கூட இத்தகைய விசாரணை நாடகம் நடத்தப்பட்டது. டாக்டர் ச.ந. கமால், மாவீரர் மருது பாண்டியர், ப.173.

26 வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், நா. வானமாமலை (ப.ஆ.) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை - 1971.

கதைப்பாடலில் வேழமுகத்தான், கந்தன், சரஸ்வதி ஆகியோரை வணங்கிக் கும்மித்தமிழ்ப் பாட்டுரைக்க (35) எனக் கூறி 7410 வரிகள் வரை பாடல் அடிகள் சென்றமைகின்றன.[27] பாஞ்சைவளம், மன்னன் கொலு, பாஞ்சைக்குக் கேடு வரக் காரணம், கலெக்டர் ஜாக்சன் கோபம், ஜாக்சன் கடிதம், பாஞ்சைக்குக் கடிதம் வரல், கட்டபொம்மு ஊமத்துரை உட்பட ஜாக்சனைப் பேட்டி காணப் படையுடன் செல்லல். திருநகர் மாநகர் வரின் பேட்டிதருவோம் என்றார் (717) அச்சமில்லாதது திருச்சுழிக்கு வந்தாய் அந்தக் கணம் பேட்டிதாரோம் என்றார் (785-86) என ஜாக்சன் பேட்டி தராது இறுதியில் இராமநாதபுரத்தில் சந்திக்கலாம், நாளைக்குத்தான் நல்லவேளை என்றார். பின் இராமநாதபுரம் பேட்டி என்றார் (849-50)[28] என்றவாறு கெக கெக என்று சிரித்துக் கொண்டார் துரை கீ கீகீ என்றங்கே பேசிக் கொண்டார்.

கட்டபொம்முவை இழுத்தடித்த ஜாக்சன் தனித்துவரச் சொன்னதன் பேரில் சென்ற கட்டபொம்மனை

> 'வழியை மறித்து பிடியும் என்றானிருகை
> மட்டும் விலங்கு எடுங்கள் என்றான்'

எனத் தொடர்ந்து (1265-66) போகாதே என்று ஜாக்சன் கட்ட பொம்மு மடிபிடித்தே இழுத்தான். சண்டைமுதிர்ந்தது. கர்னல் அஸ்டன் இறந்தான். இராமநாதபுரத்தை விட்டு ஏகுகையில் கட்டபொம்மு படை 'பொன்னும் பணத்தையும் அள்ளிக் கொண்டார். பிச்சிப்பூவும் கொழுந்துகள் கொள்ளையிட்டார் (1487-88) எனும் வார்த்தைப்படிக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பித்தது,[29] எல்லோரும் தப்பித்திட தானாபதிப் பிள்ளை ஜாக்சன்

27 மேலது

28 717,785-86, 849-50 என்ற எண்கள் வீரபாண்டியன் கட்டபொம்மு கதைப் பாடல் வரிகள் ஆகும்.

29 கட்டபொம்மு சரித்திரக் கும்மி எனத் தலைப்பிட்டு வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல் தொடங்குகிறது. வணக்கம், காப்பு எனும் உறுப்புக்களுடன் தொடங்கி இறுதியில் 'நாட்டினிலிக் கதை தான் படிப் போக்கினை நாளுமெந்நாளும் மிக வாழி என இடம் பெறுகிறது. இது கும்மிச் சந்தத்தை உடையதாகவே உள்ளதேயன்றி பெண்கள் கும்மியடித்து ஆடிப்பாடும் நடப்பியலில் உள்ள கும்மிப்பாடல் அல்ல எனத் தெரியவருகிறது. மேற்சுட்டியுள்ள 'படிப்போர்' என இடம் பெறுவதால் எழுதப்பட்டுள்ள இதனைப் படித்துச் சுவைக்கவே எழுதப்பட்டுள்ளது என இதன் நோக்கம் தெரியவருகிறது. எனவே இதனை நா.வா.அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல் என்றே கொள்வது இங்கு பொருத்தமுறுகிறது.

துரையிடம் அகப்பட்டார். கவர்னரிடம் தானாபதி பேட்டி செய்து ஜாக்சன் செய்ததே தவறு எனத் தண்டனை பெறுமளவுக்குத் தானாபதி செய்தார்.

தானாபதி சொல்படிக் கட்டபொம்மு கவர்னரைக் கண்டு பேட்டி செய்யச் சென்னை வந்தார். துரைமார் கூறிய குற்றச் சாட்டுகளுக்குப் பதில் கூறி பாஞ்சைக்குக் கட்டபொம்மு திரும்பினான். தன் தம்பி திருமணத் தேவைக்காக பிள்ளை மகன் கொள்ளையடிக்கிறார். ஊமத்துரையும் இதில் உடன்படுகிறார். வெள்ளையத் தேவன் போருக்குப் புறப்படும் வேளையில் வல்லவன் வெள்ளையன் பெண்சாதி மனம் மருகிச் செய்திகள் ஏதுரைப்பார். (2523 - 24)

நாட்டிலே மண்மாரிப் பெய்யக் கண்டேன்
பாஞ்சை நாடுவிட்டோர் பெண்ணும் போகக் கண்டேன்
போகாதே போகாதே எங்கணவா
பொல்லாத சொப்பணம் கண்டேன் என்றார் (2562)

இவ்வாறு கணவன் மனைவி பேச்சு அமைகிறது.

முதல் போர் தொடங்கியது. வெள்ளையத் தேவன் இறந்தான்.

'நட்புள்ள பாதர் வெள்ளையனைத் தானிங்கே
எப்போது காணவே போறோமென்றார்
சேவுகத்திலே சுத்த வீரனடா எங்குந்
தேடிக்கிடைக் காத சூரனடா'

என அனைவரும் நொந்தனர். பின்னர்

'மன்னவன் கும்பினிப்பட்டாளம் வந்துமே
அநியாய மாக வளைத்ததைய்யோ' (3784)

எனக் கலங்கினர். போரில் தோல்வி நெருங்கியது. தானாபதி தூக்கிலிடப்பட்டார். கட்டபொம்மு தப்பியோடி தொண்டைமான் புதுக்கோட்டை நகர் வந்து தஞ்சாமாயினார். புதுக்கோட்டையார் வெள்ளையனுக்குக் காயிதம் எழுதிக் காட்டிக் கொடுத்ததால் கட்டபொம்மு பிடிபட்டார்.

கட்டப்புளியில் கயிறுபோட்டு
கட்டப்புளிய மரந்தனிலே துரை
கட்டபொம்மு தலை தூக்கினராம்
மெட்டான பாஞ்சைத் துரை வீரபாண்டியன்
கட்டபொம்மன் உயிர் போக்கினனாம் (4210)

ஊமத்துரை சிறையிலடைக்கப்பட்டான். கட்டபொம்மனது தியாகம் மக்களிடையே எழுச்சியை உண்டாக்கியது. இதனால் விடுதலைப் படை திரண்டது. இதனால் சிறையிலிருந்து ஊமத்துரை தப்பியோட நேர்ந்தது. மறுபடியும் விடுதலைப்போர் தொடங்கியது. வெள்ளையர் அழித்த பாஞ்சாலங் கோட்டையை ஊமத்துரை விடுதலைப்படை துணையுடன் கட்டி முடித்தான். விடுதலைப்படை வீரர்கள் மீண்டும் வெள்ளையரால் சிறை பிடிக்கப்பட்டனர். சீமையை ஆண்ட மருது சகோதரர்களுடன் சேர்ந்து மறுபடியும் போராடினான். மீண்டும் வெள்ளையர் ஆயுதப்படை வென்றது. மருது சகோதரர்கள் உட்பட ஊமத்துரை தூக்கிலிடப்பட்டான். இவ்வாறு கட்டபொம்மு கதை விரிததுரைக்கப்படுகிறது.

### 1.4.1.1 வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல் – கருத்து வெளிப்பாடு

ஜாக்சன் பேட்டி தரக் கட்டபொம்முவை நாளைக்குத்தான் நல்லவேளை குற்றலாம், திருச்சுழி, இராமநாதபுரம் வருக என அலைக்கழித்த வெள்ளையர் கொடுமை காட்டப்படுகிறது. கட்டபொம்மு சிறைபிடிக்கப்படுகையில் தப்பித்ததோடன்றி இராமநாதபுரத்தைக் கொள்ளையடித்து விட்டுத் தப்பிக்கின்றான். வெள்ளையர் செயலுக்கு ஈடாகக் கொள்ளையடித்துவிட்டுத் திரும்பினான் கட்டபொம்மு எனக் காட்டப்படுகிறது. கொள்ளை யடித்ததில் ஊமத்துரை ஈடுபடுதல் காட்டப்படுகிறது. கொள்ளை யடித்தமை கம்பெனியரால் விசாரணைக்குட்படுத்தும் போது சென்னை சென்ற கட்டபொம்மு அது நியாயம் எனக் காட்டித் திரும்புவதாய்க் காட்டப்படுகிறது.

மேற்சொன்ன செய்திகளிலிருந்து கட்டபொம்மு ஆட்சிக்கு வெள்ளையர்களே குந்தகம் செய்தனர் என்னும் கருத்து வலுவூட்டப்பட்டுக் காட்டப்படுகிறது.

வெள்ளையத் தேவன், தானாபதிப்பிள்ளை போன்றோர் உற்றதுணையிருந்தனர். குறிப்பாக வெள்ளையத் தேவன், மனைவி சொன்ன விபரீத சகுனங்கள் கேட்டும் போரில் சென்று மாய்ந்தான் என அறிந்து கட்டபொம்மு மிகவும் வருந்துகிறான். கட்டபொம்மு தப்பித்தும் காட்டிக் கொடுக்கப்பட்டு தூக்கிலிடப்படுகிறான். ஒருபக்கம் நம்பிக்கைக்குறியவர்களும் மறுபக்கம் வெள்ளையர்களும் கூலிப்படையாக விளங்கும்

எட்டப்பநாயக்கர், புதுக்கோட்டை மன்னர் போன்றவர்களும் எரிச்சலோடு இக்கதையில் காட்டப்படுகின்றனர்.

கட்டபொம்மு சகோதரர் ஊமத்துரை விடுதலைப் படை அமைத்து பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை உடனே கட்டியது, போரிட்டது, மருது சகோதரர்களுடன் சேர்ந்து நின்று போரிட்டது இறுதியில் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டது[30] என்றவாறு பரம்பரையின் தொடக்கத்தைக் காட்டி பரம்பரை வீழ்ந்த வரலாறை; கட்டபொம்முவுக்குச் சாதகமாக நின்று நியாயத்தை மக்களிடம் விதைப்பதை நோக்கமாகக் கொண்டு கட்டபொம்மு கதைப்பாடல் அமைந்துள்ளது.

## 1.4.2 கட்டபொம்மு ஒப்பாறி

ஆய்வாளருக்கு கிடைத்த 88 அடிகள் கொண்டமைந்த கட்டபொம்மு ஒப்பாரியில் முதல் 12 அடிகள் பொதுவாக யார் இறப்பினும் உறவு முறையாளர்களைச் சுட்டிப்பாடும் வசதிக்கேற்ப அமைந்துள்ளன.

> **'ஒப்புக்கழுதவர் ஆறுபேரு**
> **உடன்கட்டைக் கழுதவ வெள்ளையம்மா'**

எனத் தொடங்கும் கட்டபொம்மு கதையில் வெள்ளையத் தேவன் கதை மட்டுமே கூறப்படுகிறது. வெள்ளையத் தேவன் ஆறு மனைவி கொண்டவன்; வெள்ளையம்மாள் மறவர் குலத்தைச் சேர்ந்தவள்; தாலிக்குரியவளான இவள் சேதுபதி மன்னன் மகள் என்றும் இப்பாடல் செய்தி கூறுகிறது.[31] கீழக்கரை முதல் மேற்கு எல்லையான சூளக்கரைவரை வெள்ளையத் தேவன் புகழ் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது.[32]

---

30 பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம், கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார், இரண்டாம் பாகம், இரண்டாம் பதிப்பு சி.வி.என். பிரசில் பதிப்பிக்கப்பெற்றது. 1959. (இதில் ஊமத்துரை வரலாறு தனித்துக் கூறப்பட்டுள்ளது)

31 இச் செய்தி வரலாற்று ரீதியில் கற்பனையாய்ப் புனைந்துரைக்கப் பட்ட தவறான செய்தியாகும். காண்க. பி.இ.. பக்.3-6

32 மறவர்குலம் சார்ந்தோர் கட்டபொம்முவின் குறிப்பாகத் தன் இனத்து வெள்ளையத் தேவன் - வெள்ளையம்மாள் கதையையே அழுத்தப்படுத்திக் காட்டும் வகையில் கட்டபொம்மு கும்மி, கட்டபொம்மு ஒப்பாரி, கட்டபொம்மு நாடகம் ஆகியவற்றில் காணமுடிகிறது. இப்போக்கு அண்மைக்கால மறவர் குலத்தவரிடையே காணலாகிறது.

போர்ச்சேவல் வளர்ப்பது போர் வீரர்களிடையே மரபு. போருக்குப் போகுமுன் சண்டை விட்டுப் பார்த்து எதிர்பார்த்த சேவல் வென்றால் நம்பிக்கையோடு போருக்குச் சென்று வெற்றி பெறலாம் என்பது மரபாகும். இச்செய்தி 37 வரிகள் வரை கூறப்படுகின்றன. மோசமான கனவுகள் கண்டுள்ளேன். இப்படியான கனவுகளால் தீங்கு வரப்போகிறது என வெள்ளையம்மாள் வெள்ளையத் தேவனிடம் சொல்லி போருக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறுகிறாள்.

**வெள்ளையம்மாள் :**

போகாதே போகாதே எங்கணவா
பொல்லாத சொப்பணம் நானுங்கண்டேன்

**வெள்ளையத்தேவன் :**

கண்ட கனவுகளைச் சொல்லடியே
கட்டழகி என் வெள்ளையம்மா

என்றவாறு பேச்சு அமைகின்றது. 53 வரிகள் வரை கதைச் செய்திகள் அமைய 70 அடிகள் வரை உயிரோடு இருக்கும் தனக்குக் கருமாதி செய்து இப்போதே அழகு பார்த்துக்கொள். போரிலிருந்து நான் திரும்புவது அரிது எனச் சொல்வதாக அமைய 84 அடிகள் வரை வெள்ளையம்மாளின் ஒப்பாரி அமைகிறது.

அள்ளிக் கொடுத்தேனடி ஆருயிரே
கொள்ளி வைக்க ஒரு குழந்தையில்லை
உள்ளூர்க் குடி மகனைக் கூட்டிவந்து
கொள்ளிக் குடம் ஒன்றுடைக்க வேணும்

என்பதாக அடிகள் தொடர்ந்து முடிகின்றன.

### 1.4.2.1 கட்டபொம்மு ஒப்பாரி – கருத்து வெளிப்பாடு

கட்டபொம்மு ஒப்பாரியில் வெள்ளையத் தேவன் தன் மனைவி வெள்ளையம்மாளிடம் போருக்குச் செல்ல விடை பெறுவது மட்டுமே முக்கியமாய்க் காட்டப்படுகிறது.

இஞ்சிக் கிணறு அழிவது, எலுமிச்சை, மாதுளை பண்ணை அழிவது, கணவன் சாவது ஆகியவையும் கும்பினிப் படைகள் உலவும் பாஞ்சையில் கன்னி கழியாப் பெண்ணொருத்தி கையில் நெருப்புடன் போவதும் ஆன ஆகாச் சகுணங்கள் பற்றிக் கூறும்

போது கேட்போருக்கும்; பார்வையாளருக்கும் வாழ்வோடு ஒன்றிணைந்து செல்லும் இவ்வகை நம்பிக்கைகள், மக்களிடம் புதைந்து கிடப்பனவாகும்.

பாமரமக்களிடம் உயிரோடு இருக்கையிலேயே சாவு கொண்டதாய் எண்ணிச் செய்யும் ஒப்பாரி வாய்க்கரிசிபோடுதல், வாய்க்கட்டு, கால்கட்டு, மாரடிப்புச் சடங்கு செய்தல், தாலி அறுத்தல், கொள்ளிக் குடம் உடைத்தல் எனச் செய்வது மக்களின் மனதை விட்டகலாத நிகழ்வுப் பதிவுகள் ஆகும். இது மக்களைப் பெரிதும் தாக்கியுள்ள சம்பவமாக அமைகிறது. இதனை நாடகத்தில் காட்சிப்படுத்திக் காட்டும் போது பார்வையாளர்களின் கவனம் ஈடுபாடு ஆகியவை அளவில் காட்ட இயலாததாகும்.

கணவன் மனைவி பிரிதல் எனும் பாடுபொருளானது ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் நிகழக்கூடியதாகும். மனதைத் தொட்டுவிடும் இக்கருத்து வாழ்வியலோடு தொடர்பு கொண்டதாகும். கட்டபொம்முவின் வரலாற்றில் கணவன் மனைவி உறவு பற்றிய பகுதியே மிகுதியும் ஈடுபாட்டுடன் மக்களிடம் நிலை பெற்றுள்ளது. வெள்ளையத்தேவன் வெள்ளையம்மாள் கணவன் மனைவி உறவு முறை இங்கு எண்ணுதற்குரியதாகும்.

பொதுவாக மக்களின் வாழ்வியலைத் தொட்டுப் பேசி நகர்ந்து செல்லும் இப் பாடல்அடிகள் கேட்பவர்க்கும் பார்ப்பவர்க்கும் மிகுந்த ஈடுபாட்டையும் ஒன்றுதலையும் இயல்பாகச் செலுத்தி விடுவதில் ஆச்சரியமில்லை.

இதில் வெள்ளையத்தேவன் 'தேவர்' சமூகத்தவன். வீரம் பொருந்திய வெள்ளையத் தேவன் தேவர் சமூகத்தலைவன், நாட்டுப்பற்று மிக உடையவன். கட்டபொம்மு வரலாற்றில் தேவர் சமூகத்துக்கு ஒரு சிறப்பான இடமுண்டு எனக் காட்டுவதும் இங்கு நோக்கமாகிறது.

## 1.4.3 கட்டபொம்மு வில்லிசைப் பாடல்*

காப்பு எனும் பகுதியுடன் தொடங்கும் இந்த வில்லிசைப் பாடல்,

> தாய்நாட்டின் சுதந்திரம் தன்னை
> தன்னுயிர் ஈந்து காத்த செம்மலர்

---

* ல. சீனிவாசன் வில்லிசைக்குழு, சின்னக்காமன்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

ஓய்வின்றிப் போர்புரிந்த மாவீரன்
ஒப்பற்ற தனிப்பெரும் தமிழ் மன்னன்
ஓங்குபுகழ் கொண்ட கட்டபொம்மன்
ஒளி சிந்தும் திருநாமம் போற்றி போற்றி[33]

எனக் கட்டபொம்மனைத் தெய்வமாகப் பணிந்து தொடங்குகிறது. 'வந்தெனக்குத் துணையிருப்பாள் தமிழரசி' எனப் போற்றிச் சொல்லும் பாடலைத் தொடர்ந்து 2,3 வது பாடல்களில் கட்டபொம்முவின் குழந்தைப் பருவம் பற்றிக் கூறப்படுகிறது. பாடல் 4 இல் ஆற்காட்டு நவாப்பிடமிருந்து ஆங்கிலேயர் அதிகாரம் பெற்று வரி கேட்க, கட்டபொம்மு வரி கொடுக்க மறுத்தமை, பாஞ்சை நாட்டுக்கு கலெக்டராக இருந்து ஜாக்சன் கட்டபொம்முவை நேரில் கண்டு பேச அழைத்தமை, கட்டபொம்முவிடம் ஜாக்சன் கண்டிப்பு செய்தல் ஆகியன அடுத்த பாடல்களில் முறையே கூறப்படுகின்றன. பின் கட்டபொம்முவைக் கைது செய்திட ஆணையிடுவதும் அதனைத் தொடர்ந்து சண்டை ஏற்பட்டதும் கூறப்படுகிறது. பாடல்கள் 5,6,7,8 களில் முறையே மேற்சொன்ன செய்திகள் பயின்று வந்து பாடல் 9 இல் சண்டை விளக்கம் அமைகிறது.

இந்த வில்லிசைப் பாடலின் ஒவ்வொரு பாடலும் அப்பாடலின் பாடுபொருளுடன் சேர்ந்த பிற செய்திகளை வசனப் பகுதியாய்க் கொண்டு முறையே செல்கிறது.

இதில் வெள்ளையத்தேவனின் திறமும் ஊமைத்துரையின் திறமும் பேசப்படுகின்றன. பாடல் 10 இல் வெள்ளைக்கார கிளார்க் என்பவனை கட்டபொம்மன் கொன்றமையும், கட்டபொம்மு தப்பித்தமையும் கூறப்படுகிறது. இப்பாடலையடுத்த வசனப் பகுதியில் மந்திரி தானாபதிப் பிள்ளை ஜாக்சனால் கைது செய்யப்பட்டமையும், ஜாக்சனுகு அடுத்து லூசிங்டன் கலெக்டராக நியமிக்கப்பட்டமையும் அவன் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்தமையும், கவர்னர் இவனது வேண்டுகோள்படி பானர்மேன் எனும் படைத்தளபதியை அனுப்பியதும், அதனைத் தொடர்ந்து போர் ஏற்பட்டதையும் காணமுடிகிறது. பாடல் 12லும் தொடர்ந்த வசனத்திலும் சக்கம்மாள் தேவியை வணங்க பாஞ்சை

33 காண்க. பி.இ. (காப்பு பகுதி முதல் 7 அடிகள்)

மக்கள் திருச்செந்தூர் சென்றிருந்த நிலையறிந்து பானர்மேன் திடீர்த் தாக்குதலை பாஞ்சைமேல் எடுத்தமை விளக்கப்படுகிறது. பாடல் 13இல் சக்காதேவி தொழுகை கூறப்படுகிறது. 'ஆண்மை இழந்திட்ட பாளையத்தார் ஆமைகளாகவே மாறிவிட்டார்'. எனவே, சக்காதேவி அருள் வேண்டும் எனக்கூறப்படுகிறது.

கட்டபொம்மு சக்காதேவியிடம் விடைபெறுதல் பாடல் 14,15 களில் கூறப்படுகின்றன. தீங்கனவு பற்றிய செய்திகள் வெள்ளையத்தேவனிடம் மனைவி வெள்ளையம்மாள் வழியே பாடல் 16,17 களில் எடுத்துரைக்கப்படுகின்றன. பாடல் 18இல் கட்டபொம்மு தப்பியமை, வெள்ளையத்தேவன் இறந்தமை, தானாபதிப் பிள்ளை பானர்மேனால் தூக்கிலிடப்பட்டமை ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. தொடர்ந்த வசனப் பகுதியில் பானர்மேன் கடுமையான சட்டங்களை விதித்தல் பற்றிக் கூறப்படுகிறது. அடுத்த பாடலில் ஆயுதம் யாரும் தூக்கலாகாது என ஆணை பிறப்பிக்கப்படுகிறது. பாடல் 20 இல் கட்டபொம்மு விசாரணைக்குட்படுதல் பற்றியும் வசனப் பகுதியில் தூக்குத் தண்டனை விதித்த பானர்மேன் பற்றியும் கூறப்படுகிறது.

பாடல் 21 இல் மக்கள் துயர்நிலை, 22 இல் கட்டபொம்மு எதிரிகளையும் அடிமைகளாய் போன தம் நாட்டவர்களையும், துரோகிககளாய்ப் போன தம் நாட்டவர்களையும் சபித்தமை கூறப்படுகிறது. பாடல் 23 இல் கட்டபொம்மு தூக்கிலிடப்பட்டமை கூறப்படுகிறது. தொடர்ந்து வாழ்த்து, (மங்கலம்) மாநிலம் வாழிய என முடிகிறது.

### 1.4.3.1 கட்டபொம்மு வில்லிசைப்பாடல் – கருத்து வெளிப்பாடு

குழந்தைப் பருவம் முதல் கட்டபொம்மு வரலாறு, வெள்ளையர்கள் சண்டையிட்டமை, கட்டபொம்மு தப்பித்தமை பின்னர் கண்டுபிடித்து விசாரணை செய்யப்பட்டு தூக்கிலிடப் பட்டமை எனும்படி கட்டபொம்மு வரலாற்றை உள்ளபடியே கூறும்முகத்தான் இவ்வில்லிசைப்பாடல் அமைந்திருக்கக் காணமுடிகிறது.

விடுதலைப் போரினை வீரபாண்டியக் கட்டபொம்மன் இந்த மண்ணில் விதைத்தமையைக் கூறி அந்த வழியே மக்கள் மீண்டும் விடுதலை வேட்கையை அவரவர்க்குள் விதைக்கவேண்டும் என்று

கட்டபொம்மு நமக்குக் கூறுவதாக இவ்வில்லிசைப்பாடல் அமைகிறது.

## 1.4.4. கட்டபொம்மு கூத்து *

நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மு கூத்தினை ஆண்டுக்கொரு முறை இன்றளவும் நடத்திவரக் காணலாம். இக்கூத்தில் தெலுங்கு மொழியும் இடையிடையே பயின்றுவரக் காண முடிகிறது. இதனைப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர் பலரின் துணையோடு ஆங்காங்கே அடிக்குறிப்புக்களில் மொழிபெயர்த்தும் தந்துள்ளார். பின் இணைப்பில் உள்ள கட்டபொம்மு நாடகம் நெல்லை மாவட்டத்தினர் ஆண்டுதோறும் (நாடகமாக) கூத்தாக பாஞ்சாலங்குறிச்சியில் நடத்திவருகின்றார்.

கட்டபொம்மு கூத்து (கதைப்பாடல்) எனும்படி பதிப்பாசிரியர் குறித்துள்ளார். கட்டபொம்மு கூத்து பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மு துரைக் கதை எனக்கூறி கதை தொடங்குகிறது. பின்னர்

தன்னானா தானனா தன்னன்னா
தன்னானா தானனா தன்னன்னா

எனச் சந்தநடையில் அமைந்த நாட்டுப் பாடல் வடிவில் கதைப் பாடல் (கூத்து) தொடங்குகிறது.

பிள்ளையார் துதியுடன் அமைந்துள்ள இதில், கட்டபொம்மு கதை யான் படிக்க

**கண்ணாலே பார்த்திட வேண்டுமைய்யா,**
**ஊமைத் துரைக் கதை நான் படிக்க**
**உண்மை உரைத்திட வேண்டுமய்யா**
**பாஞ்சாலத்தை யான் படிக்க**
**பக்கத் துணை செய்ய வேண்டுமைய்யா,**
**சக்கதேவிக் கதை நான் படிக்க**
**தயவு செய்திட வேண்டுமைய்யா,**

என்றும் சரஸ்வதி துதி, முருகன் துதி, சக்கம்மாள் துதி என அமைந்தும் கதை ஆரம்பமாகிறது.

---

* கட்டபொம்மு கூத்து நா.வானமாமலை (ப.ஆ.) மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகம் - 1972

பல்லாரி எனும் இடத்தில் வாழ்ந்த கம்பளத்தார் மழையின்றிப் பஞ்சத்தால் பாதிக்கப்பட, பஞ்சம் பிழைக்க வேண்டி ஆலோசிக்கின்றனர். செல்லபொம்முத் துரை, தம்பி காளை பொம்மிடஞ் சொல்லி பயணப் படுகின்றான். தென் திசை வரலாமா என சக்கதேவியிடம் குறிகேட்டுப் புறப்படுகின்றனர். குண்டூரு ராசாவிடம் செல்ல பொம்மு தன் குடும்பசகிதம் புறப்பட்டு என்னை ஆண்டவனே என்று கூறி

**பன்னீரு வருடமும் மாரியின்றி**
**பட்டது கஸ்டங்கள் கம்பளங்கள்**
**கஸ்டமடைந்திட மாட்டாமல்**
**மட்டிலா தெட்சனஞ்சென்றது காண்**
**கம்பளமுன் செலக் கண்டதனாலன்புள்ள நாங்களும்**
**செல்கிறோம்**

என விளக்கிட, மன்னார் கோட்டை ராஜா சக்கம்மாள் பக்கமிருந்தும் இந்தச் சங்கடமாகுமா மன்னவனே: சங்கடமில்லாமற் சென்றிடுவீர். சக்கதேவி துணை பக்கமுற என வழியனுப்பி வைக்கிறான். செல்லபொம்முத்துரை புறப்பட்டு குருமலை வந்தடைதல் - குருமலை சேர்ந்து ஆலோசிக்கின்றனர். காளை கட்ட பொம்மு சொல்கிறார். வேளாண்மையில்லை, விளைவுமில்லை வேந்தர்கள் காவலையல்லாமல், நஞ்சையுமில்லை, நடவுமில்லை ராஜாக்கள் காவலையல்லாமல், புஞ்சையுமில்லை, பொலிவுமில்லை பூவேந்தர் காவலையல்லாமல், காவலர் தம்மை வணங்கிக் கொண்டால் கண்டாலுந் துன்பங்கள் செய்யமாட்டார் என்று மனங்கொண்டு தங்கிவரும் போது குருமலைக்குப் பொறுப்பு வகித்து வரும் சின்னமுத்து, பெரியமுத்து ஆகிய சகோதரர்கள் ஆட்டையும் மாட்டையும் கொண்டு போயினர். நீதி வேண்டி ராசாவைக் கண்டு பேச செல்லபொம்முத்துரை எட்டயபுரம் போய்ச் சந்தித்து உத்தரவு பெற்றுக் கொண்டு இருப்பிடம் வந்து சேர்ந்து சில நாளையில் கொண்டபொம்முத்துரை பிறக்கிறார். செல்லபொம்முத்துரை புத்திரப் பெருமையுரைக்கிறார். பிறந்த சில நாளையில் கொண்டு பொம்முவுக்கு மணம் முடித்து வைக்கின்றார். கொண்டு பொம்முவுக்குக் கல்யாணம் நடந்த சில நாளைக்குப் பின் கட்டை வெட்டும் போது கட்டபொம்மு பிறந்ததனால் கட்டபொம்மு என்று பெயர் வைத்தனர். இத்துடன் ஊமைத்துரை முதலானவர்கள் பிறந்ததையும் சொல்கிறார்கள்.

கட்டபொம்மு, ஊமைத்துரை பிறந்தது வாலிபமான பின்னர் கொண்டுபொம்முத்துரை வழக்கபடி எட்டயப்புரத்திற்கு சங்கராந்திப் பொங்கலுக்குப் போக; கட்டபொம்முத் துரையிடம் எட்டயப்புரத்தாருக்கு அடங்கி வாழக் கூடாது என்கிறார். பேட்டியின் போது கட்டபொம்மும் ஊமைத்துரையும் வணங்காது மன்னரைக் காண்கின்றனர். அரசர் கோபம் எழுகிறது. கம்பளத்தார் வரவேற்பால் காலங்கழிக்கையில் கொண்டு பொம்முத்துரை காலஞ்சென்ற பின்னர் கட்டபொம்முத்துரை ஊமைத்துரை பராக்கிரமம் கொள்கின்றனர்.

*முன்முயல் சென்றிட பின்னே நாய் முடுக்க மேட்டுக்குப்*
*போனவுடன்*
*பின்னோடும் நாயை விரட்டுதுபார் முன்னோடுகின்ற*
*முயலே*
*நாயை முயல் வெற்றி கொண்டதனால் நாமிதில்*
*கோட்டைகள் போடவேண்டும் (34–35)*

என இருபேரும் அவ்விடத்தில் அடையாளம் போடுகின்றனர்.

வல்லநாட்டுப் பக்கம் வருகையில் சிறுபையன் அழும்குரல் கேட்கிறது. கொண்டையன் கோட்டை வம்சத்தில் பிறந்த அப்பையனுக்கு நீரில்லா இடத்தில் நின்று தாகம் எனக் கேட்க தண்ணீர் கொடுத்து பாதர் வெள்ளையென்று பட்டம் கொடுத்தனர். கூடவே அழைத்துச் சென்றனர். குறித்த இடத்தில் கோட்டை கட்டுகின்றனர். அப்போது கட்டக் கருப்பணன், சுந்தரலிங்கம், தானாபதி ஆகியோர் கட்டபொம்மு, ஊமைத்துரையுடன் இணைக்கின்றனர். அரசு புரிந்து வருகையில் பிற பாளையப்பட்டுக் காரர்கள் சென்னை ஆங்கிலேய அதிகாரிக்குக் கடிதங்கள் எழுத மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் மேஜர் துரைக்கு மேலிடம் உத்தரவிட்டதன் பேரில் கட்டபொம்முவைப் பேட்டி காண குற்றாலத்துக்கு அழைத்தான். சேனை வீரர்களுடன் கட்டபொம்மு புறப்பட்டுக் குற்றாலஞ் சென்று விசாரிக்க அங்கில்லை. திருச்சுழி வரை அலையச் செய்து கடைசியில் இராமநாதபுரத்தில் சந்திப்பு எனக் கூறினான். ஜாக்சன் ஏற்பாட்டை முன் கூட்டியே அறிந்த கட்டபொம்மு தன் படை வீரர்களையும் தயார் நிலையில் வைத்து உள்ளே சென்று பேட்டி கண்டார்.

*வானம் பொழிய முப்போகம் விளையுது மன்னன்*
*என் காணிக்கு ஏது பணம்*

**மாரிகள் பெய்தும் பெய்யாமலும் போவதை மாற்றுதற்கோ**
**கப்பம் வாங்குகிறீர்**

எனக் கட்டபொம்மு கேட்க சண்டை முற்றுகிறது. கிஸ்தி கொடுக்காத உன் கையிலே கிட்டிகள் போடுவேன் சட்டபடி என்று ஜாக்சன் துரை கூற, கோட்டையை விட்டு கட்டபொம்மு தப்பித்தான். தளபதி தானாபதிப் பிள்ளை தப்பிக்கவில்லை. வெள்ளையனுக்குத் திருமணம் செய்தவுடன் கொடுக்க வேண்டிய விமரிசையெல்லாம் செய்தவுடன் வல்லநாடு சென்றதும் தானாபதி கதை ஆரம்பமாகிறது. தானாபதி வேண்ட சென்னைத் துரைமார்களுக்கு இரக்கம் உண்டாகி தனாபதியை விடுவிக்கின்றனர். பாதர் வெள்ளைக்குக் கல்யாணம் செய்ததை நினைத்துச் சிறிது வருத்த முண்டாகியது பிள்ளைக்கு

ஊமத்துரை தானாபதிப் பிள்ளை இருவரும் திருச்செந்தூர் செல்கையில் ஒட்டப்பிடாரத்தில் சின்ன மெக்காலே பெரிய மெக்காலே ஆகியோர் சுற்றி வளைக்கத் திட்டமிட்டுள்ளதை யறிந்திட்ட கட்டபொம்மு நகரம் அச்சடித்து எச்சரிக்கை செய்தார். போர் வருகிறது தயாராய் வருக என • சுந்தரலிங்கம் வழி வெள்ளையத்தேவனுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. வெள்ளையன் தன் மனைவிடம் விடைபெறுகிறான்.

வெள்ளையம்மாள் மோசமான கனவுகள் கண்டதாகச் சொல்லி வெள்யைனைப் போருக்கனுப்பத் தடை செய்கிறாள். தடையை மீறிப் போருக்குச் சென்ற வெள்ளையன் மாண்டான். அக்கினிச் சென்னல் பட்டாளத்துடன் இரண்டாம் தடவையாய்ப் போர் தொடுத்தான். கட்டபொம்மு, நடுக்காடு, நத்தங்காடு தங்கிட நாகலாபுரம், எட்டப்பநாயக்கரின் வஞ்சனைக்குள்ளாகிறான். சிவகங்கை அடைக்கலம் புகுந்த கட்டபொம்மனுக்குச் சோதனைவர, வெள்ளையர் மோப்பத்திற்குள்ளாகி புதுக்கோட்டை செல்கிறான். அங்கு தொண்டைமானால் காட்டிக் கொடுக்கப்பட்டு கட்டபொம்மு கைதாகிறார். போகும் வழியில் கட்டபொம்முவும், ஊமைத்துரையும் பிரிகின்றனர்.

அக்கினிச் சென்னல் கட்டபொம்முவைக் கைது செய்து கல்வண்டியிலேற்றி கயத்தாற்றிலே புளிமரத்தில் தூக்கிலிட ஆணையிட்டபோது கட்டபொம்மு புலம்பினார்.

கட்டபொம்மு காலஞ்சென்றபின் ஊமத்துரை கன்னி வாடியில் பிடிபட்டு பாளையங்கோட்டையில் அடைக்கப் பட்டான்.

முன்றுப்பட்டி முத்தப்ப நாயக்கரால் சிறைமீண்டு தூத்துக்குடியில் கல்யாணஞ்செய்து மறுபடியும் மண்ணாலே கோட்டைகட்டி ஏழுவருடம் ஆண்டு வருகிறான்[34] அக்கினி மேஜர் ஆரக்குளத்தார் பட்டாளத்துடன் கூடாரமடித்தனர். அப்போது கருப்பவண்ணான் தன்னானே, தில்லாலே எனப் பாடிவருகிறான்.

கட்டபொம்மு சீமையிலே சோ சோ சோ
காரணங்கள் மெத்த உண்டாம் சை சை சை

எனப் பாடுகிறான். ஊமத்துரை அங்கு தப்பித்துவரப் பட்டாளம் வரும் இரகசியத்தை ஊமத்துரையிடம் வண்ணான் கூறுகிறான். தீச்சட்டி எடுத்தாடுகின்றனர். ஊமத்துரையை வெள்ளைம்மாள் காக்கிறாள். பின் பள்ளிகள் காக்கின்றனர். பின்னர் தற்கொலை செய்து கொண்டான் ஊமைத்துரை எனக் கட்டபொம்மு கதை முடிகிறது.

வட்டாரத் தெலுங்கு மொழியும் கலந்து வரும் இவர்களது கூத்துப்பாடலில் தமிழும் தெலுங்கும் கலந்து நின்று பொருள் தரத் தக்கதாகவும் சில வேளைகளில் பொருள் மயக்கம் தரத்தக்கதாகவும் அமைய நேர்கிறது. இக்கூத்துப் பாடலின் முதல் 20 அடிகளில்[35] மேற்சொன்ன சொற்கலப்பு நிகழ்ந்து தெளிவின்மை பெற்றுள்ளமையினை அறியமுடிகிறது.

### 1.4.4.1 கட்ட பொம்மு கூத்து–கருத்து வெளிப்பாடு

பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றையும், சக்காதேவி துணையையும், ஊமத்துரை வரலாற்றையும் பேசுவதே கட்டபொம்மு கூத்தின் நோக்கமாக அமைகிறது என்பதைச் சரசுவதி துதி, முருகன் துதிக்குமுன் கூறிடக் காண முடிகிறது.

கட்டபொம்முவின் முந்தைய பரம்பரை வரலாற்றையும் கட்டபொம்மும் ஊமத்துரையும் வீர மரணம் எய்தியமையையும் குறிப்பாய் எடுத்துக் காட்டுகிறது.

கட்டபொம்மு ஊமத்துரை வரலாற்றில் சக்காதேவி துணை பற்றியும், நாட்டுப்பற்று எண்ணத்தை கேட்போருக்கும்,

---

34 ஏழு வருடம் ஊமத்துரை ஆண்டான் என்பது வரலாற்று ரீதியில் தவறான செய்தியாகும். வண்ணான் கதை முதல் தற்கொலையானது வரை புனைந்துரைக்கப்பட்ட கற்பனைக் கதை ஆகும்.

35 காண்க பி.இ: மதுரை வீரன் கூத்துப்பாடல் நூல்.

பார்ப்போருக்கும் விளைவிக்க வேண்டி வெள்ளையத்தேவன் கதையும் கதையினூடே கூறப்படுகிறது.

ஊமத்துரையின் வரலாறுப் பற்றிக் கூறும்போது மிகைப்படுத்திய தன்மை ஆங்காங்கே காட்டப்படுகிறது. வண்ணான் இடம் பெறல், தீச்சட்டி ஆட்டம் இடம் பெறல், வெள்ளையம்மாள் இடம்பெறல் போன்றவை மிகையாய்க் காட்டக் காணமுடிகிறது.

## 1.5.0 மதுரை வீரன் – கட்டபொம்மு நாடகங்களும் அவற்றின் இன்றைய நிலையும்

சங்கரதாஸ் சுவாமிகள் பெயரால் இயங்கும் நாடக நடிகர் சங்கங்கள், மதுரை, திண்டுக்கல், மணப்பாறை, புதுக்கோட்டை, சென்னை எனப்பல்வேறு இடங்களில் உள்ளன. இங்கு இன்றளவும் விடிய விடிய சுவாமிகளது நாடகங்கள் நடைபெறுகின்றன. மதுரைவீரன், கட்டபொம்மு ஆகிய நாடகங்களும் இந்நடிகர்களால் நடிக்கப்பட்டு வருகின்றன.

மதுரைவீரன் நாடகம், கட்டபொம்மு நாடகம் ஆகிய இரண்டுமே மதுரை நாடக நடிகர் சங்கத்தினரால் பரவலாக நடைபெற்று வந்த நிலை இன்று மாறியுள்ளது. தற்போது மதுரை வீரன் நாடகம் மதுரையில் உள்ள நாடக நடிகர் சங்கத்தாரால் நிகழ்த்தப்படுவதில்லை. மாறாக, திண்டுக்கல், மணப்பாறை பகுதிகளில் உள்ள நாடக நடிகர் சங்கத்தாரால் திண்டுக்கல், கரூர், மணப்பாரை, திருச்சி ஆகிய சுற்றுவட்டாரங்களில் மதுரை வீரன் நாடகம் நடத்தப்படுகின்றது.

இதுபோலவே வீரபாண்டியக் கட்டபொம்மு நாடகம் மதுரைப் பகுதிகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. குறிப்பாய் மதுரைவீரன் நாடகம் திண்டுக்கல் பகுதிகளிலும், கட்டபொம்மு நாடகம் மதுரைப் பகுதிகளிலும் இன்று நிகழ்த்திடக் காணமுடிகிறது. இடைக்காலத்தில் இருநாடகங்களும் இருபகுதி களிலும் நடத்தி வந்திருக்க; இன்று இந்நிலை மாறியுள்ளது. இதற்கான பின்னணியைப் பார்க்கும் போது இந்நாடகங்கள் ஏன் இரு வேறு பகுதிகளில் மட்டும் என ஆகிவிட்டன என அறிய முடியும். இந்நாடகங்கள் வழியே இன்று சாதியம் போதிக்கப் படுகிறது எனக் கருத்துக் கொள்ள முடிகிறது. மதுரை வீரன் நாடகம் சக்கிலியச். சமூகத்தாருக்கும் கட்டபொம்மு நாடகம் தேவர் சமூகத்துக்கும் எனவாகியுள்ளது.

கட்டபொம்மு நாடகம் நடத்தினால் நிறையச் சம்பளம் கிடைக்கிறது. மதுரைவீரன் நாடகம் நடத்தினால் குறைந்த சம்பளம்

கிடைக்கிறது என நாடகக் கலைஞர்கள் கூறுகின்றனர்.[36] இக்கூற்று உண்மையே. கட்டபொம்மன் நாடகத்திற்குச் சம்பளம் 200 லிருந்து 3500 வரை ஆகிறது. மதுரைவீரன் நாடகத்திற்கு 1500 முதல் 2500 வரை ஆகிறது. காரணம், தேவர் சமூகத்தார் நடத்தும் கட்டபொம்மு நாடகத்திற்கு அச்சமூகத்தார் நிறையப் பணம் ஊர்வசூலிருந்து பெற்று அளிக்க முடிகிறது. சக்கிலியர் சமூகம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். பொருளாதார ரீதியிலும் குறைந்த சமூகத்தார் ஆவர். இவர்களது குடியிருப்புக்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையும் குறைவு. எனவே, பொது வசூலும் குறைவாகயையால் குறைந்தக் கட்டணத்திற்கே மதுரைவீரன் நாடகம் நடைபெறுகிறது.

இன்றளவும் தேவர் சமூகம் மதுரை மாவட்டப் பகுதிகளில் எண்ணிறைந்திருக்கின்றனர். தேவர் பேரவை ஆங்காங்கு அச்சமூகத்தார் வைத்துள்ளனர். முத்துராமலிங்கத் தேவரைத் தம் இனத்தலைவராகக் கொண்டு ஆங்காங்கு தேவர் சிலைகளும் நிறைந்த அள்வில் வைத்துள்ளனர். திண்டுக்கல்தான் தோல் வியாபாரம் சிறப்பாக நடைப்பெற்றுவரும் முக்கியத்தளம் ஆகும். தோல்களிலிருந்து செருப்புத் தைக்கும் தொழில்தனைக் கொண்ட சக்கிலியர் மதுரைப் பகுதியோடு ஒப்பிட திண்டுக்கல், ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல் பகுதிகளிலேயே நிறைந்து காணப்படுகின்றனர்.

நாடகநடிகர் சங்கங்களில் உள்ள நடிகர்களில் பலர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லர்[37] சினிமாக்களில் நடிகர் நடிகைகள் தங்களுக்கு ஒரு சமூக மதிப்பு இருப்பதாகக் கூறுவது போன்று இந்நாடக நடிகர்களும் நடிகையர்களும் ஒரு சமூக மதிப்புப் பெற்றிருப்பதாகத் தங்களைத் தாங்கள் உணர்வதால்,

---

36 கே.வி. ஜோதி மாணிக்கம், நடிகர், தேனி நடிகர் சங்கத்தவர் கூற்று

37 திண்டுக்கல் நாடக நடிகர் சங்கத்தில் மொத்தக் கலைஞர்கள் 300
ஆண் கலைஞர்கள் 250
பெண் கலைஞர்கள் 50
தாழ்த்தப்பட்ட சமூகத்துக் கலைஞர்கள் 70
ஏனைய நாயக்கர் சமூகத்தார் பிறர் 30
என பொதுவாக இக்கணக்கு அமையலாம். நடிகர் சங்கத்தில் திரு. பெருமாள். ஆர்.எஸ். சுந்தராசன், தயாளன், பாக்கியநாதன், தமிழ்ச்செல்வன் (உபதலைவர்) ஆகியோருடன் கலந்துரையாடிய போது கிடைக்கப் பெற்ற தகவல் (நாள் 23 - 5- 92)

சமூகத்தில் குறைந்த சாதியினரான சக்கிலியர் இனத்து மதுரைவீரனாக நடிக்க முன்வருவது இன்று கலைஞர்களுக்கு உகந்ததாக இல்லை. இதனால் நடிகர்கள் பலர் மதுரைவீரன் நாடகத்தை நடிக்க முன்வருவதில்லை

பொம்மி : ஒரு சக்கிலியன் மகனுக்கு என்ன தைரியம், என்ன துணிவு, என்ன திமிறு, எவ்வளவு அக்கிரமம், என்ன அகம்பாவம் என்ன ஆணவம், என்ன துடுக்கு, எவ்வளவு கொழுப்பு, முத்துவீர அரசகுமாரி நான் தங்கும் குடிசையிலே அற்ப மாதிகன் மகனாகிய உனக்கும் இடமா. ஏதேது என்ன துணிச்சலடா உனக்கு, என்ன ஜாதி என்பதை மறந்துவிட்டாயா?

(பாட்டு - தர்க்கம்)
என்ன தைர்யமடா - இது

ஏற்காது மேற்சாதி - பார்க்காது பேசுகிறாய் உனக்கு (என்ன)[38]

இதுபோன்றுள்ள வசனங்களை மதுரை வீரன் நாடகத்தில் பாத்திரமேற்று நடிக்கும் நடிகர் சமூகரீதியில் நடைமுறையை வைத்து நடிக்க முன் வருவதில்லை 'ஒரு பெண் (பொம்மி) அடா, சக்கிலியன் - என்ன தைர்யமடா என்றெல்லாம் உள்வாங்கிக் கொண்டு நடிக்க பல கலைஞர்கள் இன்று முன்வருவதில்லை.

மதுரை வீரன் சாமியை இன்று நடைமுறையில் சக்கிலியச் சமூகம் தவிர்த்த பிற சமூகத்தார் தெய்வமாக அங்கீகரிப்பதில்லை. மேலும் குலசாமிகளாக வணங்குவதும் இல்லை என்பதும் இங்கு எண்ணுதற்குரியது.

கட்டபொம்மு நாடகத்தில்[39]

38 ஒரிஜினல் மதுரை வீரன் நாடகம் (தாய் ஏடு) (கையெழுத்துப் படியான இப்பிரதி அளவில்பெரிதாகையில் இதில் ஒரு சில பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. (மதுரை வீரன் நாடகம் பதிப்பிக்க பெறவில்லை) V.A. பெருமாள் (நடிகர் - நாடக ஆசிரியர்) தென்னம்பட்டி வழி மதுரை மாவட்டம் 624802
எழுதி முடித்த நாள் 23-6-79 காண்க. பி.இ.

39 சங்கரதாஸ் சுவாமிகள் நாடக வடிவத்தில் கட்டபொம்மு கதை முதல்பாகம். இது நாடகத்தை ஒலிப்பதிவு செய்து அதிலிருந்து எடுத்தெழுதப்பட்டதாகும்
காண்க. பி.இ. பக்க. 96
மதுரை - ஊமச்சி குளம் அருகேயுள்ள கூழப்பாண்டியில் எடுக்கப் பட்டது. 22-4-92

'எட்டுத் திசையும் பதினாறு கோடமும்
வெட்டி ஜெயங் கொண்டவன் கட்டபொம்மன் – அம்மா
என்னென்ன சண்டையைச் சொல்வேன் தாயே – அம்மா
எங்களை ஆண்டவளே சக்கதேவி
தனக்கு நிகரில்லை என்று சொல்லி
தனி அரசு நானும் புரிந்து வாரேன்
எதிரிக் கொருவரும் இல்லை என்று நானும்
இருந்துமே அரசாட்சி புரிந்து வாரேன்

### வசனம்

'தாயே! சக்கதேவி!....... நீதிக்குத் தலைவணங்கி நிற்கிறேன். இந்த மண்ணை....! நம்பியிருக்கிறேன் உன்னை! கைவிட்டு விடாதே'

எனும்படி வீரனாகவும், நாட்டுக் குழைத்தவனாகவும், தியாகியாகவும் காட்டி நிற்கும் பாத்திரத்தை ஏற்று நடித்து இருக்கும் சமூக மதிப்பினை இன்னும் கூட்டிக்கொள்ள நடிகர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

தேவர் சமூகத்தில் ஒரு எழுச்சிக் காலகட்டமாகப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் காலத்தைக் கூறுவர். இவர் தம்இனம் குற்றப்பரம்பரையாக அரசு கொண்டிருந்த நிலையை மாற்றக் காரணமானவர். இதன் வழியே தேவர் சமூகம் கூடுதலாகச் சமூக மதிப்பினைப் பெற்றது. இக்கால கட்டத்தில் ஆங்காங்கே தேவர் சமூகத்தாருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்குமிடையே சாதி ரீதியில் சிறு சிறு முரண்கள் ஏற்பட்டன.

கட்டபொம்மு நாடகத்தில் வெள்ளையத்தேவன் தேவர் சமூகத்தவன் என்பதால் அவனைத் தேவர் சமூகம் தம் சமூகத்தலைவனாக்க வேண்டி கட்டபொம்மனை விட வெள்ளையத் தேவன் பகுதியே பெரிதும் நடித்துக்காட்டப்படும் சூழலை மதுரை மாவட்டத்தில் நடக்கும் நாடகங்களில் இன்றளவும் காண முடியும்[40]

---

40 24-5-92 அன்று மதுரை மாவட்டம் திருப்புவனம் அருகேயுள்ள அல்லி நகரம் கிராமத்தில் நடைபெற்ற கட்டபொம்மு நாடகத்தின் இடையிடையே தேவர் பாடல்களை (முத்துராமலிங்கம்) நடிகர்கள் பாட பார்வையாளர்கள் போய் பரிசுகள் வழங்கிடக் காண நேர்ந்தது. மதுரை மாவட்டத்தை மையமாய் வைத்து 1992 இல் 500 நாடகங்கள் 'கட்டபொம்மு' நடந்துள்ளன. 24-5-92 அன்று நடந்த நாடகத்தில் மொத்தம் 14 கலைஞர்கள் பங்கேற்றனர். இதில் 10 பேர் தேவர் சமூகத்தவராயிருந்தனர். மீதமுள்ள 4 பேரும் பிள்ளைமார் சமூகத்தவர் ஆவர்.

இப்போக்கு நெல்லை வ.உ.சி மாவட்டங்களில் நடைபெறும் கட்டபொம்மு கூத்து நாடகங்களில் இல்லை. மாறாக, கட்டபொம்மு பெரிதும் போற்றப்பட்டு வரலாற்றில் வெள்ளையத் தேவனுக்குள்ள பாத்திரத்தை மிகைப்படுத்தாமல் காட்டக் காணமுடியும்[41]

1955 இல் தீண்டாமைக்கான சட்டம் இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட பிறகு சக்கிலியன், பறையன் எனும் தாழ்த்தப்பட்ட மக்களின் சாதி குறித்து இழிவாக எவரும் பேசக்கூடாது என ஆனது. மதுரை வீரன் நாடகத்தில் சக்கிலியன் எனும் சொற்கள் இயல்பாகப் பாத்திரங்களால் பேசப்படுவது தடைசெய்யப்பட்டது. இதனாலும் இந்த நாடகம் பல இடங்களில் பரவலாக நடைபெறத் தடை ஏற்பட்டது என்பதைச் சமூகப் பின்னணியில் அறிந்து கொள்ள முடிகிறது.

## கட்டபொம்மு – நாடகப்பகுதிகள்

1. கட்டபொம்மு எட்டயபுரத்தாருக்கு 96 கிராமங்கள் தானம் கொடுத்தல், வரிபெற்றுவரல்

2. ராமநாதபுரம் மீட்டிங், நெல்கொள்ளை, ஒட்டபிடாரம் வரல்

3. போருக்குச் செல்லல், கட்டபொம்மு, ஊமைத்துரை புறப்படல், வெள்ளையத்தேவன் - வெள்ளையம்மாள் சந்திப்பு

4. வெள்ளையத் தேவனுக்கு உயிரோடு இறுதிச்சடங்கு செய்து வெள்ளையம்மாள் காணுதல், போருக்கு வெள்ளையம்மாள் அனுமதி வழங்கல், வெள்ளையத்தேவன் சாதல்

5. ஊமைத்துரை தப்பித்தல் - பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கட்டுதல் (ஊமையங்கோட்டை நாடகம்)

6. ஊமையன் தூக்கிலிடப்படல்

என்பதான 6 பிரிவுகளில் கட்டபொம்மு நாடகம் அல்லது கூத்து நடைபெறுவதுண்டு. எனினும் மதுரை மாவட்டத்து நாடக நடிகர் சங்கத்தில் தற்போது இதில் காட்டப்பட்டுள்ள 4வது பகுதியையே

---

41 கட்டபொம்மு நாடகம் நடிக்க இன்று தேவர் சமூகத்தவர்கள் நிறைய முன் வருகின்றனர். தகவல் எம்.ஜி. ரவீந்திரன் வயது 45, தொண்டையூர், இளையான்குடி, பசும்பொன்தேவர் மாவட்டம்.

நடத்தி வருகின்றனர். வெள்ளையத்தேவன் சிறப்பைக் காட்டுவதே நோக்கமாக அவர்களுக்கு அமைகிறது.[42]

துணைப் பாத்திரங்களைக் கோமாளி, தாளக்காரர் ஆட்டப்பெண் போன்றோர் எடுத்துக் கொள்கின்றனர்.

கன்னிவாயைச் சேர்ந்த உடுமைலைச்சரவம் முத்துச்சாமி கவிராயர் தெலுங்குச் செட்டியார். இவரே மதுரைவீரன் நாடகத்தை

---

42 எம். குமாரராமன், சக்காதேவி கிராமியக்கலைக் குழு, கோடாங்கிப்பட்டி, தகவல் பெற்ற நாள்: 22-5-92.

* பழம் பெரும் நாடகக் கலைஞர் சிவதானு அவர்களிடம் பெற்ற செய்திகள் (நேர்காணல் வழி) 25-5-92)

* **மதுரை வீரன் நாடகத்தில் ஊதியம்**

| | |
|---|---|
| 1. ராஜபார்ட் நடிகர் | - 300 |
| 2. பொம்மி | - 300 |
| 3. ஆர்மோனியம் | - 200 |
| 4. தபேலா | - 200 |
| 5. ஆட்டப்பெண் | - 250 |
| 6. கோமாளி | - 250 |
| 7. ஆம் நிலை நடிகர் | - 250 |
| 8. தாளம், தபேலா | - 100 |
| 9. சீன்செட் | - 075 |
| | 1925 |

* **கட்டபொம்மு நாடகத்தில் ஊதியம்**

| | |
|---|---|
| 1. கட்டபொம்மு | - 300 |
| 2. வெள்ளையம்மாள் | - 300 |
| 3. ஊமைத்துரை | - 200 |
| 4. வெள்ளையத்தேவன் | - 250 |
| 5. ஆர்மோனியம் | - 200 |
| 6. கோமாளி | - 200 |
| 7. ஆட்டப்பெண் | - 250 |
| 8. தபேலா, தாளம் | - 100 |
| 9. சீன்செட் | - 100 |
| | 1900 |

முதலில் எழுதியவர் (1910-1920). இவர் நாட்டுப் புறக்கதையிலிருந்து மதுரைவீரன் நாடகம் செய்தவர்.

மதுரை வீரன் நாடகம் சங்கரதாஸ். சுவாமிகளால் எழுதப் பெறவில்லை.

முத்துச்சாமி கவிராயர் மாணவர்களே பூமிபாலகதாஸ், உடுமலை நாராயணகவி ஆவர்.

சங்கரதாஸ் சுவாமிகள் முத்துச்சாமி கவிராயர் இருவரும் ஒரு சாலை மாணவர்கள், சந்தச்சரபண்ட மாருத கௌமாரமடம் தண்டபாணி சுவாமிகள் இடம் இவர்களிருவரும் தமிழ் இலக்கணம் பயின்றவர்கள்.

மதுரைவீரன் அஸ்டதிக்க பாலகர்களில் ஒருவன் காம இச்சையால் பூசையைக் காலதாமதமாகச் செய்தமையால் சாபம் பெற்றுப் பூலோக வாழ்க்கை வாழ நேர்ந்தது. அவனே மதுரைவீரன். பொம்மி, வெள்ளையம்மாள் ஆகியோரைச் சிறையெடுத்தமையும் இந்தக் கருத்துடன் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. எனினும் பாலியல் தொடர்பில் இந்நாடகம் அமைகிறது. நாடகம் நடக்கும் மேடைகளிலும் பாலியல் தொடர்பான கருத்துக்கள் பல்வேறு பாத்திரங்கள் வழியே விளக்கக் காணமுடிகிறது.*

செல்லி: தானாக நானிங்கே படுக்க – புருஷன்
சக்கிலியக் கருப்பி வீட்டுக்கே போயிடுறான்
விடிய விடிய விளக்கு – ரெண்டு
வீட்டுக்குள்ளே அதுபாட்டுக்கு எரியுது
இப்படியே தினஞ்செய்தா – பிள்ளைக்குட்டி
எப்படி உண்டாகும்?

பண்ணையார்: போபுள்ளே – எனக்கு எப்பவும் கொஞ்சம் இளகின மனசு. என் முன்னலே யாரும் பொம்பளை பிள்ளைகள் அழுதால் எனக்கு குபுக்குனு இறங்கிடும்

'நெஞ்சுவலிச்சா குஞ்சு வலிக்கும்'. என்றன் உன்றன் அவ்வுசாமி என்பன போன்ற வார்த்தைகளும் இடம்பெறக் காணமுடிகிறது.

நாயக்கர் சமூகத்தாரும் ஒரு சில இடங்களில் நடத்துகின்றனர். நாயக்கர் சமூகத்தாரைக் கீழாகப் பேசுவது இல்லை என்பதால் எதிர்ப்பு வருவதில்லை.

* (காண்க. பி.இ. மதுரைவீரன் நாடகம்)

**இதுகாறும் கண்டுள்ளதன் சுருக்கம்:**

தாலாட்டுப் பாடல்கள் குடும்ப உறவு முறையாளர்களின் உறவு முறைகளைச் சுட்டும் நோக்கம் கொண்டிருப்பது இயல்பு. ஒப்பாரிப்பாடல்கள் வாழ்ந்து மடித்தவர்களின் வாழ்க்கை நிலையின் மேன்மைகளைச் சுட்டுவதாய் அமையும். கும்மிப்பாடல்கள் சிறு தெய்வங்களிடம் வேண்டுவதாயும், புகழ்ந்துரைப்பதாயும் அமையக் காணலாம். பாடல் வடிவங்கள் தொடக்க காலத்தில் குழும நிலையில் மக்களால் உருவாக்கப்பட்டுள்ளன. கதைக்கூற்று முறை, வர்க்க வேறுபாடுகள், ஒரு செய்தி அல்லது கருத்து என்பது அக்காலக்கட்ட மக்களிடம் விளைவித்த பாதிப்பு நிலை, யார் யாருக்கு, யாரால் அவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன எனும் நோக்கங்கள், சாதி, மதம், இனம், வயது, அரசியல், தலை முறைகளின் உள்வாங்கல், எதிர்கொள்ளல், மரபுவழித் தொடர்ச்சி போன்றவை களால் ஒரு கருத்து பல்வேறு வடிவங்களில் அதாவது கதை, கதைப்பாடல், பாடல், கூத்து, நாடகம் எனக் கலை இலக்கிய வகைகள் உருப்பெறுகின்றன.

சிறு தெய்வங்களைப் போற்றும் கும்மிப்பாடல்களில் ஆங்கிலேயர் வருகைக்குப்பின் சிவகங்கை கும்மி, கட்டபொம்மு கும்மி என வரலாற்றுக் கதைப் பாடல்கள் கொண்ட 'கும்மிகள்' வடிவம் பெற்றுள்ளன. இதுபோலவே சிறிது நேரம் விளையாடக் கூடிய அம்மானைப் பாடல் வடிவம் கிபி. 17, 18 ஆம் நூற்றாண்டுகள் வாக்கில் நீண்ட நேரம் நிகழ்த்தக் கூடியதாகத் திருவானைக்காவல் அம்மானை (வீரமாமுனிவர்) இராமயன் அம்மானை, வீரய்யன் அம்மானை எனப் பல அம்மானைப் பாடல்கள் உருப்பெற்றுள்ளன.

மன்னர் குடியில் பிறந்து, சக்கிலியக் குடியில் வளர்ந்து, இரு ம்ன்னர் மகளை மண முடிக்க முயன்ற மதுரை வீரன் தண்டிக்கப் பட்டுச் சாகடிக்கப்படுகிறான். இறந்தவன் நாயக்கர் குலத்தாருக்கும் (மன்னர்), சக்கிலியர் (தாழ்த்தப்பட்ட) குலத்தாருக்கும் உறவுடையவன் ஆகி இருபாலரும் வணங்கும் தெய்வ நிலை பெறுகிறான் எனக்காட்ட வந்தது மதுரை வீர சுவாமி கதைப்பாடல் ஆகும். ஆனால், நடைமுறையில் தாழ்ந்த குலத்தவர் மட்டுமே மதுரை வீரனைக் குல தெய்வமாகப் பாவிக்கிறார்களேயன்றி நாயக்கர் குலத்தவரோ அல்லது பிற இனத்தவரோ மதுரை வீரனை குல தெய்வமாக வணங்குவது நடைமுறையில் இல்லை.

சக்கிலியப் பெண்ணின் மடியில் வளர்ந்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினனாய்ச் சமூகத்தில் முத்திரை குத்தப்பட்ட மதுரை வீரன்

பொம்மணன் மன்னன் மகள் பொம்மி மீது காதல் கொள்கிறான். அவளும் காதலிக்கிறாள். சாதிக் குறைவு ஆன போதும் எவ்வளவு எதிப்புக்கள் வரினும் காதலித்தவளை, நம்பியவளை மணமுடித்திட வேண்டும் எனும் கருத்து இதில் வலியுறுத்தப்படுகிறது. ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் அதாவது இளையோருக்குக் காதல் உறவு, கல்யாணம் போன்ற உறவு முறைகளுக்கு மதுரை வீரன் என்றும் துணையிருப்பான் என மதுரை வீரன் அம்மானையில் வலியுறுத்தப்படுகிறது.

உடுக்கடிக்கதைப் பாடலில் அரிய தவத்தால் பெறப்பெற்ற (மதுரைவீரன்) குழந்தை என்றும், காட்டில் விடப்பட்ட குழந்தைக்கு நாகப் பாம்பு காவல் தெய்வமாக இருந்தது என்றும், பொம்மியை வீரன் காதல் கொள்ளும் போது சாதகமாகக் காளி துணை நின்று மதுரை வீரன் மன்னன் மகன்தான் என்று பூர்வீகம் உரைத்தது என்றும், கள்ளர்களை ஒழிக்கும் மாவீரம் பெற்றவன் மதுரை வீரன் என்றும், தொடர்ந்து மனிதத் தன்மையிலிருந்து உயர்ந்து தெய்வ நிலை பெற்றவன் வீரன் என்றும் காட்டும் நோக்கம் மதுரை வீர சுவாமி உற்பத்தி பூசாரி (உடுக்கடி) பாட்டுக்கு உண்டு என அறிய முடிகிறது. எல்லாவற்றையும் விட உடுக்கடித்துப் பாடுதல் பூசாரிக்கு உரியது. உடுக்கடிக் கதை நிகழ்வு பெரும்பாலும் சாமி தளங்களில் நடைபெறுவதற்கு உரியது. மீனாட்சியம்மன் வாசலில் வீரன்சாமி முன்பூசைக்கு உரியது எனும்படி 'மதுரை வீரன்' எனும் பெயரிலேயே உடுக்கடிப்பாடல் அமைந்துள்ளமையும் இங்கு எண்ணுதற்குரியது.

மதுரை வீரன் கூத்து வடிவத்தில் முழுமைப்பகுதிகள் கிட்டவில்லை. வேறு எங்கும் மதுரைவீரன் கூத்து நடத்தப் படுவதாகத் தகவல் இல்லை. ஈரோட்டிலிருந்து தீப்பந்தம் கட்டி கூத்துப் பாடல், ஆடல் பயிற்சி அளிக்க வரும் ஆசான் (காண்க. பி.இ. மதுரை வீரன் பற்றிய செய்திகள்) இறந்துவிட்ட நிலையில் வெட்டுக்காடு புதூரில் வசிக்கும் வயதான ஓரிருவர் மட்டுமே கூத்துப் பாடல்கள் ஒன்றிரண்டு மட்டும் முறைமை திரிந்த நிலையில் பாடுகின்றனர்.

தீப்பந்தம் சுட்டுவது, மண்டிநிலை போட்டு சடங்குசெய்வது, பாடுவது, வைக்கோல் கொண்டு மதுரை வீரன் செல்லும் குதிரை (பொய்யான) செய்வது, கூத்தரங்கு வடிவமைக்க கொட்டகை போடுவது, பாடல் பாடி முடித்ததும் ஒவ்வொரு பாத்திரமும் மதுரை வீரன் சாமிக்குத் தீப ஆராதனை செய்வது என்பதான

சடங்குகள் மட்டுமே எஞ்சியுள்ளன. கிட்டத்தட்ட மதுரை வீரன் கூத்து நசிந்து விட்டது என்றே கூறலாம்.

மதுரை வீரன் இழிந்த சொற்களால் அதாவது கீழ்நிலைச் சாதியான சக்கிலியன் எனப் பேசுவதோ, இரு பெண்களைச் சிறையெடுத்தது பற்றி விமர்சனம் செய்வதோ, மதுரை வீரனுக்கு மாறுகால் மாறுகை வாங்கப்பட்ட தண்டனை பற்றியோ பேசப்படாமல் கூத்து நடைபெறுகிறது. 'மதுரை வீரன் சாமியே வந்து சக்கிலிச்சிப் பாலைக் குடித்து வளர்ந்தது' என்று பெருமை பேசிக்கொள்ளும் இச்சக்கிலியக் குடியினர் நடத்தும் வீரன் கூத்து, மதுரை வீரன் சக்கிலியர் குலத்தலைவன்; அவனே சக்கிலியர் குல தெய்வம் எனும் கருத்தினை வலியுறுத்துவதாகவே அமைகிறது.

வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடலில் வரலாற்றை அப்படியே விளக்குவது எனும் நோக்கம் வெளிப்படுகிறது. கட்டபொம்முவுக்கும் அவனது ஆட்சிக்கும் ஆங்கிலேயர் தொடர்ந்து வீணான தொல்லை கொர்டுத்தனர் என்று காட்டி கட்டபொம்முவின் வரி கட்டாதன்மை நியாயமானது என்றும் காட்டுகிறது.

நாயக்கர் இனத் தலைவனான கட்டபொம்முவுக்கு தேவர் சமூகத்தாரும், பிள்ளை இனத்தாரும் உற்ற துணையாய் பேதமின்றி நாட்டுப்பற்றுடன் உழைத்த பெருமையைக் காட்ட முயன்றுள்ளது இக்கதை. கட்டபொம்முவின் ஆட்சியில் ஒரு பக்கம் நம்பிக்கைக்குரியவர்களும் மறுபக்கம் வெள்ளையர்களும், அவர்களுக்குக் கூலிப்படையாகப் பணி செய்த எட்டப்பன், புதுக்கோட்டை மன்னர் ஆகியோர் எரிச்சலோடு தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளனர். மொத்தத்தில் விடுதலை உணர்வைப் போற்றுவது முக்கிய நோக்கமாக இதில் வெளிப்படக் காண முடிகிறது.

குடும்பப் பற்றும் நாட்டுப் பற்றும் மோதி ஏதேனும் ஒன்று கட்டாயம் தவிர்க்கப்பட்டாக வேண்டும் எனும் நிலையைக் காட்டுவதைக் கட்டபொம்மு ஒப்பாரியில் காண முடிகிறது. இதில் வெள்ளையத்தேவனும் (கட்டபொம்முவின் படைத்தலைவன்) மனைவி வெள்ளையம்மாளும் சந்திக்கும் இக்கட்டான நிலை காட்டப்பட்டு இதன் வழியே பொதுநல வாழ்வைச் சுட்டுவது நோக்கமாகிறது. கூடுதலாக, இதில் வீரம் பொருந்திய வெள்ளையத் தேவன் வீரத்துக்குரிய இனமான தேவர் சமூகத்துக்குச்

சொந்தக்காரன் என்றும் கட்டபொம்மு வரலாற்றில் வெள்ளையத் தேவனின் நட்பு, தியாகம், வீரம் ஆகியவற்றுக்குக் கணிசமான பங்குண்டு என்றும் காட்டுவதோடு தேவர் சமூகத்தலைவனாகவும் அழுத்திக் காட்ட முற்படுகிறது.

விடுதலைப் போரில் மடிந்த விடுதலை வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மு என்றும், கட்டபொம்முவின் பிறப்பு, வளர்ப்பு, நீதிக்காக வெள்ளையர்களுடன் போரிட்டமை, நாட்டுக்காக வீரமரணம் எய்தியமை போன்ற உண்மைச் சம்பவங்கள் வரைலாற்றுக் கதையாக அப்பகுதி மக்கள் (நெல்லைப் பகுதி ) கலை வடிவங்களில் பெரிதும் விளங்கும் வில்லிசைப் பாடல் வழியே கூறப்படுகிறது. மண்ணின் கலை வடிவம் அம்மண்ணின் பாரம்பரியம், பண்பு போன்றவற்றைக் கொண்டிருப்பது இயல்பு. இந்த இயல்பு நிலை வில்லுப்பாட்டின் நோக்காக அமையக் காணலாம்.

கட்டபொம்மு கூத்துதனில் கட்டபொம்மு வரலாறு, தம்பி ஊமைத் துரை வரலாறு அவர்களிருவரும் கொண்ட நாட்டுப் பற்று ஆகியனவற்றை காட்டுவது நோக்கமாகிறது.

வண்ணான் இடம் பெறல், தீச்சட்டி ஆட்டம் இடம் பெறல், வெள்ளையம்மாள் இடம்பெறல் போன்ற சம்பவங்கள் ஊமைத்துரை வரலாற்றைக் கூறி வரும் போது மிகைப் படுத்தப்பட்ட செய்திகளாக அமைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து தம் மண்ணுக்கு உரிய நாயகர்களை மேம்படுத்திக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு கூத்து அமைந்துள்ளது எனக் கருத முடிகிறது.

மதுரை வீரன் - கட்டபொம்மு நாடகங்களும் அவற்றின் இன்றைய நிலையும் பற்றிய பகுதியில் சங்கரதாஸ் சுவாமிகள் பெயரில் இயங்கும் அதாவது அவரது பெயரில் அமைந்த நாடகங்களை நடித்து வரும் தொழிற் கலைஞர்கள் சங்கதாஸ் சுவாமிகளால் எழுதாப்படாத கட்டபொம்மு, மதுரை வீரன் ஆகிய இரு நாடகங்களையும் எந்தக் கருத்தினை வெளிப்படுத்திட நடிக்கின்றனர் என அறிய முற்படுகிறது.

மேற்சொன்ன வீரன், பொம்மு ஆகிய நாடகங்களும் தொடக்க காலத்தில் தமிழகத்தின் மதுரை, நெல்லை, முகவை, கோவை, திருச்சி, பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் நடிக்கப்பெற்றன. ஆனால் இன்று

வீரன் நாடகம் திருச்சி, சேலம், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கரூர் போன்ற பகுதிகளில் மட்டுமே நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பாகச் சக்கிலியர் சமூகத்தவரே நாடகத்தில் பெரிதும் பங்கேற்பவர் களாகவும் பார்வையாளர்களாகவும் உள்ளனர்.

கட்டபொம்மு நாடகத்தை இன்று, நெல்லை, தூத்துக்குடி, இராமநாதபுரம், மதுரை ஆகிய பகுதிகளில் மட்டும் நடத்துகின்றனர். குறிப்பாக மறவர் (தேவர்) சமூகத்தவரே பொம்மு நாடகத்தை நடத்துபவர்களாகவும் நாடகத்தில் வேடமேற்று நடிக்க முன்வருபவர்களாகவும் உள்ளனர். பல பிரிவுகளில் கட்டபொம்மு நாடகத்தினை ஒருகாலத்தில் நாடகம் நடத்தி வந்தவர்கள் இன்று வெள்ளையத்தேவன், ஊமைத்துரை, கட்டபொம்மு, வெள்ளையம்மாள் பங்குபெறும் பகுதியை மட்டுமே நாடகமாய் நடத்த முன் வருகின்றனர் (காண்க. பி.இ. உள்ள கட்டபொம்மு நாடகம் - பகுதிகள்)

நெல்லை, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் பொம்முவின் அனைத்துப் பகுதிகளையும் நாடகங்களாக நிகழ்த்துகின்றனர். மதுரை இராமநாதபுரம் பகுதிகளில் மறவர் சமூகத்தவர் வெள்ளையத்தேவன் வெள்ளையம்மாள் இடம் பெறும் பகுதியை மட்டும் மேடையில் நிகழ்த்துகின்றனர்.

மேற்சுட்டிய வீரனையும், பொம்முவையும் சாதியத் தலைவர்களாகக் கொண்டு அவரவர் பகுதிகளில் நாடகம் நிகழ்த்துகின்றனர். முத்துராமலிங்கத் தேவர் வருகைக்குப் பின்னரே தேவர் சமூகத்தார் தமக்கான சமூகத்தலைவனாக அடையாளம் கொண்டு வெள்ளையத்தேவன் இடம் பெறும் பகுதியை கட்டபொம்மு நாடகத்தில் நடிக்கின்றனர். சாதிய அடையாளம் காணும் சமூகமாக இன்று சமூகம் மாறி வருகிறது என மேற்சொன்ன இரு நாடகங்கள் நிகழ்த்தப்படும் பார்வையிலிருந்து அறிய முடிகிறது.

# இயல் — 2

## மதுரை வீரன் - கட்டபொம்மு : கதைகளில் நாடகமாக்கிட அமைந்த பொதுமை வினைகள்

மதுரை வீரன் - கட்டபொம்மு : கதைகளில் நாடகமாக்கிட அமைந்த பொதுமை வினைகள்

2.0 முன்னுரை

2.1 கதைகளில் பொதுமை வினைகள்

2.1.1 மதுரை வீரன் கதையில் பொதுமை வினைகள்

2.1.2 கட்ட பொம்மு கதையில் பொதுமை வினைகள்

2.2 நாட்டுப்புறக்கதை இயக்கப் பொதுமை வினைகளும் நாட்டுப்புற மக்களின் உளவியல், வாழ்வியல் நிலைகளும்

2.3 வீரன், பொம்மு கதைகள் - நாடகத் தன்மைகள்

2.3.1 நாடகத்தன்மை - கூறுகள்

2.3.2 நாடகத்தின் பகுதிகள்

2.3.2.1 கதைக்கரு

2.3.2.3 நிகழ்ச்சி

2.3.2.4 தொடக்கம்

2.3.2.5 வளர்ச்சி

2.3.2.6 சிக்கல்

2.3.2.7 உச்சம்

2.3.2.8 தீர்வு அல்லது முடிவு

2.4 நாட்டுப்புறக் கதைகளை மறுவாசிப்புச் செய்தலும் நாடக ஆக்கங்களாக்குவதும் பற்றிய சில குறிப்புகள்

2.5 இதுகாறும் கண்டதன் சுருக்கம்

## 0.2 முன்னுரை

தலைமுறைத் தொடர்ச்சி, மொழி, நடை, மதம், சாதி, சூழல், அவ்வக்கால நீதி, சில சேர்த்தல்கள், சில கழித்தல்கள், உற்பத்தி முறைமை, அரசியலில் புதுமை நாட்டம், தேவை ஆகிய பல தளங்களும் கலை இலக்கிய வகைகள் உண்டாகக் காரணமாகின்றன எனக் கண்டுள்ளோம்.[1] தவிர்க்க இயலாத மரபு வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டு சமுதாயப் படைப்பாக மறு உருவாக்கம் செய்யப்படுவதால் கலை இலக்கிய வகைகள் எண்நிறைகின்றன[2] வெவ்வேறு வடிவங்களுக்கிடையிலான கதைக்கூறுகள் ஒன்றா யிருந்தால் அவற்றில் காணப்படும் மாற்றங்கள், மொழி, சமுதாயம், கேட்போரின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்துக் கதை சொல்பவர்களின் திறத்தால் மாற்றியமைக்கப் பட்டிருக்கலாம். இவ்விதத்திலும் ஒரு கதை பல்வேறு வகைமைகளில் வடிவம் பெற்றிருக்கக் காண முடிகிறது.[3]

முதல் இயலில் கண்டுள்ள வகைகள் அனைத்திலும் பொதுமை வினைகளைக் கண்டு அவ்வினைகள் நாடகம் எனும் ஒரு நிகழ்த்துக்கலை வடிவத்தில் எவ்வாறு ஆக்கம் பெற்றுள்ளன எனக் காணலாம்.

## 2.1 கதைகளில் பொதுமை வினைகள்:

விளாடிமிர் பிராப்பின் நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பியல் என்ற ஆய்வுமுறை வகைப்படுத்தல், பண்பாட்டுக் கலப்பைக் கண்டுபிடித்தல், உள்ளடக்க ஆய்வு இலக்கிய வகைகளை ஒப்பிடல், வரையறை செய்தல் போன்றவற்றை அறிய உறுதுணையாக அமைவதாகும். ஒன்றில் பல உறுப்புக்கள் இணைந்துள்ளமை, அந்த உறுப்புக்கள் தமக்குள் ஒன்றோடு ஒன்று உறவுகொள்கின்ற முறைமை, அவை முழுமையோடு இணைகின்றமை என்பனவற்றை அறிய முயல்வதும் ஆய்வு

---

1 நாட்டார் படைப்புகளில் சொற்பொருள் அமைப்பியல் ஆய்வு, டாக்டர். வி.ஐ. சுப்பிரமணியம். நாட்டார் வழற்காற்றியல் ஆய்வுகள், தே. லூர்து. (ப.ஆ) பக். 2-24

2. '.......ballad does not become a ballad until it has been accepted by the folk community and been remoulded by the in evitable variation of tradition into a communal product'

The new encyclopeadia Britnica Vol-2, p.642.

3. நாட்டார் வழங்காற்றியல் ஆய்வுகள், தே. லூர்து (ப.ஆ.), ப.18

முறைமைகளில் சிலவாகும். இங்கு, கலை இலக்கிய வகைகளை ஒப்பிடல் எனும் வகையில் கதை, கதைப்பாடல் வில்லிசைப்பாடல், கூத்துப்பாடல் ஆகியவற்றில் உள்ள கதைகளின் இயக்கத்திற்கு அமைந்த பொதுமை வினைகள் யாவை? அவற்றுக்கும் மக்களின் உளவியல், வாழ்வியல் ஆகியனவற்றிக்கும் உள்ள உறவு முறைகள் என்ன? என்பன பற்றி ஆராயும் விதத்தில் மட்டுமே பொதுமை வினைகள், நாடகம் எனும் வடிவம் பெற கொண்டுள்ள தன்மைகள் பற்றி அறிய இயலும்.

## 2.1.1 மதுரை வீரன் கதையில் பொதுமை வினைகள்

1. காசி மன்னன் பிள்ளை வேண்டி தானம் - தவம் செய்தல்
2. குழந்தை கொடி ஆரத்துடன் பிறத்தல்
3. காசி மன்னன் - மயங்கி மகிழ்தல்
4. குழந்தை அரண்மனைக்கு ஆகாது எனக் குறிகாரர் கூறுதல்
5. குழந்தையைக் காட்டில் விடல்
6. காசி மன்னன் மனைவி புலம்புதல்
7. சின்னான், செல்வி தர்க்கம்
8. செல்வி, பண்ணையார் சந்திப்பு
9. நாகம் குழந்தையைக் காத்தல்
10. மாதிகச்சி (செல்வி) குழந்தையைக் காட்டில் கண்டெடுத்தல்
11. சின்னான் செல்வி குழந்தையைத் தாலாட்டுதல்
12. குழந்தைக்குக் காது குத்தும் சடங்கு செய்தல்
13. பொம்மி பருவமடைதலும் குடிசைக்கு வருதலும்
14. பொம்மியின் காவலுக்கு மாதிகன் (சின்னான்) செல்லல்
15. பொம்மி - மாதிகன் விடுகதை போட்டுக் கொள்ளுதல்
16. பொம்மியின் காவலுக்கு மதுரை வீரன் செல்லல்
17. மதுரை வீரன் பொம்மியைக் காதலித்தல் - கற்பழித்தல்
18. பொம்மி - மதுரை வீரன் தர்க்கம்

19. பொம்மிக்கு காளி மதுரை வீரனின் முற்பிறப்பு கூறுதல்
20. மதுரை வீரன் பொம்மியை மணத்தல்
21. பொம்மியை குடிசையிலிருந்து அரண்மனைக்கு அழைத்து செல்லுதல்
22. அரண்மனை விருந்தின்போது மதுரை வீரன் பொம்மியைச் சிறை எடுத்தல்
23. பொம்மணன், பொம்மி சிறையெடுக்கப்பட்டதை அறிந்துபடையெடுத்தல்
24. பொம்மணன் இறந்தல்
25. மதுரை வீரன் திருச்சி மன்னனிடம் பணியில் அமர்தல்
26. மதுரை வீரன் நாயக்கர் பெண்களைக் களவு வாழ்க்கை கொள்ளுதல்
27. மதுரை வீரன் பொம்மியுடன் மதுரைக்குக் கள்ளர்களை அழிக்கச் செல்லுதல்
28. கள்ளர்களை அழித்தல்
29. மதுரை வீரன் வெள்ளையம்மாளைச் சந்தித்தல்
30. மதுரை வீரன் வெள்ளையம்மாளைச் சிறையெடுத்தல்
31. திருமலை நாயக்கரால் தண்டிக்கப்பட்டு மதுரை வீரன் மாறுகால் மாறுகை வாங்கப்படுதல்
32. பொம்மியும், வெள்ளையம்மாளும் தீப்புகுதல்
33. மீனாட்சி வரம் தருதலும் மீனாட்சி அம்மன் கோவிலில் வீரனுக்கு பூசை மரியாதை இடம்பெறலும்.

## 2.1.2 வீரபாண்டிய கட்டபொம்மு கதையில் பொதுமை வினைகள்

1. கட்டபொம்முவின் பூர்வீகம்
2. கட்டபொம்முவின் தாய் தந்தையர் சக்காதேவியின் அருளுடன் மூர்த்தி மலை வந்து தங்குதல்
3. (பொம்மு) குழந்தை பிறத்தல்
4. எட்டயபுரம் மன்னரைக் காணக் கட்டபொம்மன் - பெற்றோருடன் வருதல்

5. தனிக்கோட்டையும், தனிநாடும் கட்ட பொம்மு திட்டமிடுதல்

6. வெள்ளையத்தேவனும், தானாபதிப்பிள்ளையும் துணையாய் அமைதல்

7. வெள்ளையர் பொம்முவை கப்பம் கட்டச் சொல்லுதல் - பொம்மு மறுத்தல்

8. பொம்முவை வெள்ளையர் பேட்டி காண அழைத்தல்

9. பல ஊர் அலைந்தும் பேட்டி தர மறுத்த வெள்ளையர் பொம்முவை இராமநாதபுரம் வரச்சொல்லுதல்

10. இராமநாதபுரத்தில் பேட்டியின் போது பிரச்சனை ஏற்படுதல், கிளார்க் கொலை செய்யப்படுதல், படையுடன் பொம்மு தப்பித்தல், தானாபதிப்பிள்ளை கைது செய்யப்படுதல்

11. இராமநாதபுரத்தில் கொள்ளையடித்துவிட்டு பொம்முவும் படையும் தப்பித்து வருதல்

12. தானாபதிப்பிள்ளையிடம் விசாரணையைத் தொடர்ந்து கட்டபொம்மு சென்னைக்கு விசாரணைக்காகச் சென்று திரும்புதல்

13. தானாபதிப்பிள்ளையுடன் கட்டபொம்மு சிறு மனத்தாங்கல்

14. நெல்லைக்குப் புதிய கலெக்டர் வரல்

15. பொம்மு கப்பம் கட்ட மறுத்தல்

16. திருச்செந்தூர் திருவிழாவுக்கு பொம்முவின் படை காவலுக்குச் சென்ற நேரத்தில் பாஞ்சாலக்குறிச்சியில் வெள்ளையர் சண்டையிடல்

17. முதல்போரில் கட்டபொம்மு வெற்றி பெறல்

18. இரண்டாம் போருக்கு வெள்ளையர் நவீன ஆயுதங்களுடன் வரல்

19. வெள்ளையத் தேவன் சண்டைக்குப் போக மனைவியிடம் விடைபெறல்

20. 'பொல்லாக் கனவு கண்டதால் போகாதீர்' என மறுக்க இருவருக்கும் தர்க்கம்

21. சண்டையிலிருந்து திரும்பி வராமல் போகலாம். எனவே, உயிரோடு கருமாதிச் சடங்கு செய்து பார்த்தல், பின்னர் தேவன் போருக்கு புறப்படல்

22. போர் தொடங்கியது. தேவன் மடிதல். பொம்மு வருந்துதல்

23. கோட்டை வெள்ளையர்களிடம் பிடிபடல்.

24. பொம்மு, பிள்ளை, துரை முதலியோர் தப்பித்து ஒளிந்திருத்தல்.

25. எட்டப்பன் கட்டபொம்முவை வெள்ளையருக்குக் காட்டிக் கொடுத்தல்

26. பொம்மு, துரை, வீரர் சிலருடன் தப்பித்துப் புதுக்கோட்டையில் ஒளிந்திருத்தல். பிள்ளை வெள்ளையர்களிடம் பிடிபடல்.

27. வெள்ளையர், பொம்மு முதலானோர் ஆயுதம் ஏந்துவது குற்றம் என அறிவிக்கின்றனர்

28. புதுக்கோட்டை மன்னர் காட்டிக் கொடுக்க பொம்மு வெள்ளையரிடம் பிடிபடல்

29. வெள்ளையர் பொம்முவை விசாரணை செய்து கயத்தாறில் புளியமரத்தில் தூக்கிலிடல்

30. துரை, சிறையிலிருத்தல் - பின்னர் தப்பித்து விடுதலைப் படை கொண்டு இடிக்கப்பட்ட பாஞ்சாலங் கோட்டையைக் கட்டுதல்

31. வெள்ளையருக்கும் ஊமைத்துரையின் படைக்கும் இடையே சண்டை

32. ஊமைத்துரை தப்பித்து சிவகங்கை மருது சகோதரர் களிடம் தஞ்சம் புகுதல்

33. வெள்ளையர் - மருது, ஊமைத்துரை சண்டையில் மருது, ஊமைத்துரை ஆகியோர் தூக்கிலிடப்படுதல்

34. சில கலை இலக்கிய வகைகளில் ஊமைத்துரை, வண்ணானிடம் ஒளிந்திருத்தல், சில காலம் பாஞ்சாலங் குறிச்சியை ஆண்டமை என வரைலாற்றில் இல்லாத புனைந்துரைத்தல்படி கதைப்போக்குகள் அமைந்துள்ளன

## 2.2 நாட்டுப்புறக் கதை இயக்கப் பொதுமை வினைகளும் நாட்டுப்புற மக்களின் உளவியல், வாழ்வியல் நிலைகளும்

நாகரீக வாழ்க்கை அல்லது புதுவாழ்க்கை கொண்ட போதிலும் நாட்டுப்புற மக்கள் மத்தியில் மரபுவழிப் பட்ட சில கூறுகள் தடங்கொண்டுள்ளன. இருள் வேளையில் உடுக்கொலி எழும்பும் போது இன்றும் அப்பழைய உணர்வு நிலை (பயம் பேய்)கள் அசைவு கொள்கின்றன. ஆக, பழங்கால வாழ்வியல் ரீதியில் சில மனப்பதிவுகள் இன்றளவும் உள்ளன. அவை இயங்கவும்கூடச் செய்கின்றன. கதை கூறும்போதும், கதைப் பாடல்கள் கேட்கும் போதும் இவை செயற்படக் காணமுடிகிறது. நாட்டுப்புறங்களில் பகலில் உடுக்கு ஒலித்தல் அல்லது சாட்டையாட்டத்திற்குரிய நையாண்டி மேளம் ஒலித்தல் செய்யும் போது சிலர் ஆட்டம் செய்வதை அவதானிக்கலாம். உளவியல் ரீதியிலும் வாழ்வியல் ரீயிலும் நாட்டுப்புறக் கதை இயக்கப் பொதுமை வினைகளின் செயற்பாடுகளைக் கவனிக்கலாம்.

'ஒரு ஊருல ஒரு ராசா' எனக் கதைகள் பெரும்பாலும் தொடங்குவது என்பது வழங்கப்பட்ட ஒன்றாகும். வீரன், பொம்மு கதைகளிரண்டும் 'ராசா' தொடர்புடைய கதைகளே ஆகும்.

குழந்தையிலிருந்து கதாநாயகனின் வளர்ச்சி முறைமைகளைக் காட்டிச் செல்லுதல் கதைகளில் இயல்பு. வீரன் குழந்தையாகப் பிறப்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

புலம்புதல் அல்லது ஒப்பாரி செய்தல் என்பது நாட்டுப்புறங்களில் குறிப்பாகப் பெண்களிடையே மனதைப் பாதிக்கும் நிகழ்ச்சியாகும். பெண்கள் சொத்துரிமையற்ற காலத்தில் உறவு முறைமையே சொத்தாக எண்ணியிருந்தனர். அவ்வுறவிலும் சிதைவு அல்லது அழிவு ஏற்படும் போது புலம்பல் அல்லது ஒப்பாரியே பெண்களிடையே தீராத்துயரினைப் போக்க அல்லது அமைதிப்படுத்த வடிகாலாகப் பயன்பட்டன. இப்புலம்பல் நமது நல்லதங்காள், சத்தியவான் சாவித்திரி, சந்திரமதி புலம்பல் எனப்பல கதைகளில் அமையக் காணலாம்.

புலம்பல்: மதுரை வீரனை (குழந்தை) வனத்தில் விடச் சொன்னபோது அரசி ஒப்பாரி செய்து புலம்புகிறாள்.

**கூந்தல் விரித்தரசி கூச்சலிட்டுதானமுதாள்**
**ஏந்திழை மார்களே யான் என்ன செய்வேனென்றழுது**

மைந்தன் தனையிழந்த மாபாவி யென்பாரே
அழகு மகனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில் மகனை விட்ட கடும் பாவி என்பரே*
- - - - - - - - - - - - - - - - - - - - - -

## கட்டபொம்முவின் புலம்பல் : கட்டபொம்மு ஒப்பாரி

1. மாதுளம் பண்ணையழியக் கண்டேன்
மன்னவா நீஅங்கு சாகக் கண்டேன்
குருவி பறக்காத பாஞ்சையிலே
கும்பினிப் படையெல்லாம் உலவக்கண்டேன்**

2. வீரசூரனிந்த வெள்ளையத்தேவனை
வேட்டையிலென்றைக்குக் காண் போமென்றான்
- - - - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - - - -
உயிர்துணையானவன் பாதரு வெள்ளையன்
யுத்தக் களத்திலே தான் மடிந்தான்
வயிற்றையும் பற்றியெரியு தென்றார் துரை
மன்னவன் கட்டபொம்மு ராசதுரை
நட்புள்ள பாதரு வெள்ளையனைத் தானிங்கே
எப்போது காணவே போரோ மென்றார்***

இவ்விருகதைகளிலும் புலம்பல் அல்லது ஒப்பாரி அமைந்துள்ளமையினைக் கவனிக்க முடிகிறது.

'தர்க்கம்' என்பது மக்களிடையே அன்றாடம் நிகழ்வது, கூத்துக்களிலும் நாடகங்களிலும் 'தர்க்கம்' செய்தல் அல்லது தர்க்கப் பாடல் என அமையக் காணலாம். கீழ்நிலை மேல்நிலை, உண்டு இல்லை எனும் விதியில் பெரும்பாலும் தர்க்கம் அமையக் காணலாம்.

'தாலாட்டு' என்பது நாட்டுப்புறங்களில் வீட்டுக்கு வீடு குழந்தையைத் தாலாட்டிடச் செய்தல் எனவும் உறவு

---

* மதுரை வீரசுவாமி கதை, புகழேந்திப் புலவர் ப. 16

** கட்ட பொம்மு ஒப்பாரி, பாடியவர் மகாலிங்கம். நாள் 5-4-92 வரிககள் 44 - 47

*** வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல் ப.ஆ.நா.வான. மாமலை ப.103

முறையாளர்களை நினைவு கொள்வதுமாக வீடுகளிலும், கலை இலக்கிய வடிவங்களிலும் தாலாட்டு அமையக் காணலாம்.

'காதுகுத்துச் சடங்கு செய்தல்' என்பது ஊரறியக் குழந்தைக்கு உரிய உறவு முறையாளர் தாங்கள் எனக்கூறிக் கொள்ள வாய்ப்பான ஒரு சடங்காகும்.

பூப்படைதல் என்பதும் உறவு முறையாளன் குறிப்பாக மாமன் உறவினை நெருக்கப்படுத்திக் கொள்ளவும் தன் மகளுக்கு பூப்புச் சடங்கின் பொருட்டுச் சீர் முறை செய்வதன் வழியே தந்தை வழிச் சொத்துரிமை பெற்ற சகோதரன் கொஞ்சம் சகோதரி பெற்ற குழந்தையின் பேரால் தரக் கடமைப்படுகிறான்.

நாட்டுப்புறங்களில் பொழுது போக்கிக் கொள்வதென்பது செய்யும் தொழிலோடு பெரும்பாலும் இயைந்ததாய் அமையும். எடுத்துக்காட்டாக, ஆடுமாடு மேய்ப்பவர்கள் பாடல் பாடிக் கொள்ளுவதும் (ஏசல் பாடல் இன்னபிற இதிலடங்கும்) கதை சொல்லுவதும், கேட்பதும், கிட்டி, விளித்தட்டு போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவதும், விடுகதை ஒருவர் போட அதனை மற்றொருவர் அல்லது பிறர் விடுவிப்பதுமாக மாறி மாறி விடுகதை இட்டுக் கொள்வதும் இயல்பு. வீரன் கதையில் பொம்மிக்குக் காவலிருக்கும் மாதிகன் பொம்மியிடமும், பொம்மி மாதிகனிடமும் விடுகதை போட்டுக் கொள்வதைக் கவனிக்க முடிகிறது. காட்டாக:

திண்டுக்கல்லை ரெண்டாய் வெட்டி
திருச்சிராப் பள்ளியை மூணாய் மடிச்சு
வெள்ளைக் கவினை உள்ளே வைச்சு
விசையை முடுக்கினால் ரத்தமாய் வரும்.

(விடை – வெற்றிலை பாக்கு)

பொம்மி: இதன் பொருள் எனக்குத் தெரியவில்லையே

சின்னான்: அப்போ நீங்க தோத்துப் போனீங்க. இதற்குப் பதிலாய் நீங்க ஒரு கதை போடுங்க பார்க்கலாம்.

(காண்க பி.இ. ஒரிஜினல் மதுரை வீரன் நாடகம்)

வர்க்கம், சாதி என்பன படைப்பில் காணக்கிடப்பன. (காண்க இந்த இயலில் உள்ள நாட்டுப்புறக் கதைகளை மறுவாசிப்புச் செய்தலும் நாடக ஆக்கங்களாக்குவதும் பற்றிய சில குறிப்புக்கள் - எனும் தலைப்பு) குலம் பற்றிப் பேசுவதையும், மதுரைவீரன்

நாடகத்தில் கீழ்ச்சாதியை ஆங்காங்கே மிகக் கடுமையான வார்த்தைகளால் பேசுவதையும் காண முடிகிறது.

பொம்மி: என்ன! என்ன இந்தக் குடிசையிலே உனக்கும் இடம் வேண்டுமா. ஒரு சக்கிலியன் மகனுக்கு....... என்ன தைரியம் .... என்ன துணிவு....... என்ன திமிறு. எவ்வளவும் அக்கிரம். என்ன அகம்பாவம். என்ன ஆணவம், என்ன துடுக்கு, எவ்வளவு கொழுப்பு....... முத்து வீரா, அரசகுமாரி நான் தங்கும் குடிசையிலே அற்ப மாதிகன் மகனாகிய உனக்கும் இடமா..... ஏதேது. என்ன துணிச்சலடா உனக்கு. உன் ஜாதி என்ன என்பதை மறந்திவிட்டாயா.

(பாட்டு தர்க்கம்)

என்ன தைர்யமடா - இது

ஏற்காது மேற்சாதி - பார்க்காது பேசுகிறாய் எனக் (என்ன)

- - - - - - - - - - - - - - - - - - - - -

வீரன்: அஞ்சும் குளிர் மழையில் ஆதரவு இல்லாது துயர் மிஞ்சும் தருணமிதில்

மேற்குலம் பேசுதல் யேற்குமோ நீ இனிக் (கொஞ்சம்)

வீரன் பொம்மி இவர்கள் பேசிக் கொள்ளும் வேளையில் 'சாதி' தான் முக்கியமாயிருந்து செயற்படுகிறது. நாயக்கர் சாதியில் அதாவது மன்னர் குலத்தில் பெண் கொள்ள முனைந்த ஒரு தாழ்த்தப்பட்டவனின் கதைதான் இது எனச் சுருக்கிச் சொல்லத்தக்கக வகையில் மதுரைவீரன் கதை உள்ளது. மேல்ச் சாதியில் பெண் கொள்ள முனைந்த கீழ்ச்சாதிக்காரர் மரண தண்டனை பெறுகிற கதை வீரன் கதையாகும் என்பதைக் கதையோட்டத்தில் காண முடியும். ஆனால் இச் சாதியக் கதை 'சாமி', பண்பாடு போன்றவைகளால் மூடிமறைக்கப் பட்டுள்ளமையினையும் நாம் மறுவாசிப்புச் செய்யும் போது துல்லியமாய் காணலாம்.

கட்டபொம்மு நாடகத்தில் இன்று 'வெள்ளையத் தேவன் கதைப் பகுதி மட்டும் தேவர் குலத்தோரால் பரவலாய் நாடகமாக நிகழ்த்தப்படுவதையும் இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. பாஞ்சாலங்குறிச்சி தோக்குலவார் இனத்தார் கட்டபொம்மு,

ஊமைத்துரையே வரலாற்று நோக்கில் அழுத்தப்படுத்திக் காட்டுவதையும் இந்நேரத்தில் மனங்கொள்ளலாம்.

காதல் என்பது இல்லாக் கதைகள் இல்லை எனக் கூறிவிடலாம். 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்பர். மண்ணாசை அல்லது பெண்ணாசை இந்த இரு ஆசைகளிலேயே நாட்டுப்புறக் கதைகள் இயங்கிச் செல்வதை அவதானிக்கலாம். ஒருதலைக் காதல், இளையவர் - முதியவர் காதல், சாதி மீறிய காதல் எனப் பலவாறாய்க் காதல்கதைகள் அமைந்திடக் காணமுடிவும். எடுத்துக் கொண்டுள்ள வீரன் நாடகத்தில் பெண்ணாசை அடித்தளமாய் அமைவதும் எண்ணுதற்குரியது

## பாட்டு – தர்க்கம்

1. மதுரை வீரனில்

வீரன்: பயந்தோடாதே மானே

பொம்மி: வீண் - பழியாகும் சொன்னேனே

வீரன்: நயந்தே எனையணை தேனே

பொம்மி: சீ .......... நாயே உனை விரும்பேனே*

2. கட்டபொம்முவில்

வீரன்: இது அகால நேரம் ......... நீ அவர்கள் கண்ணில் படாமல் ஒதுங்கி உன் இருப்பிடம் சென்றுவிடு.

வெள்ளையம்மாள்: சரி, அவ்விதமே நடந்து கொள்ளுகிறேன் (இருவரும் அமர்ந்து சல்லாபமாக பேசிக் கொண்டிருத்தல். பாட்டு)

## பாட்டு தொடர்ச்சி

இந்த நிலைமைகள் மாற வேண்டும் சக்காதேவி, அம்பிகையே!

இன்பமுடன் மக்கள் வாழ வேண்டும்

சொந்தமுள்ள நாட்டைக் காவல் செய்து

சுதந்திரமாய் வாழ அருள் புரிவாய்**

---

* ஒரிஜினல் மதுரை வீரன் நாடகம் (தாய் ஏடு) பெருமாள் ராஜா

** கட்டபொம்மு - வில்லிசைப் பாட்டு, சீனிவாசன். சிவகாசி ப.13

'கனவு காணுதல்' என்பதற்குக் காப்பியங்களிலிருந்தும் சான்றுகள் காணலாம். காணாத்திறம் உரைத்தகாதை என்பதைச் சிலம்பில் காணலாம். பொம்மு கதையில் வரும், தமிழகத்தில் பரவலாக அறியப் பட்ட போகாதே போகாதே என் கணவா, பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன் என்னும் பாடலடிகளை இங்கு மனங் கொள்ளலாம். பின்னால் நடக்கவிருக்கும் நிகழ்வினை முன்கூட்டி எண்ணிப் பார்க்கத்தக்கனவாக நம்பிக்கைகள், கனவுகள் போன்றவை அமைகின்றன. கலை இலக்கிய வகைகளும் வாழ்க்கைகாகப் படைக்கப்படுபவை. எனவே அவற்றில் நம்பிக்கைகள் கனவுகள் போன்றவை இடம்பெறுவதில் வியப்பில்லை.

காளி போன்ற சாமிகளோ, முனிவர்களோ, முதியவர்களோ, பேய்களோ, அசரீரிகளோ இடம் பெற்றுக் கதைப் போக்கினை அடுத்தக் கட்டத்திற்கு இட்டுச் செல்வது என்பது நாட்டுப்புறக் கதைகளின் இயல்பு. பொம்மு நாடகத்தில் மேற்சொன்ன கூறுகள் இல்லை. நடந்த வரலாற்றுக் கதைகளில் இந்தக் கூறுகள் இடம் பெறக் காண இயலாது.

வீரன் நாடகத்தில் வீரன் பொம்மி காதல் அமைந்து எல்லை மீறிக் களவு வாழ்க்கை அமைதல் என்பதும் நிகழ்ந்த பிறகு

பொம்மி: என்னகுலத்தின் தன்மை .......... இந்த நீசமாதிகனால் கற்பழிக்கப்பட்ட மங்கை என்னும் வசை மொழியை சுமந்து நான்.*

– – – – – – – – – – – – – – – – – சாதி

வீரன்: பேதமின்றி கற்பழித்தான் என்று மயங்கி
வரலாறு சொல்லுகின்றேன் கேள்–இந்நகரில்
வாழுகின்ற மாதிகளின் மைந்தனல்லடி
வீரமிகும் காசி மாநகர் - ஆட்சி புரிந்
திட்டதுள சேந்திரன் தன் பட்டமகிஷி

அசரீரி சொல்லுதல்: வீரன் மாதிகன் மகன் அல்ல. காசி நாட்டு அரசன் குமாரன்தான். இவனே உன் பூர்வஜென்ம காதலன். தெய்வசாபத்தால் நீசனால் வளர்க்கப்பட்டு – – – – – – – –

பொம்மி வருத்தமுற்றிருக்கும் போது இராணி வந்து மதுரை வீரனின் முற்பிறப்புக் கூறுவது இங்கு எண்ணுதற்குரியது.**

* கன்னிகழியாமல் கலியாணம் செய்யாமல்
சக்கிலியன் கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
மதுரை வீரசுவாமி கதை, புகழேந்திப் புலவர் - ப. 28

** ஒரிஜினல் மதுரைவீரன் நாடகம் (தாய் ஏடு), V.A. பெருமாள் ராஜி எழுதிய நாள் 23-6-79.

'திருமணம்' என்பது மனசுக்கு இதமானது. திருமணத்தைப் பார்ப்பவருக்குப் பழைய தம் நினைவு ஓடிவர அசைபோடுதல்; திருமணம் நடக்க உள்ளவர்கள் எதிர்காலத் தம் வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்த்தல் எனும் ரீதியில் 'திருமணம்' முக்கியக் கூறாகிறது. இது நாட்டுப்புறக் கதைகளில் சிறப்புற இடம் பெறும். திருமணத்தால் கதை தொடங்குவதோ, திருமணத்தால் கதை திசைமாறிச் செல்வதோ, திருமணத்தால் கதை முடிவுறுவதோ இங்கு எண்ணுதற்குரியதாகும். வீரன் பொம்மியைச் சிறையெடுத்துத் திருமணம் முடித்துக் கொள்வதை இங்கு கருத்தில் கொள்ளலாம்.

இறத்தல், ஈமச்சடங்கு செய்தல் என்னும் படியான கூறுகள் மேற்சொன்னது போல் முக்கியமானவையாகக் கதைகளில் இடம்பெறக் காணலாம். பகையாளியாய் இருப்பினும் இறப்பு செய்திவரின் 'கேதம்'* கேட்கச் செல்க என்பது நாட்டுப்புற முதுமொழிகளுள் ஒன்றாகும்.

கட்டபொம்மு நாடகத்தில் வெள்ளையத்தேவன் சாவு என்பதைக் காட்டலாம். வெள்ளையத்தேவன் இறப்பதற்கு முன்பாகவே ஈமச்சடங்கு செய்து பார்த்துள்ள நிகழ்ச்சி எண்ணுதற்குரியது.

**வெள்ளையத்தேவனுக்கு ஈமச் சடங்கு செய்து பார்த்தல்**

**வெள்ளையத்:** கண்ணே வெள்ளையம்மாள் இருதாரம் இருந்தாலும் எனக்கு ஈமக்கிரியை முடிக்கப் பிள்ளை இல்லை....... உள்ளூர்க் குடிமகனை அழைத்து எனக்கு ஈமக்கிரியை முடிக்க வேண்டும்.

**வெள்ளையம்மா:**

வீதியிலே எஞ்சாமி போகிறாராம்.
போகிறாராம். போகிறாராம்
– – – – – – – – – – – – – – – –
அந்த வெள்ளி ரதம் எஞ்சாமி
ஊஞ்சரதம் ஊஞ்சரதம்
– – – – – – – – – – – – – – – –
– – – – – – – – – – – – – – – –
அது மைந்தன் வைச்சுக் கொஞ்ச துன்னு
நான் சண்டாளி வெள்ளையம்மாளுக்கு
எனக்கு மாவால பொம்மை செய்து
எனக்கு மைத்தனென்று தங்காங்கே!

இன்னைக்கு மாவுந்தன் பேசலையே
எனக்கு வாய்ச்சிட்ட எஞ்சாமி
எனக்கு மைந்தன் கலி தீரலையே

* கேதம் - இறப்புச் செய்தி அறிதல்

**வெள்ளையத்தேவன்:** ஒப்புக்கழுவள் ஆறு பெண்கள்
உரிமைக் கழுதவள் வெள்ளையம்மாள்*

மக்களை அவலச் செய்திகள் பெரும்பாலும் ஈர்க்கத் தக்கவையாயுள்ளன. அவலச் செய்திகள் நடைபெறும் போது தங்கள் வாழ்க்கையோடு அந்நிகழ்வினைப் பொருத்தி மனக்கனவு செய்வது என்பது ஒவ்வொருவருக்குமுள்ள உளவியல் குறித்ததாகும்.

மதுரை வீரன் நாடகத்தில் பொம்மணன் வீரனால் கொல்லப்பட்ட பிறகு ஈமச்சடங்கு செய்வித்துக் காண்பது இங்கு எண்ணிப்பார்க்கத்தக்கதாகும்.

இறப்பும் இறந்தோரைத் தெய்வமாக்குதலும் நாட்டுப்புறக் கதைகளில் கட்டாயம் இடம்பெறும் நிகழ்வுகளுள் ஒன்றாகும். வீரனில் திருமலை நாயக்கரால் வீரன் மாறுகால் மாறுகை வாங்கப்பட்டு இறக்கடிக்கச் செய்தலும், பின்னர் வீரனின் மனைவி பொம்மு, வீரன்மேல் காதல் கொண்ட வெள்ளையம்மாள் ஆகியோர் தீ வளர்த்து அதில் தகித்துத் தங்களை மாய்த்துக் கொள்வதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கன. முடிவில் இறந்து போன வீரன் மீனாட்சி அம்மன் அருளால் உயிர் பெற்று, கை கால்கள் பெற்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பூசைக்கு உரியவனாகிறான் என்பதை

**'முந்தியமாலை முதற்பூசை யுன்னதுகாண்
கம்பத்தடியில் காத்திருந்து பூசை கொள்வாய்'**

என்னும் வரிகள் காட்டும். மேலும்

**(அம்பாள் பேசுதல்)**

**மீனாம்பிகை:** வெற்றி வீரா. மதுரை வீரன் என்னும் சிறப்புப் பெயர் இம்மண்ணுலகம் உள்ளவரை மங்காது நிலவட்டும்.

## வாழி விருத்தம்

**அம்புவியில் புகழ் மதுரை வீரன் வாழி
அவர் தேவி பொம்மி வெள்ளையம்மாள் வாழி****

---

* காண்க. பி.இ. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக வடிவத்தில் கட்டபொம்மு கதை முதல் பாகம். பக். 114-115.

** ஒரிஜினல் மதுரை வீரன் நாடகம் (தாய் ஏடு) பெருமாள்ராஜ்

ஐயாவே வீரனே அனைவரையும் காத்திடுவாய்
அவரவர் பங்கில் அனுதினமும் நீயிருந்து
என்னையும் காத்து இரட்சிக்க வேணுமய்யா*

கட்டபொம்மு கதையில் கட்டபொம்முவைக் கயத்தாறில் உள்ள புளியமரத்தில் தூக்கில் போட்டு சாகடித்தல் என்பதை இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

பாட்டு

புளிய மரக் கிளையதிலே
போட்டிருந்த கயிறதனை
மற்றவர்கள் யாரும் வந்து
மாட்டிவிட வேண்டாமென்று
சுற்றி நின்ற கூட்டமதில்
சொந்தமுள்ள தம்பி தன்னை
தேடி நின்று பார்த்துவிட்டு
தெளிவடைந்து உறுதி கொண்டு
கயிறதனை கழுத்திலிட்டு
கட்டபொம்மன் உயிர் துறந்தார்
(1799 – அக்டோபர் 16)**

நாட்டுப்புறச் சிறு தெய்வங்கள், குலதெய்வங்கள், காவல் தெய்வங்கள் ஆகியவை பெரும்பாலும் அவச்சாவு கொண்டவர்களிடம் இருந்தே அடிநிலையாய் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த வகையில் மதுரை வீரனிலும், கட்டபொம்முவிலும் அவச்சாவு அமைந்திருப்பதைக் காண முடிகிறது. சக்கிலியர் சமூகத்தார் வீரனைக் குல தெய்வமாகப் போற்றுவதும் பொம்முவில் வெள்ளையத்தேவன் மடிதல் மற்றும் கட்டபொம்மு தூக்கிலிடப்படல் என்பனவற்றையும் இங்கு பொருத்தி எண்ணலாம்.

நாட்டுப்புறக் கதைகளில் கண்டுள்ளவாறு பொதுமை வினைகள் செயற்படினும் மக்கள் மனங்களில் மரபுவழியே பதிந்து அவ்வினைகளில் குறிப்பிட்ட சில மட்டும் மீண்டும் மீண்டும் சந்திக்கும் ரீதியில் அவை இடம் பெறும் கலை இலக்கிய வடிவங்களை நமக்கு நெருக்கமான நிகழ்வுகள் என்னும் கருத்தில் மக்களால் வெகுவாக வரவேற்கப்படுவதை இங்கு அறிய

* மதுரை வீரன் கதைகள் ஓர் ஆய்வு - திருமாவளவன். ப.51

** வில்லிசைப்பாட்டு என். சீனிவாசன். சின்னக் காமன்பட்டி, சிவகாசி ('அவச்சாவு' - இள வயதில் பெரும்பாலும் எதிர்பாராமல் இயல்புக்கு மாறாகத் திடீர் மரணஆதல்)

முடிகிறது. இந்த வரவேற்புக்கு அடித்தளமாய் அமைபவை உளவியல், வாழ்வியல் தொடர்புடையன என்பதையும் மறுப்பதற்கில்லை.

'ஒரு ஊரில ஒரு ராசா' என்று கதைத்துவக்கம்அமைதல், கதாநாயகன் குழந்தைப் பருவம் கொண்டு படிப்படியே, தாலாட்டு, சடங்குகள் பெறுதல் என அமைதல், கதைப் போக்கில் புலம்பல் அல்லது ஒப்பாரி இடம்பெறுதல், இரு பாத்திரங்களுக்கிடையே தர்க்கப் பாடல் அல்லது பேச்சு அமைதல், விளையாட்டு அல்லது பொழுது போக்கான கூறுகள் அமைதல், காதல், கனவு கொள்ளுதல், அசரீரி இடம் பெறுதல், இறப்பு அல்லது இறப்புச் சடங்கு நிகழ்தல், தெய்வநிலை பெறுதல் அல்லது தெய்வம் போற்றுதல் போன்ற பொதுமை வினைகள் யாவும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் வாழ்வியல் தொடர்பானவை. அவை மேடையில் இடம் பெறும் போது நம்மையும் அறியாமல் அவை உளவியல் ரீதியில் நெருக்கமானவையாக அமைந்து, அவற்றை வரவேற்கும் அல்லது எதிர்நோக்கும் மனப்பாங்கு கொள்ளச் செய்கின்றனர். இந்த வகையில் வீரன், கட்டபொம்மு கதைகளில் பல்வேறு வகைகளில் உருப்பெறவும் உருப்பெற்ற போது வரவேற்கப் பட்டமையும் மனங் கொள்ளத்தக்கதாகும்.

## கட்டபொம்மு கதைகள் : நாடகத்தன்மைகள்

ஒரு கருத்தை நேரடியாகக் கூறுவதற்கும், அக்கருத்து உருவான சூழல் அது எவ்வகை அனுபவத்தின் அடிப்படையில் பெறப்பட்டது என்பவற்றையும் இணைத்துக் கூறுவதற்கும் இடையில் உள்ள வேறுபாடு நாடகத்தன்மை என்பதன் அடிப்படையாக அமைகிறது. பலவிதக் காட்சிகளுடன் வேறுபட்ட நிகழ்வுகளின் துணையுடன் ஒரு கருத்து உணரப்படும் போது நாடகத்தன்மை உருவாகிறது. பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறுவதாயின் நாடகத்தன்மையின் அடிப்படையான அம்சம் அதன் காட்சி வடிவம் எனலாம்.

### 2.3.1 நாடகத்தன்மை : கூறுகள்

நிகழ்ச்சி, நிகழ்ந்த இடம், காலம் அதில் இடம் பெற்ற பொருள்கள், மனிதர்கள் ஆகியவற்றுடன் விளக்க வேண்டிய தேவையுடன் விளக்கப்படும்போது நாடகத்தன்மையுண்டாகிறது. நாடகத் தன்மையின் முக்கியமான கூறுகளாக வடிவவியல், இயங்கியல், காட்சியியல் போன்றவற்றைக் கூறலாம். இயக்கம் உடலால், மொழியால், குறியீடுகளால் விளக்க முயற்சிக்கும் பொழுது நாடகத்தன்மை உருவாகிறது.

### 2.3.2 நாடகத்தின் பகுதிகள்:

நாடகத்தின் பகுதிகளாக, ஒவ்வொரு நாடகத்திலும் கதைக்கரு, கதைக்களன், நிகழ்ச்சி என்பவையும் தொடக்கம், சிக்கல், உச்சம், தீர்வு அல்லது முடிவு என்பவையும் அமைகின்றன.

#### 2.3.2.1 கதைக்கரு:

கதைக்கருவை எல்லா நாடகங்களும் கொண்டுள்ளன. கதைக் கரு தான் விளக்கப் போகும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வேறுபாடுகள் கொள்ளும். மதுரை வீரன் கதை, பூசாரி பாடும் உடுக்கடிப் பாடலில் வரும் போது கதைக் கரு யாதெனில் வீரன், சாமியாகப் பிறந்து சாமியாக வளர்ந்து சாமியாக நின்று அருவுருவாகியுள்ளான் என்பதாகும்.

#### 2.3.2.2 கதைக்களம்:

கதைக்களன் எனக் காணும் போது கட்டபொம்மு கதைக்கு பாஞ்சாலங்குறிச்சி, இராமநாதபுரம் சென்னை புதுக்கோட்டை, கயத்தாறு எனப் பல இடங்கள் கதைக் களங்களாக அமைந்திருக்கக் காணமுடிகிறது. பிரச்சனைகள் உண்டாகும் விதம் உண்டாகக் காரணம், அப்பிரச்சனைகளை விலக்கிச் செல்வதற்கான காரணங்கள், முறைமைகள் போன்றவை கதைக்களங்கள் அமைய ஏதுக்களாகின்றன.

#### 2.3.2.3 நிகழ்ச்சி:

சொல்ல வரும் கருத்தைக் காட்சி வடிவில் விவரித்துச் சொல்லும்போது அவை நிகழ்ச்சிகளாகின்றன. நாடகத்தில் நிகழ்ச்சிகள் என்பவை வாழ்வின் பல்வேறு அர்த்தங்களைப் பெறும் இயக்கத்திலிருந்து உருப்பெறுகின்றன. காட்டாக, கட்டபொம்மு பாஞ்சாலங்குறிச்சியில் வெள்ளையத்தேவன், தானாபதிப் பிள்ளை, தம்பி ஊமைத்துரை ஆகியோருடன் இணைந்து போரிடும் போது கொள்ளும் வாழ்வின் அர்த்தம், பிள்ளை, தேவன் இழப்பிற்குப் பின் தாம் கொள்ளும் வாழ்வின் அர்த்தம், புதுக்கோட்டையில் தஞ்சம் புகுந்தபின் கொள்ளும் வாழ்வின் அர்த்தம் இவைபோல் வன வாழ்க்கையில் தொடர்ந்தவாறும், அடுக்கடுக்காய் அமையும் அர்த்தங்கள் நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றன. காட்சி வடிவத்தில் ஒரு நிகழ்ச்சியை விவரிக்க முற்படுகையில் நிகழ்ச்சிகள் இயக்கம் பெறுகின்றன.

#### 2.3.2.4 தொடக்கம்:

பலவிதச் சிக்கல்களை எல்லாம் கொஞ்சம் மறைத்தவாறு நாடகம் தொடங்கும். சில நேரங்களில் பின்வரும் சிக்கல்களைப்

பூடகமாக விளக்குவது போல் தொடக்கம் அமைய நேர்வதுண்டு. சமூகப்பின்னணி, பாத்திரங்களின் குணம், சமூகப் பிரச்சனை ஆகியவை நாடகத்தின் தொடக்கத்தைத் தீர்மானிப்பவையாயுள்ளன.

காட்டாக, வீரன் பிறப்புக்குத் தவமிருக்கும் காசி மன்னன் பொம்மணன் என வீரன் நாடகம் தொடங்குகிறது. வீரன் பின்னர் காட்டில் விடப்படுகிறான். நாடகத்தின் முடிவில் சாகடிக்கப் படுகிறான் என்றவாறு சிக்கல்களை மறைத்துக் கூறுவதை மதுரை வீரன் நாடகத்தின் தொடக்கத்தில் காணமுடிகிறது.

## 2.3.2.5 வளர்ச்சி:

நாடகம் தன்னுள் கொண்டிருக்ககும் அடிப்படைத் தத்துவத்தை நோக்கிச் செல்வதற்கேற்ப அது வளரவும் தொடங்குகிறது. சில நாடகங்களில் இவ்வளர்ச்சி நிலை எதிர்பார்ப்புகளை உருவாக்குவதாக அமைவதுண்டு. எடுத்துக் காட்டாக, மதுரை வீரன் நாடகத்தில் மதுரை வீரன் பிறந்ததும் ஆகாத குழந்தை எனக் கூறப்படுகிறது. பிறகு குழந்தை காட்டில் விடப்பட நாகம் காக்கிறது. மாதிச்சி கண்டெடுக்க வளர்கிறான் வீரன். சக்கிலியர் குடியானவன் மன்னர் (தொட்டிச்சி நாயக்கர்) மகள் பொம்மியைக் கற்பழிக்கிறான். பிரச்சனை வளரும் என எண்ணும் போது காளி வீரனின் முற்பிறப்பு கூறுகிறது. பொம்மியைச் சிறையெடுப்பது, சண்டையிடுவது, வாழ்தல் வேண்டி திருச்சி செல்வது, சாவை நோக்கி மதுரை செல்வது என எதிர்பார்ப்புகளுடன் கதை வளர்ச்சி கொண்டு செல்கிறது.

## 2.3.2.6 சிக்கல்:

சிக்கல் என்பது போராட்டம். வாழ்வில் இது நிகழ்ந்தே தீரும். வாழ்வின் அர்த்தமே அதுதான், டார்வின் தத்துவம், பரிணாமக் கோட்பாடு உயிரினங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக் கொள்ள சிக்கல்களைச் சந்தித்தும் வெற்றிக் கொண்டும் அமைய வேண்டும்.

கட்டபொம்மு நாடகத்தில் பின் இணைப்பில் காட்டப் பட்டுள்ளபடி பல்வேறு பிரிவுகளில் (வகைகளில்) நாடகங்கள் (கதைகள்) அமைகின்றன. ஒவ்வொரு பிரிவும் சிக்கலைக் கொண்டுள்ளது. காட்டாக, கட்டபொம்மு பூர்வீகத்தில் பஞ்சம், ஏற்பட சக்கதேவி அருளுடன் நாடு விட்டு நாடுவரல் என அமைகிறது. பிள்ளை, ஊமைத்துரை, வெள்ளையத்தேவன் கட்டபொம்மு இணைந்த நாடகப் பகுதி (கதையில்) வெள்ளையரின்

தாக்குதல் தொடர்ந்து வர தேவன் மடிய, பிள்ளை கைது செய்யப்பட, பொம்மு தப்பிக்க என தொடர்ந்து சிக்கல் அமையக் காணமுடிகிறது.

### 2.3.2.7 உச்சம்:

கதை வளர்ச்சியில் உருவாகும் சிக்கல்கள் ஒன்றுதிரண்டு இனி இவற்றைக் கடந்து கதை வளர வாய்ப்பில்லை எனும் நிலை உருவாதலே நாடகத்தில் உச்சம் என்பதாகும். இங்கே இதுவரை கதை நிகழ்வில் நடந்த பூடகங்கள், கேள்விகள், சிக்கல்கள் போன்ற அனைத்திற்கும் விளக்கம் கிடைக்கும். எடுத்துக்காட்டாக மதுரை வீரன் நாடகத்தில் வெள்ளையம்மாளை வீரன் சிறை எடுத்துச் செல்லும்போது பிடிபட்டு விடுகிறான். மாறுகால் மாறுகை வாங்க ஆணை பெறுகிறான். இது போலவே ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட வீரபாண்டியக் கட்டபொம்மு கதையில் புதுக்கோட்டை மன்னரால் காட்டிக் கொடுக்கப்பட்டு கட்டபொம்மு கைது செய்யப்படுகிறான். விசாரணையின் முடிவில் தூக்குத் தண்டனை பெறுகிறான்.

### 2.3.2.8 தீர்வு அல்லது முடிவு:

இன்பியல் துன்பியல் என இரு நாடகங்களிலும் முறையே திருமணம் அல்லது நாடுபெறல், சாவு என்பதாக முடிவைக் காண்கிறோம். நாடகத்தின் அடிப்படை நீதி இங்கே விளக்கம் பெற்றுவிடக் காணலாம். இன்பம் துன்பம் என்பதிலிருந்து தொடர்ந்த போராட்டம் என்பதாகவும் முடியலாம்.

கட்டபொம்முவில் சாவும் தொடர்ந்து போராட்டம் என்பதாகவும் முடிவு அமைகிறது. மதுரை வீரன் நாடகத்தில் (கதை) சாவு, சாவு கொண்ட வீரன் சாமியானான் எனும் நிலை பெற்றிடல் என்று தீர்வு அல்லது முடிவு அமையக் காணலாம்.

## 2.4 நாட்டுப்புறக் கதைகளை மறுவாசிப்புச் செய்தலும் நாடக ஆக்கங்களாக்குவதும் பற்றிய சில குறிப்புக்கள்.

ஒவ்வொரு காலகட்டத்தின் வரலாறும் அந்தக் கால கட்டங்களின் வர்க்கப் போராட்டங்களின் நிகழ்வுகள் ஆகும். எனவே, மக்களது சமூக நடவடிக்கைகளுடன் கருத்து நிலையைப் பொருத்திக் காணுதல் அவசியமாகும். அந்த வகையில் நாட்டுப்புற மக்கள் கொண்டுள்ள ஒரு கருத்து நிலையைப் புரிந்து கொள்வதற்கு அந்தந்த வர்க்கங்களுக்கிடையேயான சரியான உறவுகளைப் பகுத்து ஆராய வேண்டும்.* இவ்வாறு காணும் போது மட்டுமே பழைய

கதைகளையும், ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள செய்திகளையும், கருத்துக்களையும், ஏற்கனவே மனங்களில் பதிந்துள்ள கருத்துக் களையும், முறைமைகளையும் நம்மால் விமர்ச்சித்துக் காண முடியும். அதாவது மறுவாசிப்புச் செய்து புரிந்து கொள்ள இயலும். 'நாட்டார் ஆய்வு வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தின் அங்கமாகத் திகழ வேண்டும்'** என்று பேராசிரியர் கைலாசபதி கூறுவது இங்கு எண்ணுதற்குரியது. தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயலும் எந்த ஒரு இனமும், வர்க்கமும் தமது படைப்புக்கள் வழியேயும் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயல்கின்றன அல்லது முயன்றுள்ளன. நாட்டுப்புறக் கதைகள், கதைப்பாடல்கள், கூத்துக்கள் போன்றவை யாவும் அக்கால ஆதிக்கச் சக்திகளின் கவனத்துடன் விளங்கியுள்ளன என்னும் கருத்தினையும் கவனத்தில் கொண்டே அப்படைப்புக்களை மறுபரிசீலனை செய்தல் அல்லது மறு வாசிப்புச் செய்தல் வேண்டும்.

'உற்பத்தி என்பது அதன் நுகர்வில் தான் பூர்த்தியாகிறது என்பார் பேராசான் மார்க்ஸ் என்று கூறி வரலாறு தோறும் நுகரப்படும் இலக்கியப் பிரதிகளைப் பொறுத்மட்டில் 'இறுதி உற்பத்தி' நடைபெறுவதே இல்லை எனும் அ. மார்க்ஸ் அவர்களது கூற்றினை'*** கலை இலக்கிய வடிவங்களுக்கும் குறிப்பாக நாட்டுப்புறக் கதைகளுக்கும் பொருத்திக்காண இயலும்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும், சூழல், தேவை என்ற ரீதியில் வாசிப்புக்கள் அல்லது உள்வாங்கல்கள் அல்லது புரிதல்கள் வேறுபடுகின்றன. இருந்த வேறுபாடுகள் வேறு வேறு பொருள்களில் பெறப்படுகின்றன.

ஒரு பிரதி அல்லது கலை வடிவத்தை அதன் கருத்தாடல் களத்தில் வைத்துப்பார்ப்பதும் உள்ளும் வெளியிலும் புலப்படும் கருத்துக்களை ஒரு சேர எண்ணிப் பார்ப்பதும் மறுவாசிப்பு என்பதன் தெளிவாகும். எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நாட்டுப்புறக் கதைகள் இரண்டும் இன்று சாதிய ரீதியில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. கட்டபொம்முவில் இடம்பெறம் வெள்ளையத்தேவன் - தேவர் சமூகத் தலைவன் என அடையாளம் காணப்பட்டுள்ளதை வெளிப்படையாக அறிய முடிகிறது. இதில் அனைத்துச் சாதியினரும் குறிப்பாக மேல்ச்சாதியினரும்

* மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும் அ. மார்க்ஸ், ப.115.

** மேலது. ப.112.

*** மேலது. ப99

பார்வையாளராக அமைவதால் முரண்பாடு ஏற்படாமல் சமரசம் கொள்ளும் நோக்கில் கதைகள் அமைவதையும் அவதானிக்க முடிகிறது. சாதியக் கிளர்ச்சி ஏற்படாவண்ணம் அக்கலை வடிவங்களுக்குள்ளேயே (நாடகம்) சமரசம் கொள்ளும் நோக்கில் ஏற்படுத்திக் கொள்கிற விதங்களையும் அவதானிக்க முடிகிறது. நாட்டுப்புறக் கலை வடிவங்கள் இன்று சாதீய அரசியல் நோக்கில் பார்க்கப் படவேண்டியவையாயுள்ளன. (முன்னர் அனைவருக்கும் பொதுவானதாய்க் கருதப்பட்டிருந்த இருவேறு கதை - கலை இலக்கிய வகைகளும் இன்று வேறு திசை நோக்கி அழுத்தம் பெற்றுள்ளன.)

நாட்டுப்புறக் கதைகள் இன்றையக் காலகட்டத்திற்கேற்ப நாடகங்களாக்கப்பட வேண்டும். வெவ்வேறு கோணங்களின் வாசிப்புக்களுக்கேற்ப் அமையும் புரிதல்கள் நாடகவடிவத்தில் அழுத்தம் பெற வேண்டும். மக்களின் உளவியல் வாழ்வியல் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றன. இம் மாறுபாடுகளே கதைகளில் அழுத்தம் பெற்று நாடக ஆக்கம் பெற வழி வகுக்கின்றன. பழைய வாழ்க்கையின் நியதிகளாக்கப்பட்டவை இன்றைய வாழ்க்கையால் விமர்சிக்கப்பட்டும் கேள்விக் குள்ளாக்கப்பட்டும் கருத்துப் பெறுகின்றன. அக்கருத்துக்களே எவ்வகையான கலை இலக்கியங்களைப் பெற வேண்டும் என்றும் தீர்மானிக்க வல்லவையாகவும் உள்ளன. எங்கள் மூதாதையர்களின் வாழ்வுக்கும் செயலுக்கும் உரிமை கொண்டாடத் துணிந்தவர்கள் நாங்கள். எங்கள் வரலாற்றினைப் போற்றவும் எங்களால் முடியும்.* சமூக உணர்வுடனும் இன உணர்வுடனும் வரலாற்றுப் படைப்புக்களை அணுகவும் மாற்றியமைக்கவும் திறன் கொண்டவர்களாய் வளர வேண்டும். வரலாற்றைச் சமகாலத் தேவைகளின் அடிப்படையில் புரிந்து உணர்ந்து மறுவாசிப்புச் செய்து பழையனவற்றைப் புதுப்பார்வையில் கண்டு புதுப் படைப்புக்கள் செய்யும் போது நமது நாடகங்கள் இன்னும் ஒரு படிநிலை கூடுதலாகப் பெறும். நம் மக்களின் வாழ்வுடன் உண்மைத்துவம் பெற்று அவை நாடகச் சூழலை அகலமாகவும் ஆழமாகவும் ஆக்கும்.

## 2.5 இதுகாறும் கண்டதன் சுருக்கம்:

வெவ்வேறு வடிவங்களுக்கிடையேயான கதைகள் கூறுகள் ஒன்றாயிருந்தால் அவற்றில் காணப்படும் மாற்றங்கள், மொழி, சமுதாயம், கேட்போரின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்துக் கதை சொல்பவர்களின் திறத்தால் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம்.

---

* வெளி நாடக இதழ் 10, மார்ச் ஏப்ரல் 1992 (பலிபீடம், வரலாற்றை நோக்கிய ஒரு தேடல். வ. கீதா எழுதியுள்ள பகுதியிலிருந்து)

விளாடிமிர் பிராப்பின் நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பியல் ஆய்வுமுறையில் ஒன்றில் பல உறுப்புக்கள் தமக்குள் ஒன்றோடு ஒன்று உறவு கொள்கின்ற முறைமை, அவை முழுமையோடு இணைகின்றமை என்பனவற்றை அறிய முயல்வதும் உள்ளன. இந்த ஆய்வு முறைப்படி கலை இலக்கிய வகைகளை ஒப்பிடல் எனும் வகையில் கதை, கதைப்பாடல், வில்லிசைப்பாடல், கூத்துப்பாடல் ஆகியவற்றில் உள்ள கதைகளின் இயக்கத்திற்கு அமைந்த பொதுமை வினைகள், அவ்வினைகளுக்கும் மக்களின் உளவியல், வாழ்வியல் ஆகியவற்றுக்கும் உள்ள உறவு முறைகள், அப்பொதுமை வினைகள் நாடகம் எனும் வடிவம் பெறக் கொண்டுள்ள தன்மைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. முதலில் மதுரைவீரன் கதை, கட்டபொம்மு கதை இவ்விரண்டிலும் உள்ள முக்கியப் பொதுவினைகள் கண்டறியப்பட்டுள்ளன.

ராசா எனக் கதைத்துவக்கம் அமைதல், கதாநாயகன் குழந்தைப் பருவம் கொண்டு படிப்படியாக தாலாட்டு சடங்குகள் (காதுகுத்து) பெறுதல் என அமைதல், கதைப் போக்கில் புலம்பல் அல்லது ஒப்பாரி இடம்பெறுதல், இரு பாத்திரங்களுக்கிடையே தர்க்கப் பாடல் அல்லது பேச்சு அமைதல், விளையாட்டு அல்லது பொழுதுபோக்குக்கானகூறுகள் (விடுகதை போட்டுக் கொள்ளுதல்) அமைதல், காதல் கொள்ளுதல் (பாலியல் ரீதியானது) கனவு காணுதல் (பொல்லாத சொப்பனம் நர்னுங்கண்டேன்) அசரீரி இடம் பெறுதல், இறப்பும் அது தொடர்பான சடங்குகளும் நிகழ்தல், தெய்வநிலை பெறுதல் அல்லது தெய்வம் போற்றுதல் போன்ற பொதுமை வினைகள் மக்கள் அன்றாடம் சந்திக்கும் வாழ்வியல் தொடர்பானவை. அவை மேடையில் அல்லது கலை இலக்கிய வகைகளில் இடம் பெறும் போது நம்மையும் அறியாமல் அவை உளவியல் ரீதியில் நமக்கு நெருக்கமானவையாக அமைந்து அவற்றை வரவேற்கும் அல்லது எதிர்நோக்கும் மனப்பக்குவத்தைத் தருகின்றன. இவ்வகையில் வீரன், பொம்மு கதைகள் பல்வேறு வகைகளில் குறிப்பாக கூத்து, நாடகம் என உருப்பெறுவதும் உருப்பெற்ற போது வரவேற்பு பெறுவதும் இங்கு அவதானிக்கத்தக்கதாகும்.

நாடகத்தன்மையின் அடிப்படையானது அதன் காட்சி வடிவம் எனலாம். நாட்டுப்புறக்கதைகளின் கூறுகள் காட்சி வடிவமாதலுக்கு உகந்தவையாகவும் மக்களின் உளவியல், வாழ்வியல், போன்றவற்றுடன் தொடர்பு கொண்டவையாகவும் கதையின் நிகழ்வுகளுக்கான பொதுமை வினைகளில் காட்சி வடிவமாவதற்கு ஏற்றார் போல் அமையும் வகையில் அவை துணை நிற்க நாடக வடிவம் பெறுகின்றன. இந்த வகையில் மதுரை வீரனும், கட்டபொம்முவும் குறிப்பிட்ட அங்கீகாரத்துடன் சமூகத்தில்

இயங்கியுள்ளமையால் எத்தனையோ கதைகள் நாட்டுப்புறங்களி லிருந்தும் வீரன் - பொம்மு இவையிரண்டும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற நாடகங்களாகியுள்ளன.

மதுரை வீரன், கட்டபொம்மு ஆகிய இரு கதைகளும் தமிழகத்தில் பரவலாக இன்றளவும் நாடகங்களாக நிகழ்ந்து வருகின்றன. இதற்கு மிக முக்கியமான காரணம் அக்கதைகள் மறுவாசிப்புகளுக்கு உள்ளாகியுள்ளமை ஆகும். மேற்சொன்ன இரண்டையும் கருத்தாடல் களத்தில் வைத்துப் பார்க்கும் போது சாதிய ரீதியில் அமைந்து நின்று மறுவாசிப்புக் குள்ளாகின்றன. முன்னர் அனைவருக்கும் பொதுவானதாய்க் கருதப்பட்டிருந்த இவ்விரு கதையின் - கலை இலக்கிய வகைகள் இன்று வேறு திசை நோக்கி அழுத்தம் பெற்றுள்ளன.

மக்களின் உளவியல், வாழ்வியல் ஒவ்வொரு கால கட்டத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகள் கதைகளில் அழுத்தம் பெற்று நாடகம் ஆக்கம் பெற வழிவகுக்கின்றன. வரலாற்றை நம் காலத்தேவைகளின் அடிப்படையில் புரிந்து உணர்ந்து, மறுவாசிப்புச் செய்து பழையனவற்றைப் புதுப் பார்வையில் கண்டு புதுப்படைப்புக்கள் செய்யும் போது நாடகங்கள் இன்னும் ஒரு படிநிலை கூடுதலாகப் பெறும், மக்களின் வாழ்வுடன் உண்மைத்துவம் பெற்று அவை நாடகச் சூழலை அகலமாகவும் ஆழமாகவும் ஆக்கும்.

# முடிவுரை

ஒப்பாரிப் பாடல்கள் வாழ்ந்து முடிந்தவர்களின் வாழ்க்கை நிலையின் மேன்மைகளைச் சுட்டுவதாய் அமையும். கும்மிப் பாடல்களில் சிறு தெய்வங்களிடம் வேண்டுவதாயும், புகழ்ந்துரைப் பதாயும் அமையக் காணலாம். நாட்டுப்புறக் கலை இலக்கியப் படைப்புக்கள் கூற்று முறை, வர்க்க வேறுபாட்டுமுறை, கருத்து விளைவிக்கும் பாதிப்பு நிலை, யார் யாருக்கு யாரால் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன எனும் நிலை, சாதி, மதம், மொழி, இனம், வயது, அரசியல், தலைமுறைகளின் உள்வாங்கல்கள், எதிர் கொள்ளல்கள், மரபு வழித் தொடர்ச்சி போன்றவைகளால் ஒரு கருத்து பல்வேறு வகைகளில் அதாவது கதை, கதைப்பாடல், பாடல், கூத்து, நாடகம் எனக் கலை இலக்கிய வகைகள் உருப்பெறுகின்றன.

தமிழகத்தில் பல்வேறு கதைகள் நாடக வடிவம் பெற்றுள்ள போதிலும் மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கதை இன்றளவும் பரவலாக நாடக வடிவில் நிகழ்த்தப்படுகிறன. கூத்து, கும்மி, அம்மானை, உடுக்கடிப் பாடல் எனும் வகைகளில் கதைகள் சொல்வது இன்று குறைந்துவரக் காணமுடிகிறது. கதைகள் நாடகமாகி வருவதும் இன்று குறைவே, கதைப்பாடல்கள், பாடல்கள், கூத்துப்பாடல்கள் இன்று களங்களில் சிதைந்தே கிடைக்கக்கின்றன. கதைகள் நாடகமாகியுள்ள இவ்வகையும் இன்று சாதிய ரீதியில் அடையாளம் கொண்டே நிகழ்த்தக் காணமுடிகிறது.

கும்மி, அம்மானை போன்ற வகைகளில் பல மணி நேரங்கள், பல இரவுகள் என நிகழ்த்தும் அளவுக்குத் தொடர் கதைகள் பொதிந்து உருப்பெற்றமை கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளின் வாக்கில் என எண்ணத் தோன்றுகிறது.

மதுரை வீரன் சுவாமி கதைப் பாடலில் தாழ்த்தப்பட்ட குலத்தாரின் (சக்கிலியர்) சாமி என மதுரை வீரனைப் போற்றக் காண முடிகிறது. நாயக்கர் இனத்து மன்னன் மகன் சக்கிலியத் தாய்ப்பால் குடித்து வளர்ந்த போதிலும் மதுரை வீரனை நாயக்கர் குலத்தார் சாமியாக ஏற்கவில்லை. சக்கிலிய இனத்தவரே வீரனைக் குல சாமியாகப் போற்றுகின்றனர்.

மதுரை வீரன் அம்மானையில் இளையோரின் காதலுறவு, திருமண நிகழ்வு, இளந்தம்பதியர் உறவு நிலைக்கவும், செழிக்கவும் வீரனை வணங்க அருள் கிட்டும் எனும் கருத்து வலியுறத்தப் பெறுகிறது.

பூசாரி உற்பத்தி உடுக்கடிக் கதைப்பாடலில் வீரன் சாமியாய் பிறந்து சாமியாய் நின்று அருள் தருகிற கடவுள் என நம்பிக்கை தரப்படுகிறது. மதுரை வீர 'சுவாமி' என்றே தலைப்பிலும் பெயர் சூட்டியிருப்பது எண்ணுதற்குரியது.

மதுரை வீரன் கூத்து வகையில் சடங்குடன் கூடிய குல தெய்வமான சாமி, 'வீரன்' என்ற நம்பிக்கையோடு சக்கிலியர் குலத்தவர் நடத்தும் இந்நிகழ்த்துக்கலையில் காட்டப்படுகிறது.

கட்டபொம்மு கதைப்பாடலில் வரலாற்றை (பொம்மு) மக்களுக்குச் சொல்வது என்னும் கருத்தே கதை நெடுகிலும் ஊடோடி நிற்கிறது. மொத்தத்தில் விடுதலை உணர்வு அமையக் காண முடிகிறது.

கட்டபொம்மு ஒப்பாரியில் வீரம் பொருந்திய வெள்ளையத் தேவன் வீரத்துக்குரிய இனத்தவரான தேவர் சமூகத்துக்குச் சொந்தக்காரன் என்றும் கட்டபொம்மு வரலாற்றில் வெள்ளையத் தேவனின் நட்பு, வீரம், தியாகம் ஆகியவை பெரும்பங்கு வகித்தன என்றும், தேவர் சமூகத் தலைவன் 'வெள்ளையத்தேவன்' எனக் காட்டுவதும் நோக்கமாய் அமைகிறது.

ஒரு மண்ணின் கலை இலக்கிய வடிவம் என்பது அம்மண்ணின் பாரம்பரியம், பண்பு போன்றவற்றைக் கொண்டிருப்பது இயல்பு. இந்த வகையில் விடுதலைப் போரில் மடிந்த விடுதலை வீரன், வீரபாண்டியன் கட்டபொம்முவின் நாட்டுப்பற்று, தியாகம் என்பனவற்றை வாழும் சமூகத்துக்கு விதைப்பதையே நோக்கமாகக் கொண்டு கட்டபொம்மு வில்லுப்பாட்டு அமைவதைக் காண முடிகிறது.

கட்டபொம்மு கூத்து வகையில் முதல் பகுதியில் கட்டபொம்மு வரலாறு உள்ளபடி அமைய, அடுத்த பகுதியில் ஊமைத்துரை வரலாறு மிகைப்படுத்திக் கூறப்படுகிறது. மொத்தத்தில் மண்ணுக்குரிய மகத்தானவர்களை நினைவு கூர்தல் என்பதே நோக்கமாகக் கொண்டு கருத்து வெளிப்படுகிறது.

வீரன் - பொம்மு ஆகிய இரு நாடகங்களும் தொடக்கத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்த்தப்பெற்றன. இன்று மதுரை வீரன் நாடகம் திருச்சி, சேலம், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கரூர் போன்ற பகுதிகளில் மட்டுமே நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பாக, சக்கிலியர் சமூகத்தார் உள்ள பகுதிகளிலேயே அதிகம் நடத்தக் காண முடிகிறது. நிகழ்த்தும் கலைஞர்களிலும் சக்கிலியர் சமூகத்தாரே எண்ணிறைந்துள்ளனர்.

கட்டபொம்மு நாடகத்தை இன்று நெல்லை. தூத்துக்குடி, இராமநாதபுரம் மதுரை ஆகிய பகுதிகளில் மட்டும் நடத்தக் காண முடிகிறது. குறிப்பாகத் தேவர் (மறவர்) சமூகத்தாரே பொம்மு நாடகத்தை அதிகம் நடத்துவோராகவும், நாடகங்களில் பங்கேற்க முன் வருவோராகவும் உள்ளனர்.

நெல்லை, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் கட்டபொம்மு நாடகத்தின் அனைத்துப் பகுதிகளும் நிகழ்த்தப்படுகின்றன. (இப்பகுதியில் நாயக்கர் சமூகத்தவர் பொம்மு பரம்பரையினர் பரவலாயுள்ளனர்)

மேற்சுட்டிய இரு நாடகங்களும் வீரனையும், பொம்முவையும் சாதியத் தலைவர்களாகக் கொண்டு அவரவர் பகுதிகளில் நாடகம் நிகழ்த்தப்படுகின்றன. முத்துராமலிங்கத் தேவர் வருகைக்குப் பின்னரே தேவர் சமூகத்தார் தமக்கான சமூகத் தலைவனாக அடையாளம் கொண்டு வெள்ளையத் தேவன் இடம் பெறும் பகுதியை கட்டபொம்மு நாடகத்தில் நடிக்கின்றனர். சாதிய அடையாளம் காணும் சமூகமாக இன்று சமூகம் மாறி வருகிறது என மேற்சொன்ன இரு நாடகங்கள் நிகழ்த்தப்படும் பார்வையிலிருந்து அறிய முடிகிறது.

வெவ்வேறு வடிவங்களுகிடையேயான கதைக்கூறுகள் ஒன்றாயிருந்தால் அவற்றில் காணப்படும் மாற்றங்கள் மொழி, சமுதாயம், கேட்போரின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்துக் கதை சொல்பவர்களின் திறத்தால் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம்.

விளாமிர் பிராப்பின் நாட்டுப்புறக் கதைகள் பற்றிய அமைப்பியல் ஆய்வு முறையின்படி கலை இலக்கிய வகைகளின் இயக்கத்திற்கு பொதுமை வினைகள் முக்கியமானவை. அப்பொதுமை வினைகளுக்கும் மக்களின் உளவியல், வாழ்வியல் ஆகியவற்றிக்கும் உறவு முறைகள் காணப்படுகின்றன. இதன் வழியே அவை நாடக வடிவம் பெறக் கொண்டுள்ள தன்மைகள் பற்றியும் ஆராய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாலாட்டு, காது குத்துச் சடங்கு, புலம்பல் அல்லது ஒப்பாரி, தர்க்கம், விளையாட்டு அல்லது பொழுது போக்குக்கான கூறுகள், பாலியல் (காதல்) கனவு கொள்ளுதல், அசரீரி அல்லது தெய்வம், இறப்பு, இறுதிச் சடங்குகள், தெய்வநிலை பெறுதல் அல்லது தெய்வம் போற்றுதல் போன்ற பொதுமை வினைகள் மக்கள் அன்றாடம் சந்திக்கும் வாழ்வியல் தொடர்பானவை. அவை மேடையில் அல்லது கலை இலக்கிய வகைகளில் இடம் பெறும் போது நம்மையும் அறியாமல் அவை உளவியல் ரீதியில்

நெருக்கமானவையாக அமைந்து அவற்றை வரவேற்கும் அல்லது எதிர் நோக்கும் அல்லது மனங்கொள்ளும் பாங்கு வித்தை அளிக்கின்றன. இவ்வகையில் மதுரை வீரன் - கட்டபொம்மு கதைகள் பல்வேறு வகைகளில் குறிப்பாக கூத்து, நாடகம் என உருப்பெறவும், உருப்பெற்ற போது வரவேற்கப்பட்டமையும் இங்கு அவதானிக்கத்தக்கன.

மக்களின் உளவியல், வாழ்வியல் என்பன ஒவ்வொரு கால கட்டத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகளே கதைகளில் அழுத்தம் பெற்று நாடக ஆக்கம் பெற வழி வகுக்கின்றன. வரலாற்றைச் சமகாலத் தேவைகளின் அடிப்படையில் புரிந்து உணர்ந்து, 'மறுவாசிப்புச் செய்து பழையனவற்றைப் புதுப்பார்வையில் கண்டு புதுப்படைப்புக்கள் செய்யும் போது நாடகங்கள் இன்னும் ஒரு படி நிலை கூடுதலாகப் பெறும். மக்களின் வாழ்வுடன் உண்மைத்துவம் பெற்று அவை நாடகச் சூழலை அகலமாகவும் ஆழமாகவும் ஆக்கும்.

## பின் இணைப்பு

1. கட்ட பொம்மு கும்மி
2. கட்டபொம்மு ஒப்பாரி
3. கட்டபொம்மு வில்லிசைப்பாடல்
4. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக வடிவத்தில் கட்டபொம்மு கதை
5. மதுரை வீரன் கூத்து
6. மதுரை வீரன் கூத்து - சில செய்திகள்
7. தகவலாளர் பட்டியல்

## இணைப்பு: I

### கட்டபொம்மு கும்மி *

தன்னன்னே னானன்னே தன்னனன்னே
தன்னனன்னே னானன்னே தானானே

மருவில்லா கலைகளைக் கற்றுணர்ந்த
மாபெரும் சபையோரை நான் பணிந்தேன்
கூடியிருக்கின்ற தாய்மார்களே - சபையில்
கோடி நமஸ்காரம் நானடியேன் (கூடி)

பாடத் தெரியாத நாளையிலே - எனக்கு
பாடல் கொடுத்தவள் பரதேவிதான்
எழுதத் தெரியாத நாளையிலே - எனக்கு
ஏடு கொடுத்தவள் பரதேவிதான்

கோட்டை மதில்களைக் காவல் செய்யும் - பரவை
கோட்டை முனியாண்டி நான் சரணம்
ஆயிரங் கண்களுடையவளே - அம்மா
அம்பிகையே மாரியே நான் பணிந்தேன் - தாயே

உந்தன் பேரை சிரசில் வைத்தேன் - நான்
உலகம் முழுவதும் பாடிவாறேன்
பாப்பாரப் பாசி அணிந்தவளே
பச்சைக்கிளி ரூபம் கொண்டவளே

மாரடி பாசி யனிந்தவளே - தாயே
மதயானைக் குட்டிபோல் வந்துதவு
ஏழாறு கூடி பாலாருமா - தாயே
எதுக்கே எதிர்த்த ஆறு

கல்லாலே கோட்டையே வேணுமின்னு
முள்ளாலே கோட்டைகட்டி ஆண்டவளே
முன்னுக்கு நிற்கவேணும் சபைதனிலே.

---

பரதேவி - பரவையில் குடிகொண்டுள்ள அம்மன்

* பரவை முனியம்மாள் பாடியது, 4.4.1992. வயது 45
இரண்டடிக்கு ஒருமுறை 'தன்னானே' சந்தத்தை பின்பாட்டாளர் பாட இப்பாடல் அமைகிறது.

எளந்த முள்ளாலே கோட்டைக்கட்டி
ஏறிட்டுப் பாரம்மா இந்த நேரம்
வடக்கே* ரொம்ப வெகுதூ ரமா
வல்லாள தேசத்தை ஆண்டவளே
வலசக் கடைதனில் வந்தவளே

கட்டபொம்மு குலம் காத்தவளே
கடைசிவரையில் கண்பாரம்மா
கொண்டையங் கோட்டை மறவர் குலமாம்
கோடையிடி போன்ற பாதர் வெள்ளை

செம்ம நாட்டு மறவர் குலமே
சேதுபதிமகள் வெள்ளையம்மாள்
ஆரக்குளத்திலே தாய் தந்தையுடன்

பிரிந்து வந்தவர் பாதர் வெள்ளை
தண்ணீர் தாகம் கண்டு தவிக்கையிலே
கட்டபொம்மு உலவிவர உதவினாரே
குதிரையில் தேவரும் கூடச் சென்றார்

சேதுபதிமகளை வெள்ளையம்மாளை
அழகில் மயங்கியே சிறையெடுத்தார்
கட்டபொம்மன் வாழ்வில் எட்டப்பன்தான்
காட்டாறு போலவே வினையானதே

ஊரானூ ரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டனாம் வெள்ளரிக்கா
காசுக்கு ரெண்டு விக்கச்சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்

வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம்
வேடிக்கை காட்டுது வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசைப்பட்டு
வேசம் கொலஞ்சாளாம் தேசவள்ளி
வேசம் கொலஞ்சாளாம் தேசவள்ளி

---

* வடக்கேயிருந்து தென் தமிழகத்திற்கு பஞ்சம் பிழைக்க வந்த குலம்.

**இணைப்பு: II**

## கட்டபொம்மு ஒப்பாரி *

ஆலம்பலகையிலே என்னத் தேடியசீமானே
அருச்சனரும் தேவியுமா
அமர்ந்திருந்து பேசயிலே
ஆலம்பலகை விட்டேன்
அருச்சனரைத் தப்ப விட்டேன்
அல்லி புலம்புவது - இந்த
அரணடிக்கே கேக்கலியோ

சீவன் பிரியையிலே
சீமானுந் தேவியுமா -
என்னத் தேடிய சீமானத்தப்ப விட்டேன்
எனக்கு வாச்ச மன்மத ராசாவே

சொல்லி புலம்புவது சிவனடிக்கே கேக்கலியோ
ஒப்புக் கழுதவர் ஆறுபேரு[1]
உடன் கட்டைக் கழுதவள் வெள்ளையம்மா
பணத்துக்கு அழுதவர் ஆறுபேரு
பாசத்துக்கழுதவள் வெள்ளையம்மாள்[2]
போறது போறேண்டி வெள்ளையம்மாள்
போக்குத் தண்ணி[3] நீ தந்திடடி

அடி அன்னக்கிளியே அருங்கிளியே
ஆசைக்குகந்திட்ட நாயகியே
கொண்டையங்கோட்டை மறவர் குலமே
கோதைக்கு வாய்த்திட்ட கோமகளே
செம்ம நாட்டு மறவர் குலமே
சேதுபதிபெற்ற வெள்ளையம்மா - ஒனக்கு

---

* பாடியவர் மகாலிங்கம். நாள் 5.4.1992

1. பாண்டியத் தேவன் உடன்பிறந்த 6 சகோதரிகளையும் வெள்ளையத்தேவன் மணந்தான் என்பது வழக்கில் உள்ள பல கதைகளில் ஒன்று.

2. பொண்ணுசாமி மகள் வெள்ளையம்மாள் என்பவள் காளை ஒன்று வளர்க்க அக்காளையை அட்டகியவனை மணமுடிக்க உள்ளேன் என உள்ள ஒரு கதை, புலிப்பாண்டித்தேவன் கதை என்பதில் வருகிறது.

3. போக்குத்தண்ணி - இறக்கும் தருவாயில் வாயில் உறவினர் பால் தண்ணீர் ஊற்றுவர்.

கிழக்கே எல்லையாம் கீழக்கரை
மேற்கே எல்லையாம் குளக்கரை*
கீழக்கரை முதல் குளக்கரை வரை
குளக்கரை முதல் கீழக்கரை வரை
என் கீர்த்தியும் மாறாதடி - வெள்ளையம்மா
கட்டிக் கரும்பே என் கனிரசமே
காதலுக்குகந்த மாங்கனியே

போருச் சேவல எடுத்து வாடி
பொற் கொடியே எந்தன் வெள்ளையம்மா
கருப்புச் சேவல எடுத்துவாடி
கட்டழகியே எந்தன் வெள்ளையம்மா
போய் வாறேண்டி வெள்ளையம்மா
பொற்கொடியே எந்தன் வெள்ளையம்மா

போகாதே போகாதே எங்கணவா
பொல்லா சொப்பணம் நானுங்கண்டேன்

கண்ட கனவுகளைச் சொல்லடியே
கட்டழகி என் வெள்ளையம்மா

இஞ்சிக் கிணறு இடியக்கண்டேன்
இலுமிச்சை கொடி அழியக் கண்டேன்
மாதுளம் பண்ணையழியக் கண்டேன்
மன்னவா நீ அங்கு சாகக்கண்டேன்

குருவிபறக்காத பாஞ்சையிலே
கும்பினிப் படையெல்லாம் உலவக் கண்டேன்
பருந்து பறக்காத பாஞ்சையிலே
பட்டாளம் வந்து உலாவக்கண்டேன்

கன்னிகழியாத பெண்ணொருத்தி
கையில் நெருப்புடன் போகக் கண்டேன்
ஆகாச் சகுணங்கள் கண்டதனால்
ஆணழகா நீ·போக வேண்டாம்

ஆறிலேயும் சாவு நூறிலயும் சாவு
அஞ்சமாட்டேன்டி உங்கணவன்
போகத் தடுதலை செய்தாயானால்
பொல்லாத கோபங்கள் வந்திடுமே

* விருதுநகர் அருகில் உள்ள குளக்கரை

என்புத்தி கேட்பவர் கோடாகோடி
பெண்புத்தி கேட்பேனா பாதர்வெள்ளை
என்னென்ன வார்த்தை நீ சொன்னாலுமே
ஏசிடுவேன்டி வெள்ளையம்மா

உயிருடன் கருமாதி செய்ய வேண்டும்*
உத்தமியே எந்தன் கண்மணியே
வாய்க்கரிசி நீ போடவேணும்
வல்லவனைச் சுற்றி அழுகவேணும்
கண்ணுக்கு மஞ்சளரைத்து வைத்து
கருமாதி காரியம் முடிக்கவேணும்
வைகுண்டமல்லு எடுத்துவந்து
வாய்க்கட்டு கைக்கட்டு கட்டவேணும்
நிறை நாளில் நெல்லு அளந்துவைத்து
நெஞ்சிலடித்து நீ அழுகவேணும்
நொக்கா தங்கை ஆறுபேரும் -வந்து
அன்புடன் கருமாதி முடிக்க வேணும்

பத்துப்பேர் பார்க்கக்கட்டிய தாலிய
பந்தக்காலிலே கட்டுங்கடி
கொட்டுக் குலவையுடன் கட்டிய தாலியை
கட்டிலில் சட்டத்தில் கட்டுங்கடி
ஒருதாரத்துக்கு ஏழு தாரங்கட்டி
எள்ளுத்தண்ணி எறைக்கப்புண்ணியமில்லே
தாரபேரு சொல்ல ஒரு புள்ளையில்லே

காசிக்குச் சில காலம் போனோம் நாதா
கண்மணி ஒன்றும் பிறக்கலையே
பழனிக்குச் சில காலம் போனோம் நாதா
பேருக்கு ஒன்றும் பிறக்கலையே

அள்ளிக் கொடுத்தேனடி ஆருயிரே
கொள்ளி வைக்க ஒரு குழந்தையிலே
உள்ளூர்க் குடிமகனைக் கூட்டிவந்து
கொள்ளிக்குடம் ஒன்றுடைக்க வேணும்.

---

* சாவுக்கனவு கூறியதும் திரும்பி வருவது அரிது என நம்பிகடைசிச் சடங்குகளை உயிருடன் இருக்கும் போதே செய்து பார்க்கவேண்டும் என வெள்ளையம்மாள் விரும்பிட அதற்கு இசைந்து வெள்ளையத்தேவன் சடங்கு செய்திட ஒப்புதல் அளித்து அமையப்பாடுவது ஆகும்.

இணைப்பு: III

## கட்டபொம்மு வில்லிசைப் பாடல்

### காப்பு

தாய் நாட்டின் சுதந்திரம் தன்னை
தன்னுயிர் ஈந்து காத்த செம்மல்
ஓய்வின்றிப் போர் புரிந்த மாவீரன்
ஒப்பற்ற தனிப்பெரும் தமிழ் மன்னன்
ஓங்கு புகழ்கொண்ட கட்டபொம்மன்
ஒளி சிந்தும் திருநாமம் போற்றி போற்றி

### 1. பாட்டு

தொந்தனத்தோம் என்று சொல்லியே வில்லில் பாட
வந்தருள் சந்தான தெய்வமே
வந்தத்தோடு பானை தாளம்
சித்துடுக்கை பம்பையுடன்
சிந்துபுகழ் கட்டபொம்மன்
திருக்கதையை நாங்கள் பாட

வந்தெனக்குத் துணையிருப்பாள் தமிழரசி
உந்தன் வடிவழகு பாதம் போற்றி

### வசனம்

பெருமை படைத்த நமது பாரதநாட்டில் அந்நியரின் ஆட்சியை எதிர்த்து சுதந்திரத்தைக் காக்க எழுச்சி மிக்க விடுதலைப் போர் புரிந்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன்.

கட்டபொம்மனின் வீரவரலாறு நாட்டு மக்களின் உணர்ச்சிக் காவியமாகப் போற்றப்படும் அமரகாவியமாகும். கட்டபொம்மன் பிறந்தநாடு பாஞ்சாலங்குறிச்சி என்ற பெருமை படைத்த நாடாகும்.

அவர் ஆறுமுகத்தம்மாளுக்கும் ஜெகவீர கட்டபொம்மு என்பவருக்கும் 1760 - ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3 - ஆம் நாள் செல்வத் திருமகனாகப் பிறந்தார். பெற்றோர்கள் -

### 2. பாட்டு

விரமுள்ள செல்வத் திருமகனை
விழிபோலப் போற்றி வளர்த்தார்கள்
சீராட்டி நல்ல அமுதூட்டி
சிங்காரித்து உள்ளம் மகிழ்ந்தார்கள்.

## வசனம்

கட்டபொம்மன், பெற்றோர்களும் நாட்டு மக்களும் போற்றும்படியாக வளர்ந்து வந்தார். அவருக்குக் குமாரசாமி, துரைசிங்கம் என்ற இரண்டு தம்பிகள் இருந்தார்கள். அவர்களில் இளையதம்பி துரைசிங்கம் நன்றாகப் பேசமுடியாது. அதனால் மக்கள் அவரை ஊமைத்துரை என்று செல்லமாக அழைத்தார்கள்.

கட்டபொம்மன் பள்ளிப்பருவம் அடைந்தவுடன் சகல கலைகளையும் கற்றான்.

## 3. பாட்டு

திறமையுடன் கல்வி கற்றான் - நல்ல
திருவுள்ளத்தில் தெளிவு கண்டான்
வாள்வித்தை சிலம்பு வித்தை
வலிமையுள்ள மல்யுத்தம்
ஈட்டி வீசி அம்பு விடும்
இணையற்ற பயிற்சியுடன்
வீரமுள்ள கலைகள் பயின்றான் - நல்ல
வெற்றிவாகை சூடி வந்தான்.

## வசனம்

கட்டபொம்மன் சிறப்பாகக் கல்வி கற்றதோடு மன்னருடைய குழந்தைகளுக்கான பல கலைகளையும் கற்று பாஞ்சாலங்குறிச்சியின் கண்மணிபோல் விளங்கினான்.

பெற்றோர்கள் கட்டபொம்மனுக்கு வீரசக்கம்மாள் என்ற அழகும் அறிவும் நிறைந்த பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள். 30 வயதானவுடன் பாஞ்சாலங்குறிச்சியின் மன்னனாக முடிசூடிக்கொண்டான். சிறப்பாக ஆட்சிபுரிந்து வந்தான்.

இச்சமயம் 18வது நூற்றாண்டின் இறுதியில் தென்னாடாகிய தமிழ்நாடு முழுமைக்கும் ஆற்காடு நவாபு அரசனாக இருந்தான். அவன் ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் பட்ட கடனுக்காக குறுநில மன்னர்களிடம் கப்பம் வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர்களுக்கு வழங்கினான். எனவே.......

## 4. பாட்டு

ஆற்காட்டு நவாப்பவன்
ஆட்சி உரிமை கொடுத்ததினால்

ஆங்கிலேயக் கம்பெனியார்
அதிகார வெறியடைந்தார்
ஆர்ப்பாட்டக் கெடுபிடியாய்
அதட்டி நின்று வரிகேட்டார்
அடங்கிப் பயந்த மன்ன ரெல்லாம்
அடிமைபோல வரியைக் கொடுத்தார்.

### வசனம்

தமிழ்நாட்டில் இருந்த எல்லாப் பாளையக்காரர்களையும் அடக்கிவிட்டோம் என்ற ஆணவத்தில் ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மனிடமும் வரி கேட்டார்கள். ஆங்கிலேயரின் வெறியைக் கண்ட கட்டபொம்மன் அவர்களுக்குச் சரியான பதிலைச் சொன்னான்.

### 5. பாட்டு

வானம் பொழிகிறது
பூமியிங்கே விளைகிறது
வாழ்க்கையது வளம்கான
மக்கள் இங்கே உழைக்கின்றார்
வாணிபம் செய்ய வந்த வீணர் தமக்கு - நான்
வரிகொடுக்க ஒரு நாளும் முடியாதென்றார்.

### வசனம்

கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்துவிட்டான். ஆங்கில அதிகாரியான ஆலன் என்பவன் கட்டபொம்மனிடம் வந்து நயமாகப் பேசி வரி கேட்டான். அதற்கும் கட்டபொம்மன் சம்மதிக்காமல் கப்பம், கிஸ்தி, வரி என்ற பெயரால் ஒரு செப்புக்காசுகூட கொடுக்க முடியாதென்று மறுத்துக் கூறினான்.

அப்பொழுது கலெக்டராக இருந்த ஜாக்சன் என்பவன் கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினான். எப்படியென்றால்?

### 6. பாட்டு

வரியது செலுத்த மறுப்பது ஏனோ
காரணம் தெரியவில்லை
வம்புகள் செய்து எங்களை எதிர்த்தால்
நீதான் துயரடைவாய்
வாரம் ஒன்று முடிவதற்குள்ளே
என்னைப் பார்ப்பதற்கு
நேரில் வருவாய் உன்னிடம் தனியாய்
பேசிட விரும்புகின்றேன்.

## வசனம்

இவ்வாறு ஜாக்சன் கட்டபொம்மனுக்குக் கடிதம் எழுதினான். அதைக் கண்ட கட்டபொம்மன் படைகளோடு புறப்பட்டு ஜாக்சனைக் காணத் திருநெல்வேலிக்குச் சென்றான்.

ஜாக்சன் கட்டபொம்மனை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பேட்டி கொடுக்காமல் பல ஊர்களுக்குச் சென்று இராமநாதபுரம் போய்ச் சேர்ந்தான்.

கட்டபொம்மனும் மனம் தளராமல் தன்னுடைய படைகளுடன் ஜாக்சனைப் பின்தொடர்ந்து சென்று இராமநாதபுரத்தை அடைந்தான்.

ஜாக்சன் கட்டபொம்மனைத் தனியாக அழைத்து கைது செய்துவிடலாம் என்று சதித்திட்டம் தீட்டினான்.

இராமலிங்க விலாசம் என்ற மாளிகையில் கட்டபொம்மன் தனிமையில் வந்து ஜாக்சனைக் கண்டான். அப்போது ஜாக்சன் கட்டபொம்மனுக்கு உரிய மரியாதை கொடுக்காமல் நிற்கவைத்தே பேசினான்.

## 7. பாட்டு

கம்பெனி தனக்கு இதுவரை நீதான்
வரியது செலுத்தவில்லை
காலம் கடத்தி இதுவரை எங்களை
ஏமாற்றி வருகின்றாய்.

## வசனம்

கட்டபொம்மா! எல்லாப் பாளையக்காரர்களும் வரி செலுத்திவிட்டார்கள். ஆனால் நீ மட்டும் இன்னும் கப்பம் கட்டாமல் காலம் கடத்தி ஏமாற்றிக் கொண்டு வருகின்றாய். மேலும் எட்டப்பனுக்கு நாங்கள் கொடுத்த ஊர்களைத் தர மறுக்கின்றாய்.

எனவே.....

## 8. பாட்டு

இத்தனை குற்றங்கள் செய்திட்ட உன்னை
இனிமேல் விட மாட்டேன்
இப்பொழுதே உன்னை விலங்குகள் மாட்டி
சிறையில் அடைத்திடுவேன்

## வசனம்

கம்பெனிக்கு விரோதமாகப் பல குற்றங்களைச் செய்திருக்கும் உன்னை இப்பொழுதே கைது செய்து சிறையில் அடைப்பேன் என்று ஜாக்சன் இருமாப்போடு பேசினான்.

அதைக்கேட்ட கட்டபொம்மனது கண்கள் சிவந்தன. கோபத்தால் நரம்புகள் முறுக்கேறி விம்மிப் புடைத்தன. தினவெடுத்த தோள்கள் மலை போல் குலுங்கியது.

அவ்வளவுதான் அங்கே கைது செய்ய வந்த ஆங்கிலேயக் கைக்கூலிப் படைகளைத் தன் வாள்கொண்டு தாக்கிச் சின்னாபின்னமாக வெட்டி வீழ்த்தினான். மறைந்திருந்த கட்டபொம்மனின் வீரர்களும் வெளியில் வந்து சண்டை செய்தார்கள். இராமநாதபுரம் பெரும் போர்க்களமாக மாறியது. எப்படியென்றால்........

## 9. பாட்டு

வாளோடு வாளும் மோதியது
வஞ்சகரின் கூட்டம் அலறியது
பாஞ்சாலங்குறிச்சி வீரரெல்லாம்
பாய்ந்தடிக்கும் வீரம் முழங்கியது
வெள்ளையத் தேவனின் கைகளினால்
வெட்டி இறந்தவர் ஆயிரமாம்
ஊமைத்துரை மன்னன் வாள் வீச்சில்
உதிரவெள்ளம் எங்கும் பெருகியது.

## வசனம்

இவ்வாறு சண்டை கடுமையாக நடந்தது. அப்பொழுது கிளார்க் என்ற ஆங்கிலத் தளபதி கட்டபொம்மனைக் கைது செய்ய வந்து நேரடியாக மோதினான். கட்டபொம்மன் ஒரு நொடியில் என்ன செய்தாரென்றால்?

## 10. பாட்டு

கொக்கரித்து எதிர்க்க வந்த
கிளார்க்கு என்னும் கொடியவனை
கோமகனாம் கட்டபொம்மன்
கொடுவாளைத் தானுயர்த்தி
கொஞ்சமேனும் தயக்கமின்றி
வெட்டித் தரையில் சாய்த்துவிட்டு
இனியும் இருந்தால் மோசம் என்று
இரும்பு நெஞ்சன் தப்பிச் சென்றான்.

## வசனம்

பெரும் போராட்டத்திற்கு மத்தியில் கிளார்க் என்பவனை வெட்டி வீழ்த்தி விட்டு கட்டபொம்மனும் மற்றைய படைவீரர்களும் கோட்டையை விட்டு வெளியேறிப் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கித் தப்பி சென்றார்கள். மந்திரி தானாவதிப் பிள்ளை மட்டும் ஜாக்சனால் கைது செய்யப்பட்டார்.

அடுத்து, லூசிங்டன் என்பவர் கலெக்டராக நியமிக்கப் பட்டார். தானாவதிப்பிள்ளை விடுதலை செய்யப்பட்டார்.

லூசிங்டன் பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுத்துச் சென்று கட்டபொம்மனைச் சிறைபிடிக்க, வேண்டிய படைகளை அனுப்புமாறு சென்னையில் இருந்த கவர்னருக்குக் கடிதம் எழுதினான்.

அதன்படி பானர்மேன் தலைமையில் பெரும்படை வந்தது.

## 11. பாட்டு

பீரங்கியைத் தாங்கிவரும் வண்டிகளுடன்
பீடுநடை போட்டதய்யா வெள்ளையர்படை
கோரமுள்ள குண்டுகளை
சிப்பாய்களும் கொண்டு வந்தார்
பாரமுள்ள துப்பாக்கியை
தோளில் வைத்து சுமந்து வந்தார்
ஆங்கிலேயக் கம்பெனியின் கொடிபறக்க
ஆவேசம் பொங்கியெழத் திரண்டு வந்தார்

## வசனம்

படைகளோடு புறப்பட்டு வந்த பானர்மேன் தானே கலெக்டராக அதிகாரம் பெற்று தன்னை வந்து காணும்படி கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினான்.

ஆங்கிலேயரின் சூழ்ச்சியை அறிந்த கட்டபொம்மன் தனக்குப் பதிலாக மாப்பிள்ளை வன்னியர் என்பவரைத் தூதுவராக அனுப்பினார். அப்போது பானர்மேன் என்ன செய்தாரென்றால்?

## 12. பாட்டு

தூது வந்த வன்னியரை வன்னியரை
துன்மார்க்கனாம் பானர்மேனும் சிறையில்
வைத்தான்

எதிர்பார்த்த கட்டபொம்மன் கட்டபொம்மன் - அவன்
ஏமாற்றி விட்டதாகக் கோபம் கொண்டான்
சிங்கம் விழ வலை விரித்தான்
சின்ன எலி சிக்கிக் கொண்ட கதையானது.

## வசனம்

பானர்மேன் தூதுவராக வந்த மாப்பிள்ளை வன்னியரைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சியின் மேல் படையெடுக்கத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

பாஞ்சாலங்குறிச்சி மக்களுக்கு சக்கமாள் தேவி குல தெய்வமாகும். அந்த அம்மனின் ஆலயம் திருச்செந்தூரில் இருந்தது. அங்கே ஆண்டுதோறும் நடைபெறும் சக்கம்மாள் திருவிழா சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. மக்கள் சக்கம்மாளை வழிபட்டார்கள். எப்படியென்றால்?

## 13. பாட்டு

பாருலகம் புகழ் சக்கதேவி! நாயகியே!
பாஞ்சாலங் குறிச்சியைக் காத்தருள்வாய்
சீர்மனக்கும் உந்தன் திருவடியை சக்கதேவி! நாயகியே!
சிக்கெனவே பற்றி கை தொழுதோம்.

## துரிதம்

மாண்புடைய எங்கள் தாயகத்தில்
மாற்றானும் உள்ளே நுழைந்துவிட்டான்
வாணிபம் செய்திட வந்தவர்கள்
வளைத்துப் பிடிக்கத்தான் துணிந்தார்
ஆண்மை இழந்திட்ட பாளையத்தார்
ஆமைகளாகவே மாறிவிட்டார்.

## பாட்டு - தொடர்ச்சி

இந்த நிலைமைகள் மாறவேண்டும் சக்கதேவி! அம்பிகையே!
இன்பமுடன் மக்கள் வாழவேண்டும்
சொந்தமுள்ள நாட்டைக் காவல் செய்து
சுதந்திரமாய் வாழ அருள்புரிவாய்.

## வசனம்

இவ்வாறு பாஞ்சாலங்குறிச்சி மக்களெல்லாம் சக்கதேவியைப் போற்றி வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

பானர்மேன் வஞ்சகமாகப் பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுத்து வந்தான். திருவிழா காணச் சென்றவர்கள் வருவதற்குள் பானர்மேன் கோட்டையை முற்றுகையிட்டான். இந்தச் சமயத்தில்....

## 14. பாட்டு

வைர நெஞ்சம் தான்படைத்த - நல்ல
வள்ளலவன் கட்டபொம்மன்
பைரவியாம் சக்கம்மாளை
பணிந்து நின்று தலை வணங்கி
வையகத்தில் சுதந்திரத்தை
வானுயர நிலைநிறுத்த
கைகளிலே வாளெடுத்தான்
கட்டுடலில் கவசமிட்டான்
பொய்யர்களாம் வெள்ளையரை
போர்க்களத்தில் சாய்த்திவிட
செங்குருதி திலகமிட்டு - வீர
சிங்கமென முழக்கமிட்டான்.

## வசனம்

போர்க்கோலம் பூண்ட கட்டபொம்மன் குலதெய்வமான சக்கம்மாளை வணங்கிவிட்டு தன் மனைவியான வீர சக்கம்மாளிடம் போர்க்களம் போவதற்கு விடைகேட்டான். அப்போது......

## 15. பாட்டு

மாலையிட்ட மன்னன் பாண்டியனின்
மாண்புடைய பாதம் தான் வணங்கி
கற்பூரத்தை ஏற்றி ஒளி காட்டி
கற்பரசி சாந்துப் பொட்டும் வைத்தாள்
போர்க்களத்தில் பாயும் வேங்கையென
போய்வருக என்று விடை கொடுத்து
வேந்தருக்கு வெற்றி மாலையிட்டு
வென்று வருகயென வாழ்த்திசைத்தாள்.

## வசனம்

இவ்வாறு பாஞ்சாலங்குறிச்சியின் அரசியான வீர சக்கமாள் தன் கணவனுக்கு வாழ்த்துக் கூறி விடை கொடுத்தாள்.

இதைப் போலவே கட்டபொம்மனின் வீரத்தளபதி வெள்ளையத்தேவன் தன்னுடைய மனைவியான வெள்ளை

யம்மாளிடம் வந்து போருக்குப் போக விடைகேட்டான். அதற்கு வெள்ளையம்மாள் அத்தான் நேற்று இரவு.......

## 16. பாட்டு

கண்ணுறங்கும் வேளையிலே
கண்டதொரு தீங்கனவை
எண்ணி மனம் ஏங்குதய்யா
என்னுடலும் பதறுதய்யா
கோட்டையிலே ஆந்தை ஒன்று
கொடுமையுடன் அலறக்கண்டேன்
நாட்டைவிட்டு தெய்வமங்கை
நடு நடுங்கிச் செல்லக் கண்டேன்
வீட்டினிலே போட்ட பந்தல்
விடியுமுன்னே சாயக்கண்டேன்

## வசனம்

வெள்ளையம்மாள் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட வெள்ளையத்தேவன் மிகவும் ஆத்திரமடைந்து, வெள்ளையம்மாள் நமது நிலைமை என்னவென்று புரியாமல் பேசாதே. கோட்டையைச் சுற்றிலும் மாற்றான் படைகள் சூழ்ந்துவிட்டது. போர் முரசு கொட்டி நேர் நின்றுதாக்க நமது வீரர்களும் புறப்பட்டு விட்டார்கள்.

நரம்பு முறுக்கேறி இரத்தம் சூடேறிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் வாழ்வதா சாவதா என்ற முடிவுக்கு முன்னால் நீ ஒரு தடையாக இருந்து என்னைத் தடுக்காதே என்று ஆவேசமாகக் கூறினான். அதற்கு வெள்ளையம்மாள் மறுபடியும் அத்தான் நமது நிலமை புரியாமல் பேசுகின்றீர்களே......

## 17. பாட்டு

வாழை மரம் சாயக்கண்டேன்
வண்ணமலர் வாடக்கண்டேன்
தோட்டமது அழியக் கண்டேன்
தோரணங்கள் வீசக்கண்டேன்
மாடுகளும் கன்றுகளும்
மயங்கிநின்று கதறக்கண்டேன்
சொப்பனங்கள் கண்டதினால்
போருக்கு நீர் போகவேண்டாம்.

## வசனம்

அத்தான் நான் கண்ட தீமையான கனவுகளால் உங்களுக்கும் நமது மன்னருக்கும் ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். ஆகையால் இப்பொழுது அவசரப்பட்டு நீங்கள் போருக்குப் போக வேண்டாம் என்று வெள்ளையம்மாள் கண்ணீர் சிந்திக் கூறினாள்.

## 18. பாட்டு

வெள்ளையத்தேவன் போர் புரிந்து
வெஞ்சமரில் வீரமரணம் தானடைந்தான்
ஆங்கிலேயச் சிப்பாயிடம்
ஆண்மைச் சிங்கம் கட்டபொம்மன்
சிக்காமலே தப்பிச் சென்றார்
சிந்தை நொந்தார் வெள்ளையர்கள்
சிறைபிடித்த தானாவதிப்பிள்ளை தன்னை
சீமைத்துரையாம் பானர்மேனும் தூக்கிலிட்டான்.

## வசனம்

தப்பிச் சென்ற கட்டபொம்மன் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருக்களம்பூர் என்ற ஊரில் சென்று தங்கினார். இதை அறிந்த பானர்மேன் உடனே படைகளுடன் புதுக்கோட்டை வந்து கோட்டையைச் சுற்றிலும் முற்றுகையிட்டு கையில் ஆயுதம் ஏதும் இல்லாமல் உறங்கிக்கொண்டிருந்த கட்டபொம்மனை கைது செய்தான்.

கட்டபொம்மனைச் சிறைப்படுத்திவிட்ட செய்தியை பானர்மேன் சென்னையில் இருந்த கவர்னர் இராபர்ட் கிளைவுக்குத் தெரிவித்தான். அவர் கட்டபொம்மனுக்கு மரண தண்டனை விதிக்கும்படி கட்டளையிட்டார்.

மரண தண்டனை நிறைவேற்றினால் மக்கள் கொதிப்படைந்து கலகம் செய்யாமல் இருக்க பானர்மேன் கடுமையான சட்டங்கள் விதித்தான். எப்படியென்றால்?

## 19. பாட்டு

ஆயுதம் தாங்கும் உரிமைகள் இனிமேல்
யாருக்கும் கிடையாது
ஆங்கிலக் கம்பெனி ஆட்சியை எதிர்த்து
பேசவும் கூடாது

பாளையக்காரரின் கோட்டைகளெல்லாம்
உடனே இடித்து விட்டு
பாதுகாவலாய் கம்பெனிப் படைகள்
மக்களைக் காத்திடுவார்.

### வசனம்

இவ்வாறு சட்டங்களை விதித்து மக்களைக் கட்டுபடுத்திக் கொண்டு கயத்தார் என்ற ஊருக்கு பாளையக்கார மன்னர்களை எல்லாம் வரவழைத்து கட்டபொம்மனைக் குற்றவாளியாக்கி விசாரணை செய்தான்.

அப்போது ஆங்கிலக் கம்பெனிக்கு ஆதரவாகப் பல பாளையக்காரர்கள் சாட்சி சொன்னார்கள். ஆனால் கட்டபொம்மனை ஆதரித்து ஒருவரும் சாட்சி சொல்லவில்லை, விசாரணையை எதிர்த்து கட்டபொம்மனே பேசினான்.

### 20. பாட்டு

எங்கிருந்தோ வந்தவர்கள்
வரிகேட்டு வாய் பிளந்தார்
எங்களது தாய்நாட்டை
அபகரிக்கப் படையெடுத்தார்
பொங்கியெழும் கோபத்தினால்
புல்லர்களைச் சுட்டெரிக்க
எதிர்த்து நின்றேன் அதுவா குற்றம்?
எல்லாம் துரோகம் இதுவா நீதி?

### வசனம்

எனது சொந்த நாட்டில் வாழும் நான் எங்கிருந்தோ வந்த வெள்ளையருக்குக் கப்பம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. தாய்த்திரு நாட்டை கைப்பற்றிக் கொள்ள நினைத்த கயவரை நான் கடுமையாக எதிர்த்துப் போராடினேன். அது குற்றமா?

அதைக் குற்றம் என்று கருதினால் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நேர்மையற்ற முறையில் விசாரணை செய்யும் நீங்கள் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்து கொள்ளுங்கள் என்று கட்டபொம்மன் கோபமாகப் பேசி முடித்தான்.

பானர்மேன் தூக்குத்தண்டனை விதித்து தீர்மானித்தான். அதைக்கேட்ட மக்கள் கண்ணீர் விட்டுப் புலம்பினார்கள்.

## 21. பாட்டு

நீதியற்ற தீர்ப்பதனை
கேட்டிருந்த மக்களெல்லாம்
கண்கலங்கி தனாழுதார்
கதறியங்கே துடி துடித்தார்
பாவியர்கள் செய்துவிட்ட
பண்புகெட்ட செய்கையதை
சகித்துக்கொள்ள முடியாமலே
என் தெய்வமே
என் சுவாமியே
அங்கே சப்தமிட்டு தானழுதார்

### வசனம்

இவ்வாறு மக்களெல்லாம் கண்ணீர் சிந்திப் புலம்பினார்கள். வீரபாண்டிய கட்டபொம்மன் எதைப்பற்றியும் கவலைப்படாமல் சாவைக் கண்டு பயப்படாமல் யாருக்கும் தலை வணங்காமல் வீர சிங்கமாக நடந்து தூக்குமேடை நோக்கி வந்தார். அங்கே...

## 22. பாட்டு

பாஞ்சாலத்தின் வீரசிங்கம்
பாங்குடனே நடந்து வந்தார்
தண்டனையை ஏற்பதற்கு
தயங்கவில்லை மயங்கவில்லை
கண்டவர்கள் கதிகலங்கும்
கண்விழியில் கனல் பறக்க
மண்டியிட்ட அடிமைகளாய் மாறிவிட்ட துரோகிகளை
மனம் கொதித்து சபித்துவிட்டு - அந்த
மன்னவர் புன்னகைத்தார்.

### வசனம்

அங்கே சுற்றி இருந்த துரோகிகளையும் மானம் இழந்த பாளையக்காரர்களையும் பார்த்து மனம் கொதித்து சாபம் இட்டுப் புன்னகை செய்தார். இறுதியாகத் தூக்குமேடை ஏறி கம்பீரமாக நின்ற கட்டபொம்மன்.

## 23. பாட்டு

புளிய மரக் கிளையதிலே
போட்டிருந்த கயிறதனை
மற்றவர்கள் யாரும் வந்து
மாட்டிவிட வேண்டாமென்று
சுற்றி நின்ற கூட்டமதில்
சொந்தமுள்ள தம்பிதன்னை
தேடிநின்று பார்த்துவிட்டு
தெளிவடைந்து உறுதி கொண்டு
கயிறதனை கழுத்திலிட்டு
கட்டபொம்மன் உயிர் துறந்தார்.

## வசனம்

எல்லையற்ற ஆற்றல் மிகுந்த வீரனாய் இருந்து இறுதிவரை வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மன் 1799-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16ஆம் நாள் தன்னுடைய இன்னுயிரை நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்தார்.

அவருடைய வீரமும் புகழும் என்றென்றும் நம் நாட்டு மக்களால் போற்றி வணங்கப்படும் என்று சொல்லி கதையை முடிக்கின்றோம். வணக்கம்.

## வாழ்த்து

வாழிய பல்லாண்டு காலம் வாழி! வாழி!
வண்ணத்தமிழ் கலைகளெல்லாம் வாழி! வாழி!

கட்டபொம்மன் வீரப்புகழ்
எந்நாளும் வாழிய வாழி
நாட்டுக்குழைத்த நல்லவர்கள்
நலமுடனே வாழிய வாழி
கதைகேட்ட எல்லோரும்
கன்னித்தமிழ்போல் வாழிய வாழி
மழையும் பெய்து மாநிலம் தழைத்து
மங்களத்தோடு வாழிய வாழி

வாழிய வாழிய வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழிய வாழியவே!!!

## இணைப்பு: IV

# சங்கரதாஸ் சுவாமிகள் நாடக வடிவத்தில் கட்டபொம்மு கதை

## முதல் பாகம்

கட்டபொம்மன்:

ஒன்பது கம்பளமாம் பதினெட்டுத் தொட்டியராம்
பதினெட்டுத் தொட்டியர் குலம் காக்கும் தாயே! சக்காதேவி
அஞ்சன் தேவி பெற்ற அடங்கா மணிப் பொருளே
கொஞ்ச வயதினில் என் குடிகாத்த குலமகளே
கொஞ்ச வயதினில் என் குடிகாத்த குலமகளே
சக்காதேவி சக்காதேவி

சித்தி விநாயகனே... உன் கிருபையே - ஐயா
சித்தி விநாயகனே உன் கிருபையே
என்னைக் காத்திட வேண்டுமையா
கல்விக்குரியவளே சரஸ்வதியே - அம்மா
கல்விக்குரியவளே சரஸ்வதியே
எந்தன் கருத்தினில் குடிகொள்ள வேண்டும் அம்மா
வெள்ளாரி தேசத்தை ஆண்ட தாயே - அம்மா
வெள்ளாரி தேசத்தை ஆண்ட தாயே
பாதுகாக்க வேண்டும் சக்காதேவி
உன் திரு பாதத்தைச் சிரசில் வைத்து - அம்மா
உன் திரு பாதமதை சிரசில் வைத்து - நான்
உலகம் பூராவும் சுற்றி வாரேன்
என்னென்ன சண்டையை சொல்வேன் தாயே - அம்மா
எங்களை ஆண்டவளே சக்காதேவி..........

எட்டுத்திசையும் பதினாறு கோடமும்
வெட்டிச் ஜெயங் கொண்டவன் கட்டபொம்மன்
- அம்மா
என்னென்ன சண்டையைச் சொல்வேன் தாயே - அம்மா
எங்களை ஆண்டவளே சக்கதேவி
தனக்கு நிகரில்லை என்று சொல்லி
தனி அரசு நானும் புரிந்து வாரேன்
எதிரிக்கொருவரும் இல்லை என்று நானும்
இருந்துமே அரசாட்சி புரிந்து வாரேன்.

தாயே! சக்காதேவி! ஆதிபராசக்தி போல இந்த அகிலம் முழுவதையும் அரவணைத்துக் காப்பவளே! நீதிக்குத் தலைவணங்கி காத்திருக்கிறேன். இந்த மண்ணை! நம்பி இருக்கிறேன் உன்னை! கை விட்டுவிடாதே என்னை! ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து

வந்திருக்கும் வெள்ளையன் எங்களை ஆட்டிப் படைக்க நினைக்கிறான்! விலை பொருள் விற்க வந்தவன் இங்கே நிலை கொள்ளத் துடிக்கிறான். நல்லவன் போல் நடிக்கிறான். அந்தக் கொள்ளைக்காரனுக்கு வால் பிடிக்கின்றான் எம்மிடத்திலே பிறந்த எட்டப்பன். அந்நியனுக்கு ஆலவட்டம் மூட்டி என்னையும் காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்டான் எட்டப்பன்...... கயவன்......

மந்திரி மகள் கல்யாணத்திற்காகப் பாளையங்கோட்டைக்கு நெல் வாங்கச் சென்றவர்கள் இன்னும் வரவில்லையே! யார் அங்கே......

**வேலையாள்:** மகாராஜா...... வணக்கம் மகாராஜா
மங்களம் உண்டாகட்டும்.
நல்லது.....

என் தம்பி ஊமைத்துரைப் பாண்டியனை
அழைத்து வாருங்கள்.

வரும் பகைவர் படை கண்டு, மார்தட்டி, களம் புகும் மக்களைப் பெற்றோர்க்கும், மனங்கொண்டு துணிவோர்க்கு விழி கொடுத்து வேலை கொடுத்த மறக்குலப் பெண்களும், உரம் கொண்டு போராட, உதிரத்தில் நீராடி அறம் காத்த செயல் வீர மறம் கொண்ட தமிழகத்திலே இன்று மாற்றானுக்கு மண்டியிட்டுத் திரியும் மடையர்களும், கடையர்களும் படையெடுப்பதென்றால் விந்தையினும் விந்தை.... என் அருமைத் தாயகமே ஆராய்ச்சி மணி கட்டி ஆண்டிருந்த என் பரம்பரையே! கப்பம் கட்ட வேண்டுமாம்! யாரைப் பார்த்துச் சொல்கின்றாய்! மங்காத மறத் தமிழனின் பண்பைப் பார்த்துச் சொல்கிறாயா? அல்லது வீரத்தோள்கள் உள்ள வீரபாண்டியனைப் பார்த்துச் சொல்கிறாயா...? விவேகமற்றவனே! மன்னிப்பு என்னும் வார்த்தை உனக்கும் அல்லது உனக்கு உடந்தையாக இருக்கும் எட்டப்பனுக்கும் சொந்தமானதாக இருக்கலாம். ஆனால் அது எங்களுக்கு மாபெரும் இழுக்கு என்பதைத் தெரிந்து கொள்!

எச்சில் எலும்புக்குப் பச்சைக் கொடி காட்டி வரவேற்கும் பாளையக்காரப் பச்சோந்தி எட்டப்பன் எங்களை அழைப்பதற்கு எக்குப் போட்டுத் திரிகிறான் மக்குப் பயல்......

**வேலையாள்:** மன்னிக்க வேண்டும் மகாராஜா— மூன்று பேரிடம் நெல் கேட்டோம். நெல் என்று கேட்டலே பல்லை உடைத்துவிடுவேன் என்கிறான் வேலாண்டி. அவனுக்குப் பக்கபலமாய் இருக்கிறான் பாண்டியத் தேவன்.... கருப்பண்ணத் தேவன். இவர்கள் கேலி

செய்தார்கள். அதனால் வாய்ச்சொல் முற்றி சண்டையில் முடிந்து கொலை செய்யும் அளவுக்கு வந்துவிட்டது. கொலை செய்துவிட்டு நெல்லை எடுத்து வந்துவிட்டோம். இதுதான் நடந்த விவரம்.

**ஊமத்துரை:** ...அப்படியா! மந்திரியாரே! என் அண்ணாவுக்கு இந்த விசயம் தெரியுமா? அப்படியானால் அவரை எதிர்பார்த்து பிறவற்றை பேசிப்போம்.

## பாட்டு – 1

**ஊமத்துரை:** எப்போ வருவீர் வருவீர் என்று
எதிர்பார்த்து நிற்கிறேன் கட்டபொம்மன்
பாதம் பணிந்தேனே - உங்கள்
பாதம் அழகு பாதம் பணிந்தேனே - என்பிறவி
பாதார விந்தம் அதைப் போற்றிடுவேன் - அண்ணா
பாதார விந்தம் அதைப் போற்றிடுவேன்

**கட்டபொம்மன்:** மங்களமாக வாழ்வாயடா செந்தில் வடிவே - என் பிறவியே
செந்தில் வடிவேலன் கிருபையாலே!
அழகு உங்கள் அழகு நல்ல பாதம் அதை
அடிபணிந்தேன் நான் ஊமைத்துரை

**கட்டபொம்மன்:** தம்பி ஊமைத்துரை! பாளையங்கோட்டைக்கு நெல் வாங்கச் சென்றவர்கள் என்ன ஆயிற்று?

**ஊமத்துரை:** அண்ணா வட்டிக்காக சென்றவர்கள் அங்கு கொள்ளையும் அடித்து, கொலையும் செய்து வந்து விட்டார்கள் அண்ணா.

**கட்டபொம்மன்:** என்ன? கொள்ளை! கொலையா!

ஊமைத்துரைப் பாண்டியா! பக்கத்திலிருப்பவர்கள் பள்ளம் தோண்டி விட்டார்கள். அந்தப் பள்ளத்திலே விழுவதற்கு கம்பளத்தாரிகளும் பாதை வகுத்துவிட்டார்கள். நம்மைத் தாக்க வேண்டுமென்று எதிர்பார்த்திருந்த வெள்ளையர்களுக்கு இதுவே ஒரு காரணமாய் அமைந்து விட்டது. இருந்தாலும் பரவாயில்லை. தானாபதிப் பிள்ளையை அழைத்து மற்ற விவரங்களை அறிவோமாக.

**ஊமத்துரை:** அண்ணா நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். அண்ணா அந்த குள்ளநரிக் கும்பலை குழி

தோண்டிப் புதைத்து விடுகிறேன். உத்தரவிடுங்கள் அண்ணா! அந்த வெளி வேஷக்காரனை என் வேலுக்கு இரையாக்குகிறேன் அண்ணா! வேலுக்கு இரையாக்குகிறேன்.

தம்பி! அவசரப்படவேண்டாம். பொறுமையாக இரு. தானாபதிப் பிள்ளையை அழைத்து மற்ற விவரங்களைச் சிந்திப்போம்!

**ஊமத்துரை:** அப்படியே ஆகட்டும் அண்ணா........

**தானாபதி:** பாதம் பணிந்தேனே எந்தன் மன்னா!
பாதர விந்தம் அதை நான் மறவேன்.

**கட்டபொம்மன்:** சேமமாய் வாழ்வாய் அய்யா மந்திரியே!
அய்யா சேமமாய் வாழ்வாய் அய்யா மந்திரியே!
செந்தில்வேலன் கிருபையாலே.

**தானாபதி:** எந்தக் கவலையே வேண்டாமே பாண்டியரே.
காத்திடுவாள் நம்ம சக்காதேவி
கவலைலேயே வேண்டாமே பாண்டியரே
காத்திடுவாள் நம்ம சக்காதேவி

**கட்டபொம்மன்:** ஐயா ஏட்டுக் கணக்கெல்லாம் பார்ப்பவரே
ஏட்டுக் கணக்குப் பார்ப்பவரே
என் கணக்குத் தந்திரமும் சொல்பவரே - ஐயா
என் கணக்குத் தந்திரமும் சொல்பவரே.

தானாபதி: மகாராஜா எதற்காகவும் கவலைப்பட வேண்டாம் நம்முடைய சக்கம்மாள் துணையிருப்பதால் எந்தத் தொந்தரவும் வராது.

**கட்டபொம்மன்:** அப்படியே! மந்திரியாரே! உன்னுடைய மகள் காதணி விழா எங்கே நடக்க வேண்டும்?

**மந்திரி:** என்னுடைய மகள் காதணி விழாவை திருச்செந்தூர் முருகனிடத்தில் நான் நடத்த வேண்டும் மன்னா!

**கட்டபொம்மன்:** அப்படியானால் அங்கே யார் யாரெல்லாம் வரவேண்டும்?

**மந்திரி:** ஆயிரம் கம்பளம், நூறு பரிவாளம், அறுபத்தி நான்கு போர்ப்படை வீரர்கள், பட்டத்தரசி வெள்ளையம்மாள், இளையமகாராஜா எல்லோரும் வரவேண்டும் மன்னா!

**ஊமத்துரை:** நிறுத்துங்கள்! அண்ணா! இதில் ஏதோ சதி இருக்கிறது. ஆயிரம் கம்பளம், நூறு பரிவாளம், அத்தோடு நாங்களும் வரவேண்டுமாம். அண்ணா! போன இடத்தில் தங்களுக்கு ஆபத்து என்றால் என்ன செய்வது?

**மந்திரி:** அப்படி எதுவும் ஆபத்து ஏற்படாது மன்னா! அப்படி ஏற்பட்டால் திருச்செந்தூருக்கும், பாஞ்சாலங்குறிச்சிக்கும் இடையில் ஆபத்து நகரம் கட்டியிருக்கிறோம் அல்லவா! அதில் ஓசை அழைத்தால் உடனே உங்களைக் காப்பாற்ற வருகிறோம்.

**ஊமத்துரை:** அப்படியே மந்திரியாரே! நீங்கள் முன்னதாக செல்லுங்கள். நான் அண்ணனிடம் விடை பெற்று இதோ வருகிறேன்.

## இங்கிலீஷ்காரன் பாட்டு

இங்கிலாந்து நாடு தந்த எங்கள் மேரி ராணியாம்
இந்த நாட்டிலே எனக்கும் யாரும் நிகர் இல்லையாம்
லெப்ட் ரைட் லெப்ட் ரைட் லெப்ட் ரைட்

அண்டமெல்லாம் கிடுகிடுங்க தண்டரம் தொடுப்பணம்
அநியாயம் செய்பவரைச் சிறையினில் அடைப்பானாம்
லெப்ட் ரைட் லெப்ட் ரைட் லெப்ட் ரைட்

கட்டிடாத கப்பம் கட்டி கட்டுசல் புகுத்தவே
காரணத்தோடு விரைந்து புகுந்தேன் நானும் இந்த நாட்டிலே
சென்னில் ஆட்சி தானே வந்து செய்யும் ஆட்சி முறையிலே
சட்டை செய்யும் வீரகட்ட பொம்மனை ஒடுக்கவே........

லேடீஸ் & ஜென்டில்மேன் மை நேட்டிவ் பிளேஸ் இஸ்
இங்லேண்ட் மை நேம் இஸ் லார்டு ஐ வாஸ்
லெப்ட் ரைட் லெப்ட் ரைட் லெப்ட் ரைட்
மைகாட்!

**துரை:** நம் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான கருசக்கோட்டான் 136 பட்டிகளிலும் கொள்ளை. அங்கே காவலுள்ள வேங்கைக்குச் சமமான 6 வேலாண்டித்தேவன், பாண்டித்தேவன், கருப்பண்ண குடும்பன் போன்ற மூவரும் கொலை, ஆயிரம் கம்பளம் 100 பரிவாளம், 64 படைத் தலைவர்கள் கொண்ட கட்டபொம்மனின் ஆட்கள் நமது

கிழக்கிந்தியக் கம்பெனியைக் கொள்ளையடித்து விட்டார்கள். இன்று எங்கு பார்த்தாலும் நமது கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் நாளுக்கு நாள் வெற்றியடைந்து கொண்டு வந்திருக்கிறது. இந்த நேரத்தில் பார்த்து நம்மையே எதிர்க்கத் துணிந்து விட்டான் இடியட் கட்டபொம்மன் & பிரதர் ஊமைத்துரை.

இதுதான் சரியான சமயம். இன்றே பாஞ்சாலங் குறிச்சியின் மேல் போர்தொடுக்க வேண்டும். பழிக்குப் பழி. இரத்தத்துக்கு இரத்தம். அந்த மண் கோட்டையை நினைத்து மனக்கோட்டை கட்டும் கட்டபொம்மனை இன்றே அழிக்க வேண்டும். நமது படை இன்று தாயாராகட்டும்.

இன்றே போர்க்கோலம் பூண்டு விட்டான் இந்தக் கான்துரை. புன்னகை பூத்துக் குலுங்கும் இந்தப் பாஞ்சாலங்குறிச்சியைச் சற்று நேரத்திற்குள் புழுதிக்காடாக மாற்ற வேண்டும். அதற்குள்ளாக நண்பர் எட்டப்பனைச் சந்திக்க வேண்டும். சரியான திட்டத்தோடு செயல்படவேண்டும்.

சோசர்! இப்போது நண்பர் எட்டப்பரைச் சந்திக்க ஏற்பாடு செய்.

**எட்டப்பன்:** வணக்கம் துரை அவர்களே!

**துரை:** நம் எட்டப்பர் அவர்களே வருக.

**எட்டப்பன்:** சரியான நேரத்தில்தான நான் வந்திருக்கிறேன்.

**துரை:** அப்படியா!

**எட்டப்பன்:** ஆம்! இப்போது ஊமத்துரை. ஆயிரம் கம்பளம் எல்லோரும் திவான் தானாபதிப்பிள்ளை மகளின் காதனி விழாவிற்காகத் திருச்செந்தூர் சென்றிருக் கிறார்கள். கட்டபொம்மன் மட்டும் தனிமையில் இருக்கிறான். இப்பொழுது நீங்கள் சென்றால் கட்டபொம்மனைக் கைது செய்துவிடலாம்.

**துரை:** அதாவது கட்டபொம்மனின் தம்பி ஊமத்துரை எல்லோரும் திருச்செந்தூர் சென்று விட்டார்கள். கட்டபொம்மன் கோட்டையில் தனிமை.

**எட்டப்பன்:** ஆம்............ தனிமை............

**துரை:** நண்பர் எட்டப்பர் அவர்களே! தாங்கள் மிகவும் திறமையானவர். கட்டபொம்மனின் ஆட்களால் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பெருத்த தொந்தரவு ஏற்பட்டு விட்டது. இப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியின் சட்டப்படி பாஞ்சாலங்குறிச்சியின் மேல் போர் தொடுத்திருக்கின்றோம். இந்த நேரத்தில் தங்களின் உதவியைக் கொண்டுதான் கட்டபொம்மனுக்குப் பாடம் புகட்ட நினைத்தோம். தாங்களும் சரியான யோசனை சொன்னீர்கள். இன்றே நான் பாஞ்சாலங்குறிச்சியின் மேல் போர் தொடுக்கிறேன். இன்றே போர்க்கொடி நாட்டுங்கள். பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டை கொத்தளங்கள் அத்தனையும் தரைமட்டமாகட்டும்! போர்! போர்! போர்!!!!

**வெள்ளையத்:** வீறு கொண்டு ஏறு நடைபோடும் ஏற்றமிகும் எம்மவர் வீரம் இடறுப்பட்டுப் போகாது. துரத்தி வந்த புலியை முறத்தால் அடித்து வீழ்த்திய என் வீரத் தாய்குலமே! நெஞ்சு நிமித்தி நெடுவாள் ஏந்தி கொடும்பகை கண்டு கடும் பணியாற்றி கொக்கரிக்கும் என் கொள்கைச் சிங்கங்களே!

....மாற்றான் காலடியில் மண்டியிடுவதா? தண்டிக்க வந்தவனைத் தண்டமிட்டு வணங்குவதா? குணத்திலும் குடியிலும் வேறுபட்ட கும்பெனியர் கூட்டத்திற்கு நாம் கும்பிடு போடுவதா? வெள்ளையனை வெட்டிச் சாய்க்கும் வேளை வந்துவிட்டது இந்த வெள்ளையத்தேவனுக்கு. யாரங்கே.....

**கம்பளத்:** பாண்டியா!

**வெள்ளையத்:** ... பொட்டடிப்பட்டு எட்டடி பாயும் புலி நிகர் துடிப்புள்ள என் வீரக் கம்பளத்தார்களே! நாம் உண்டாகட்டும். தென்னவன் எமக்கு முன்னவன் வீரம் சொன்னவன் இந்நாட்டின் கண்ணவன் எம் மன்னவன் கட்டபொம்மனின் பாசத்திற்குரிய இந்த வெள்ளையத்தேவன் இருக்கும்போது வேற்றவர் நம்மை அடக்கி ஆள்வதா?

........கைக்கூலி பெற்றுக் கொண்டு காட்டி கொடுத்துவிட்டான் அந்த எட்டப்பன். நெஞ்சில் உரமுண்டு. பார்த்து விடுவோம் அவர்களின்

திறமையை. சாதிக்கம்மான் குண்டு முத்து நீராவியில் சேவல் போலல்லவா? அங்கே நான் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து விட்டு என் அருமைக் காதலி வெள்ளையம்மாளை அழைத்து வாருங்கள்.

வெள்ளையம்மா: தேவி திருமால் மதுரை மீனாள் அம்பிகையே
ஈஸ்வரியே
உத்தமி சக்காதேவி செந்திருமால் முருகன்
தங்கையரெ
தேவி ஆயிரம் கண்ணுள்ள மாரியம்மா
கண்பார்க்க வேண்டுமே எந்தனையும்
தேவி அம்பிகையே சக்காதேவி வீரமுள்ள
மேலே மலையாளம் போன தெய்வமே
மேலான மந்திரம் கற்ற தெய்வமே
தேவி கீழக் கை எல்லையோ கீழக்கரை
தேவி மேற்கக் கை எல்லையே குளக்கரை
தேவி மலை மேல மாடு மேய்யப்
போனதென்ன
வங்குலையாய் நல்ல மாண்ட தேவி!

நான் பிறந்தது இராமநாடு. செம்மநாட்டு மறத்தி பெற்ற சேதுபதி மகள் வெள்ளையம்மாள். நான் ஒரு மேல் மாடத்தில் நின்று சிகை உலர்த்திக் கொண்டிருந்தேன். அப்போது பாண்டி நாட்டு மன்னர்களை வெற்றி கொண்டு வந்த ஒரு மன்னரைப் பார்த்து இவரோடு வாழ்ந்தால் வாழ்வதை விட இந்தச் சவத்தைக் கட்டி சாவதே மேல் என்று அவரோடு பின் தொடர்ந்து வந்தேன். அவரோடு எனக்கு திருமணம் முடிந்து மாட மாளிகை, கோடகோபுரம் எல்லாம் எங்கள் வீட்டில் செய்ய வைத்தார்கள். வாரம் ஒரு முறை அந்த எட்டையபுரத்து முன்னிப்பட்டி கம்பளத் தாருடன் சேவல் போர் நடப்பதுண்டு.. என் கணவன் அழைப்பதாகச் செய்தி வந்துள்ளது. நான் வருகின்றேன்.

## பாட்டு

நான் பிறந்தது இராமநாடு
சுவாமி பிறந்தது வல்லநாடு - அழகு

புவி புகழும் இராமநாட்டை
பொன்னுச்சாமி மகள் வெள்ளையம்மாள்
நானும் பற்றான சேதுபதி பெற்றெடுத்த
பந்தான செல்வி நான் வெள்ளையம்மாள்
கணவன் எப்போ வருவார் வருவார் என்று
வல்லவே நான் எதிர் பார்க்கின்றேன்.

**வெள்ளையத்:** அன்னக்கிளியே..... அருங்கிளியே..... கண்மணியே....... ஆருயிர் நாயகியே..... வெள்ளையம்மாள்.

வெள்ளையம்மா: சுவாமி! அன்னம்போல ஆருயிரே! அழகு மன்னவரே! அருகினில் வாரேனே எந்தன் சுவாமி.

**வெள்ளையத்:** எனக்குத் தேடக் கிடைக்காத திரவியமே சேதுபதி மகள் வெள்ளையம்மாள்.

வெள்ளையம்மா: சுவாமி பாதம் பணிந்தேனே! ஆருயிரே வந்தனம் செய்வேன் நான் வெள்ளையம்மாள்

**வெள்ளையத்:** கண்ணே சேமமாய் வாழ்வாயடி வெள்ளையம்மாள் செந்தில் வடிவேலன் கிருபையாலே

வெள்ளையம்மா: சுவாமி! கொட்டயங் கோட்டை நல்ல மறவருக்கே கோடிய பத்தினி வெள்ளையம்மாள்

**வெள்ளையத்:** கண்ணே செம்ம நாட்டு நல்ல மறவர் குலமே! ஆருயிரே சேதுபதி மகளே வெள்ளையம்மாள்

வெள்ளையம்மா: சுவாமி சேது நாடு நல்ல பெற்றெடுத்த சீமானுக்கு வாய்த்த நல்ல வெள்ளையம்மாள்

நீங்கள் எப்போ வருவீரோ வருவீரோ என்று எதிர்பார்த்திருந்தேனே......... வெள்ளையம்மாள்.

**வெள்ளையத்:** கண்ணே! உன்னை நான் எதற்கு அழைத்தேன் தெரியுமா? இன்று என் தந்தை கட்டபொம்மனின் பிறந்த நாளை முன்னிட்டு சேவல் போர் நடக்க இருக்கிறது. அதற்கு நான் சென்று வருகிறேன். கண்ணே!.....

வெள்ளையம்மா: சுவாமி! அப்படியானால் இருவருமே சேவல் போர் முனைக்கு சென்று வருவோம் சுவாமி!.....

**வெள்ளையத்:** அங்கு நீ வரக்கூடாது. அது வீர விளையாட்டு! அப்படி உனக்கு வேண்டுமென்று விரும்பினால்

அரண்மனையில் ஒருநாள் நிகழ்த்திக் காட்டுகிறேன். அப்பொழுது நீ பார்த்துக் கொள்.

வெள்ளையம்மா: அப்படியானால்....... சுவாமி! ஆண்கள் செல்லும் இடத்துக்குப் பெண்கள் வரக்கூடாது என்கிறீர்கள்! அப்படித்தானே!

**வெள்ளையத்:** ஆமாம்!..........

வெள்ளையம்மா: அப்படியானால் நீங்களே சென்று வாருங்கள் சுவாமி!

## பாட்டு

**வெள்ளையத்:** எனக்கு வெள்ளச் சேவலை எடுத்து வாடி..... கண்ணே வெள்ளையத்தேவன் நான் செல்வதற்கு

வெள்ளையம்மா: சுவாமி! வெள்ளைச் சேவலை எடுத்து வாரேன் வீரரும் போருக்குச் சென்று வாருங்கள்.

**வெள்ளையத்:** கண்ணே வெள்ளையம்மா! நான் சீக்கிரமாகச் சென்று போரை முடித்து வருகின்றேன்.

வெள்ளையம்மா: அப்படியா சென்று வாருங்கள்.

**வெள்ளையத்:** தாயே! சக்காதேவி! என் சேவல்
தோல்வியடைந்து விட்டதம்மா!

இதயமே வெந்ததம்மா! இரத்தமிங்கே
உறைந்ததம்மா!
என் இதய தீப மலர் ஏங்கி மனம் வாடுதம்மா!
சேவல் போர் முனையில் நானே
வீரன் தோல்வி அடைந்தேனே!
வந்த கணக்குப் புரிந்து கொண்டேன்
போகும் கணக்குப் புரியவில்லை
இடையினிலே என் கணக்கு
எடுத்துச் சொல்லத் தெரியவில்லை!
இடர் வந்து சூழ்ந்ததம்மா
பூகம்பம் எழுத்ததம்மா!
இடர் வந்து சூழ்ந்ததம்மா!
இன்னல் பல நேர்ந்ததம்மா!
சேவல் போர் முனையில் நானே
வீரன் தோல்வி அடைந்தேன்
இதயமே வெடித்ததம்மா

இரத்தமிங்கே உறைந்ததம்மா!
கண்ணே! என்றைக்குமில்லா வெள்ளைச் சேவல்
இன்றைக்குத் தோல்வி அடைந்ததே!
பாவி! என்னதான் செய்வேன் என் ஆருயிரே
எனக்கு நீயதனைச் சொல்ல வேண்டும்
கண்ணே! வீரம் குறைந்ததடி
கண்ணே! வீரம் குறைந்ததடி! ஆருயிரே
இச்சேவலால் என்ன செய்வேன் ....

வெள்ளையம்மா: சுவாமி! ஒன்னுக்கும் அஞ்சவே வேண்டாம் சாமி
உத்தமி சக்காதேவி இருக்கும் போது

**வெள்ளையத்:** சேவல் போரில் நான் தோற்றதற்காக வருத்தப் படவில்லை. எதிர்காலத்தில் ஆங்கில வெள்ளை யனிடம் போராடத் துடித்துக் கொண்டிருக் கிறேன். இந்த சேவல் போரில் எனக்கு வெற்றி கிடைத்தால் அந்த ஆங்கிலேயப் போராட்டத்தில் எனக்கு வெற்றி கிடைக்குமென நம்பிக்கை கொண்டிருந்தேன். அந்த நம்பிக்கை தான் தளர்ந்து விட்டது கண்ணே!

வெள்ளயம்மா: சுவாமி! நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம் சுவாமி! இப்போது உங்களுக்கு என்ன தேவைப்டுகிறதோ அதை நான் செய்கிறேன் சுவாமி!

**வெள்ளையத்:** கண்ணே! கொஞ்சம் களைப்பார வேண்டும்.

வெள்ளையம்மா: அப்படியா! அப்படியானால் நான் இப்போது என்ன செய்ய வேண்டும்.

**வெள்ளையத்:** கண்ணே வெள்ளையம்மா! வெளியிலே ஏதோ சத்தம் கேட்கிறதே...

வெள்ளையம்மா: ஆம் சுவாமி! நன்றாக கவனிக்க வேண்டும்

## (பிரகாரம்)

**ஊமத்துரை:** வாயில் திறக்கட்டும் கொண்டு வாரேன்
கொற்றவன் தம்பி நான் ஊமைத்துரை

**வெள்ளையத்:** பாதம் பனிந்தேனே! தந்தையரே....... உங்கள்
பாதர்வெள்ளை நாடும் தரணி மீதே!
வணக்கம் தந்தையே!

**ஊமத்துரை:** மங்களம் உண்டாகட்டும் மகனே!

**வெள்ளையத்:** தந்தையே! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்.

**ஊமத்துரை:** மகனே! நம் மந்திரியார் மகள் காதணி விழாவை திருச்செந்தூரில் முடித்து விட்டு உனக்கு பிரசாதம் கொண்டு வருகிறேன்.

**வெள்ளையத்:** தந்தையே! என்னையும் உங்கள் மருமகள் வெள்ளையம்மாவையும் ஏன் அழைத்துச் செல்லவில்லை?

**ஊமத்துரை:** மகனே! வெள்ளையத்தேவா தங்கள் திருமணம் முடிந்து ஆறு மாதங்கள் தானே ஆகிறது. இல்லறத்தில் நல்லறத்தை காணவேண்டாமா நீங்கள்?... அதனால்தான் உங்களை அழைத்துச் செல்லவில்லை. இது அண்ணாவின் கட்டளையும் கூட.....

**வெள்ளையத்:** என்ன? என் தந்தையின் கட்டளையா?......

**ஊமத்துரை:** ஆமாம்! சரி, நான் வருகிறேன் மகனே!

**வெள்ளையத்:** தந்தையே! இன்று தங்கிவிட்டு நாளை செல்லலாமே.......

**ஊமத்துரை:** மகனே! நான் திருச்செந்தூரில் இருக்கும் போது ஆபத்து நகரம் விளங்கியது. அதனால் நான் துரிதமாகச் செல்லவேண்டும் பாஞ்சாலங் குறிச்சிக்கு.

**வெள்ளையத்:** என்ன! ஆபத்து நகரம் விளங்கியதா?

**ஊமத்துரை:** ஆம் மகனே! அன்று பாளையங்கோட்டையில் நடந்த படுகொலையைக் காரணமாக வைத்து அந்த பரங்கியர்கள் ஆபத்து உண்டாக்க எண்ணி யிருப்பார்கள். அதனால் தான் ஆபத்து நகரம் விளங்கியது.

**வெள்ளையத்:** தந்தையே! அப்படியானால் நான் சென்று துரிதமாக சென்று செய்தி தெரிந்து வருகின்றேன். தாங்கள் களைப்பாறுங்கள் தந்தையே! களைப் பாருங்கள் தந்தையே.

**ஊமத்துரை:** வேண்டாம் மகனே! போகும் வழியில் ஏதேனும் சண்டை ஏற்பட்டால் அதனை நான் சமாளித்துக் கொள்கிறேன்.

**வெள்ளையத்:** தந்தையே! செருக்குடன் செல்ல என் சிந்தை விரும்புகிற போதெல்லாம் தாங்கள் தடுத்து விடுகிறீர்கள்! தீட்டிய வாளுக்கும் திணவெடுத்த தோளுக்கும் வேளை கொடுப்பது எப்போது? இமிழ்கடல் ஆண்ட தமிழன் வீரத்தை இழித்து கூறினான் இமயவரம்பன் என்றவுடன் பாய்ந்துமே ஓடி, பாரெல்லாம் தேடி; பகைவரைச் சாடி! இமயம் மிதித்து இருகால் பதித்து..........

**ஊமத்துரை:** செய்யும் நேரம் இருக்கிறது. தாய் சக்காதேவியின் ஆணையாகச் சொல்கிறேன். தருணம் வரும்போது தயாராக இரு.

**வெள்ளையத்:** ஆகட்டும் தந்தையே!

**ஊமத்துரை:** மகனே! வெள்ளையத்தேவா..... நான் உடனடியாகப் பாஞ்சாலங்குறிச்சிக்குச் செல்ல வேண்டும்.

**வெள்ளையத்:** ஆகட்டும் தந்தையே!
என்றைக்குமில்லாத நித்திரையே - கண்ணே
இன்றைக்கு வருகுதடி ஆருயிரே - பாவி

வெள்ளையம்மா: பட்டப்பகலிலே சாமி ஆருயிரே
அழகு மன்னவரே - பாவி
பட்டப்பகலிலே நித்திரை தான்
பார்த்ததே இல்லையே என்ன செய்வேன்

**வெள்ளையத்:** எனக்கு பஞ்சனை மெத்தையை
விரிப்பாயடி பாதர் வெள்ளை நித்திரை
செய்வதற்கே

வெள்ளையம்மா: பஞ்சனை மெத்தையை விரித்து வைப்பேன்
பாங்கான நித்திரை செய்திடுவீர்

**வெள்ளையத்:** எனக்கு பதினெட்டு விதமான ஆயுதமும்
கண்ணே பக்கத்தில் வைப்பாயடி
கண்மணியே!

வெள்ளையம்மா: சாமி பதினெட்டு விதமான ஆயுதம் கொண்டு வந்து பக்கத்தில் நானுமே வைத்திடுவேன்.

**வெள்ளையத்:** லட்சனை பொறித்து மீண்டவன் என் பாட்டன், என் பாட்டன் ஊட்டி வளர்த்த வீரம் விலை போகவில்லை தந்தையே! வீரம் விலை போக வில்லை. அந்தப் பரங்கியர் தலையைப் பந்தாடி

வருவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் தந்தையே எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்.

**ஊமத்துரை:** மகனே! பொட்டிட்டு மையிட்டு புத்தாடை தானிட்டு கரும்பே என கட்டியணைத்து தொட்டிலில் இட்டு தாலாட்டி தாய்க்கு நிகரான இந்தத் தரணிக்கு சொந்தக்காரன் நானிருக்க! எங்கிருந்தோ வந்தவன் சொந்தம் கொண்டாடு கின்றான் மகனே! உழைக்கத் திறனின்றி பிழைக்க வழியின்றி வந்தான் நம்மை வேண்டி, அலைகடல் தாண்டி, வந்தவனுக்கு வாழ்வு கொடுத்தால் அவன் காலூன்றி விட்டான். தட்டிக்கேட்க ஆளில்லை என்று கொட்ட மடிக்கும் கும்பெனியாரின் மட்டித் தனத்தை வெட்டிச் சாய்க்க வேலை வரும்! பொறு மகனே!

**வெள்ளையத்:** ஆஹா...... பொறுமை! வேங்கையென வீறு கொள்ளும் மிணற்றிடம் வெள்ளாடு வாலாட்டு கிறது தந்தையே! வாலாட்டுகிறது! பூக்காடாய் இருந்த புனித பூமியை புழுதிச் சாக்கடையாய் மாற்ற நினைக்கும் நீசர் கூட்டம், தாமதித்தால் தலை குணிவு நமக்குத்தான் தந்தையே! நமக்குத் தான்!

**ஊமத்துரை:** மகனே! வெள்ளையத்தேவா! உன் ஆவேசம் எனக்குப் புரிகிறது. உன் பராக்கிரமத்தைப் பாரறியச் செய்யலாம்.

**வெள்ளையத்:** தாலாட்டு சொல்வாயடி கண்மணியே எனக்குத்<br>
தாலாட்டு சொல்வாயடி கண்மணியே ஆருயிரே<br>
இராஜிக நித்திரை செய்வதற்கு

வெள்ளையம்மா: தாலாட்டு தோராட்டு சொல்லி வாரேன்<br>
தங்கமே நித்திரை செய்வதற்கு!

**வெள்ளையத்:** கண்ணே! வெள்ளையம்மாள் நான் நித்திரை செய்யும் போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நித்திரை தூங்கச் சென்றுவிட்டால் சித்திரவதை செய்வேன். ஞாபகமிருக்கட்டும்.

வெள்ளையம்மா: சுவாமி! அப்படியே நித்திரை செய்து வாருங்கள் சுவாமி!

*************

1. கம்பளத்தார்களே! புறப்படுங்கள் சீக்கிரம்

2. இதோ பெருங்கூட்டம் வந்து கொண்டிருக்கிறதே! இது நிச்சயமாகக் கட்டபொம்மன் ஆட்களாகத் தான் இருக்க வேண்டும்! யாரென்று பார்க்கலாம்.

1. ஏ...... நில்லுங்கடா! யார் நீங்கள்?

2. காரைக்குடி ஜெபகோட்டை செட்டியாருடைய கணக்குப்பிள்ளை. திருச்செந்தூர் சாமி தரிசனம் போய் வருகிறோம்.

1. தண்டயலில் ஏறிவரும் தானாபதிப் பிள்ளை என்று எழுதியிருக்கிறதே! டேய்! இது கட்டபொம்மனுக்குச் சொந்தமான முத்திரை! உண்மையைச் சொல்லுங்கள்! யார் நீங்கள்?

2. பரவாயில்லை! தானாபதிப் பிள்ளைதான்

1 ஓ...... சீமான் தானாபதிப் பிள்ளையா?

3. விசேஷமா? தானாபதிப்பிள்ளை எங்களைப் பார்த்தால் புரியவில்லை.

3. புரியவில்லை! நான்தான் ஆங்கிலேயன். அதாவது பெரிய மெக்கான் துரை.

1. அப்படியா? இப்போது எதற்காக வந்தீர்கள்?

3. இப்போது தங்களைக் கைது செய்யப் போகிறேன்!

1. ஏன்?

3. ஏனா? தங்களுக்குப் புரியவில்லை?

1. இல்லை!

3. அதாவது எங்களது கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான 136 பட்டிகளிலும் காவலாளிகள் மூவரும் கொலை! நீ ஒரு குற்றவாளி! கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் யூ ஆர் அரஸ்ட் மேன்.

1. இதோ வருகிறான் ஊமத்துரை....

ஊமத்துரை: யார் நீ! எங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்? எனது கம்பள வீரர்களை வழிமறித்து நிப்பாட்ட அவ்வளவு ஊக்கமா? உனக்கு! யார் நீ?

துரை: ஓ! நீர் தான் ஊமத் துரைப் பாண்டியனோ?

**ஊமத்துரை:** ஆம்!

**துரை:** தாங்கள் நல்ல வீரர்கள்! உங்களைப் போன்ற நல்ல வீரர்கள் நாட்டில் வாழ வேண்டுமென்ற ஆசைப்படுபவர்கள் ஆங்கிலேயர்கள்! சுருக்கமாகச் சொல்கிறேன்! கேள்! இன்றே எனக்குச் சேர வேண்டிய வரிப்பணத்தைக் கொடுத்து விட்டால் இன்றே நாம் நண்பர்களாகி விடலாம். என்ன சொல்கின்றாய்?

**ஊமத்துரை:** மடையனே! உன்னிடத்தில் வரிப்பணம் கொடுப்பதா? முடியாது. அது நடக்கவே நடக்காது!

**துரை:** மிஸ்டர் ஊமத்துரை எங்களை எதிர்த்தவர்கள் யாரும் வாழ்ந்ததும் கிடையாது? இனி வாழவும் கூடாது!

**ஊமத்துரை:** அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்.

**துரை:** எங்களிடத்தில் பயங்கரமான பீரங்கிகள் ஏராளம்

**ஊமத்துரை:** இருக்கட்டுமே!

**துரை:** வீரம் காட்டுகிறாய்! முடிவில் வீழ்ச்சிதான் ஏற்படும். வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு என்பதை மறந்துவிட வேண்டாம். முடிவாகச் சொல்கிறேன்! தாங்கள் செய்த குற்றத்துக்கு மன்னிப்பாவது கேட்க வேண்டும்.

**ஊமத்துரை:** மடையனே! மன்னிப்பா!........ யாரைப் பார்த்துச் சொல்கிறாய்! 6000 மைல்களுக்கு அப்பாலிருந்து எங்கள் நாட்டிற்கு பிழைக்க வந்த வெள்ளைக்கார நாயே! உனக்கு நான் வரி, வட்டி, கிஸ்தி, கப்பம் கட்ட வேண்டுமா...... நடக்காது.

**துரை:** மிஸ்டர் ஊமத்துரை! வாழ்க்கையில் நாய்க்குக் கூட சட்டப்படி குற்றம் காட்ட மாட்டோம். அப்படியே குற்றம் செய்தாலும் அதன் மீது கருணை காட்ட வேண்டுமென்பது என் அன்புக்கட்டளை. இனிமேல் என் வாய் பேசாது! என் வாள்தான் பேசும்!.........

**ஊமத்துரை:** அதைத்தான் நானும் எதிர்ப்பார்க்கிறேன்!

**துரை:** வெரிகுட்..... மிஸ்டர் ஊமத்துரை! உன் கொற்றம் கொன்றாமல் இருக்க வேண்டுமாயின் உன்

மங்காப் புகழ் மண்ணோடு மண்ணாகப் போகாமல் இருக்க வேண்டுமாயின், என்னுடைய வாளுக்கு பதில் சொல்லடா மடையனே! இனி என் வாய் பேசாது. வாள் தான் பேசும்...... பிளடி ராஸ்கேல்........

ஊமத்துரை: யாரென்று நினைத்தாய்! அக்னிப் பொறிகள் பறக்க அளவிய பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தாலும் அந்தப் பீரங்கிக் குண்டுகளின் புகைகளின் மறைவில் இருந்து பேசக்கூடியவன் இனி என் வாய்ப்பேசாது. வாள்தான் பேசும். ஜாக்கிரதை.............

**(இசை)**

துரை: பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைச் சுற்றி எமது பரங்கியர்கள் படை எடுத்திருக்கிறோம். அங்கே சண்டைக் கொடி நாட்டியிருக்கிறோம். வருகின்ற வெள்ளிக்கிழமை போர். ஆங்கிலேயனுக்கும் தமிழனுக்கும் நடக்கப் போகும் உரிமைப்போர். அங்கே சந்திக்கின்றேன் உங்களை... வருகின்றேன்..... குட் பை.......

ஊமத்துரை: பன்னிரெண்டு தேசம் பிடித்து, பன்னிரெண்டு தங்க மெடல்ஸ் பரிசு பெற்று பதிமூன்றாவது பாஞ்சாலங்குறிச்சியை பிடிக்கப் புறப்பட்டிருக்கும் எமகாலன் தங்களுக்கு வருகிறவன் யார்?

வேலையாள்: வெள்ளையத்தேவன்.

ஊமத்துரை: பாஞ்சாலங்குறிச்சியின் படைத்தலைவன் வெள்ளையத்தேவனா?

**(இசை)**

வெள்ளையம்மா: சுவாமி...... சுவாமி.......

வெள்ளையத்: கண்ணே! எதற்காக எழுப்பினாய்?

வெள்ளையம்மா: சுவாமி மன்னிக்க வேண்டும்! நித்திரைத் தடங்கல் செய்ய வேண்டாமென்றுதான் சொன்னீர்கள். இருந்திட்டாலும் பாண்டி நாட்டிலிருந்து சுந்தரலிங்கம் ஓடோடி வந்து ஒரு லிகிதத்தைக் கொடுத்திருக்கிறார் சுவாமி!.........

**வெள்ளையத்:** என்ன விகிதமா? கண்ணே வெள்ளையம்மா! பரங்கியர் கூட்டம் படையெடுத்து வந்து விட்டதாம்...... நம்முடைய பாண்டிய நாட்டை நோக்கி! விடை கொடு! நான் போருக்குச் செல்ல, பகைவரைக் கொல்ல, தந்தையார் விகிதம் எழுதி யிருக்கிறார். கண்ணே! விகிதம் எழுதியிருக்கிறார். போருக்குச் சகிதமாக வரச்சொல்லி! இப்பொழுதே தான் புறப்படவேண்டும்! விடை கொடுத்தனுப்பு! வீணரை வெட்டி சாய்க்க! அவர்கள் மீது வேலைப் பாய்ச்ச! சஞ்சலம் கொள்ளாதே என் அஞ்சுகமே!

......அந்நியரின் கால் நம் மண்ணில் படலாமா? போருக்குப் போகும் முன்னே எனக்குக் கருமாதி காரியமெல்லாம் உன் அக்காள் நால்வரையும் கூட்டிச் செய்து வழியனுப்பு கண்ணே வழியனுப்பு!

## (பாட்டு)

**வெள்ளையத்:** கண்ணே வைகுந்த சல்லாவை எடுத்து வாடி....
வைகுண்ட சல்லாவை எடுத்து வாடி
கண்ணே வாய்க்கட்டு கால்கட்டு - கட்டுகவே

வெள்ளையம்மா: சாமி வைகுண்ட சல்லாவை எடுத்து வந்தேன் ஆருயிரே
சாமி வைகுண்ட சல்லாவை எடுத்து வந்தேன்
வாய்க்கட்டுக் கைகட்டுக் கட்டலாமா......
வாய்க்கட்டுக் கைக்கட்டுக் கட்டலாமா....

**வெள்ளையத்:** கண்ணே ஆயிரம் பேர் கூடி
கண்ணே ஆயிரம் பேர் கூடி கட்டின தாலியை
அவிழ்த்து வைப்பாயடி எந்தன் முன்னே

வெள்ளையம்மா: சாமி ஆயிரம் பேர் கூடி கட்டின தாலியை
சாமி ஆயிரம் பேர் கூடி கட்டின தாலியை - ஆருயிரே
ஆயிரம் பேர் கூடி கட்டின தாலியை
அவிழ்த்து வைக்கலாமா இப்பொழுது
அவிழ்த்து வைக்கலாமா மன்னவரே........

**வெள்ளையத்:** குத்து விளக்கு சர விளக்கு கண்ணே
குத்து விளக்கு சரவிளக்கு

கண்ணே குத்து விளக்கு சரவிளக்கு
தூண்டா மணிவிளக்கு ஏற்றி வைப்பாய்........

வெள்ளையம்மா: சாமி தூண்டா...... தூண்டா மணிவிளக்கு
ஏற்றலாமா மன்னவன் போருக்குச் செல்லும்
போது

**வெள்ளையத்:** போர் போக வாழ்ந்தேனடி....... கண்ணே!
போர் போக வாழ்ந்தேனடி........ ஆருயிரே
பேர் சொல்ல ஒரு பிள்ளையில்லை.....

வெள்ளையம்மா: சாமி காசிக்கு - மன்னவரே
நாம காசிக்குப் போயிங்கூட ஆருயிரே
பிள்ளைதான் இல்லையே என்ன செய்வோம்.....

**வெள்ளையத்:** கண்ணே வெள்ளையம்மாள் இருதாரம் இருந்தாலும் எனக்கு ஈமக்கிரியை முடிக்கப் பிள்ளை இல்லை. இருந்தாலும் பரவாயில்லை. உள்ளூர்க் குடிமகனை அழைத்து எனக்கு ஈமக்கிரியை முடிக்க வேண்டும். உமது சகோதரிகள் அனைவரையும் அழைத்து உயிரோடு ஒப்பாரிகள் சொல்ல வேண்டும். என் காது குளிரக் கேட்க வேண்டும்.

வெள்ளையம்மா: சுவாமி.... இப்படியெல்லாம் சொல்லாதீர்கள் சுவாமி! தாங்கள் உயிரோடு இருக்கும் போது எப்படி இவ்வாறெல்லாம் செய்வது! இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் தாங்கள் சொல்லி நான் எதையும் மறுக்கப் போவதில்லை. தாங்கள் இஷ்டம் போல் நான் செய்து வருகிறேன் சுவாமி!

1. வீதியிலே எஞ்சாமி போறாராம்...... போறாராம்........
போறாராம்......
ஆசை மன்னன் போறாராம் இவ்வழியா போறார்
அந்த வெள்ளி ரதம் எஞ்சாமி உஞ்ச ரதம் ஊஞ்சரதம்

2. சாலையிலே எஞ்சாமி போறாராம்! போறாராம்!
போறாராம்!
ஆசை மன்னா போறாராம்! இவ்வழியா போறார்
அந்த தங்கரதம் எஞ்சாமி ஊஞ்ச ரதம் ஊஞ்ச ரதம்

மயானக்கரை எஞ்சாமி போகுமட்டும்! போகுமட்டும்!
போகுமட்டும்!
ஆசை மன்னா போமட்டும் எம்பதியான் போகுமட்டும்!
போகுமட்டும்!
பிள்ளை இல்லை! பிள்ளை இல்லை! பிள்ளை இல்லை!

இன்னைக்கு இந்த முள்ளு கல்கோட்டை
இந்த முள்ளு கல்கோட்டை
எனக்கு வாய்ச்சிட்ட எஞ்சாமி
நம்ம இனம் பெருத்த நன்னாடு

இன்னைக்கு இந்த முள்ளு குத்துதுண்ணு
இந்த முள்ளு குத்துதுண்ணு
எனக்கு வாய்ச்சிட்ட எஞ்சாமி
நீங்க உள்ள நாளையிலே!
நான் இண்ட ஒதுக்கி வைச்சேன்.
இனத்தாரை தள்ளி வெச்சேன்!
இன்னைக்கு இந்த முள்ளுக்குத்துரதும்
இந்த சண்டாளச் சீமையிலே
சதிகாரன் பட்டணத்தில்
நீங்க இல்லாத நாளையிலே

நம்ம இனத்தாரு ஏசுறது
எனக்கு இருக்க மனம் சகிக்கலையே
இன்னைக்கு மாமரத்துப் பட்சியெல்லாம்
எனக்கு வாய்ச்சிட்ட எஞ்சாமி!

அது மைந்தன் வெச்சுக் கொஞ்சதுன்னு
நான் சண்டாளி வெள்ளையம்மாளுக்கு
எனக்கு மாவால பொம்மை செய்து
எனக்கு மைந்தனென்று தங்காங்கே!

இன்னைக்கு மாவுந்தான் பேசலையே!
மாவுந்தான் பேசலையே!
எனக்கு வாய்ச்சிட்ட எஞ்சாமி
எனக்கு மைந்தன் கலி தீரலையே!.......

(பாட்டு)

1. ஆறுண்ணா ஆறுதில்லை என்மனதே
தீருன்னா தீருதில்லை என்ன செய்வேன்
தீருன்னா தீருதில்லை என்ன செய்வேன்
சாமி நாடிழந்தேன் நான் நகரிழந்தேன் - ஆருயிரே!
நாடிழந்தேன்! நான் நகரிழந்தேன்!
நாயகரையும் தஞ்சமென்றேன்!
நான் என்னதான் செய்வேனே ஆருயிரே
ஏது நான் செய்வோனோ இப்பொழுது.......

வெள்ளையத்: ஒப்புக்கழுதவள்
ஒப்புக்கழுதவள்......... ஆறு பெண்கள் - எனக்கு

ஒப்புக்கழுதவள் ஆறு பெண்கள்
உரிமைக் கழுதவள் வெள்ளையம்மாள் - எனக்கு
உரிமைக் கழுதவள் வெள்ளையம்மாள்

*வெள்ளையம்மா:* சாமி! பூமி இழந்தேன்! பொருள் இழந்தேன்!
ஆருயிரே
பூமி இழந்து பொருள் இழந்து
புன்னியரே நான் தஞ்சமென்றேன்!

**வெள்ளையத்:** சங்குமென்று நீயும் வந்ததாலே - கண்ணே
சாத்தியமாய் நான் உன்னை ஆதரித்தேன்.
போருக்குப் போகின்ற நேரத்திலே
போக்குத் தண்ணீர் எனக்குக் கொண்டு வாடி!

*வெள்ளையம்மா:* எவ்வளவு சொன்னாலும் நீங்க கேட்கமாட்டீர்கள்!
இருந்தாலும் என் மனதில் வேதனை சுவாமி!

போகாதே! போகாதே! என் கணவா.... என் கணவா
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்!.....

**வெள்ளையத்:** கண்ட சொப்பனத்தைச் சொல்லவேண்டும் -
கண்ணே
கட்டளையே எந்தன் ஆருயிரே!......

*வெள்ளையம்மா:* சாமி சொல்ல
சாமி சொல்ல பதறுதே! ஆருயிரே!
எப்படிச் சொல்வேன் நான் இந்த வேளை!
எப்படிச் சொல்வேன் நான் இந்த வேளை!

**வெள்ளையத்:** தைரியமாகவே சொல்வாயடி! கண்ணே!
காத்திட நானும் இருக்கும் போது.........

*வெள்ளையம்மா:* சாமி குளிக்க மஞ்சளே எஞ்சலும் தானாக
ஆருயிரே!
சாமி குளிக்க மஞ்சள் எடுக்கத்தான்
கும்பக்கரி போல போகக் கண்டேன்
கும்பக்கரி போலப் போகக் கண்டேன்

நானும் இப்படி சொப்பனம் கண்டதாலே
எப்படிப் போகவே விடை கொடுப்பேன்!
எப்படிப் போகவே விடை கொடுப்பேன்!

**வெள்ளையத்:**

கண்ணே! வெள்ளையம்மா... களம் செல்லும் கடமைக்கு முன்
கனவைக் காரணம் காட்டுதல் மடமையல்லவா -
வீர நடைபோட்டு வெற்றியுடன் திரும்புங்கள் என
வீரதிலகமிட்டு வழியனுப்ப வேண்டிய வீராங்கனை நீயா?

விழி நீர் சிந்துகிறாய்! கூடாது கண்ணே. கூடாது?
வீராதி வீரன் வெள்ளையத் தேவன் என்றல்லவா என்னை
மாலையிட்டாய்! இன்று மாற்றானுக்கு வாள் பிடிக்கும்
மடையர்கள் செய்த சதியா? அன்று என் தந்தை
கட்டபொம்மனும், ஊமைத்துரையும் சிறைபிடிக்கப்பட்ட
செய்தி அறிந்து சீறிப் பாய்ந்து சிறு நரிகளை

சின்னாபின்னப்படுத்திச் சிறை மீட்டு வந்தேன் என்
தந்தையர்களை
அதற்காக என்னை மாலையிட்டு மணாளனாக
ஏற்றுக்கொண்ட நீயா இப்படிப் பேசுவது. மாவீரன்
இந்த வெள்ளையத் தேவன் எனக்கு மாலையிட்டாய்!
மறவர்குல

மாதரசியே இன்று ஏன் உன் மனம் பேதலிக்கிறது!
கூடாது கண்ணே! கூடாது! ஆயிரம் மயில்களுக்கு அப்பால்
இருந்து வந்தவன் இன்று அதிகாரம் செலுத்துவதா?
கூடாது கண்ணே! கூடாது கண்ணே!

வந்தவரை அடக்கி! வாள்கொண்டு மடக்கி! ஆறாக
இரத்த மழை அலைமோதிஓட! அங்கங்கள் ஒவ்வொன்றும்
அடிபட்டே வாட! சாறாகச் சடலத்தைச் சக்கையாப்
பிழிந்து!
சாக்காட்டு நரிகளுக்கு விருந்தாக்கி வருகிறேன் கண்ணே!
வருகிறேன்! வெற்றித் திலகமிட்டு, வீரச் சபதமிடு!
எனக்கு விடை கொடு கண்ணே! விடைகொடு!

வெள்ளையம்மா: முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டேன்
என்கிறீர்கள்
அப்படியிருக்கும்போது தங்கள் சொல்லை
மறுக்கப் போவதில்லை!
தங்கள் இஷ்டம்போல் நீங்கள் போர்க்களத்திற்குச்
சென்று
வெற்றியுடன் திரும்பி வாருங்கள் சுவாமி!..........

**இணைப்பு: V**

## மதுரை வீரன் கூத்து*

## பூசாரி வாழ்த்துப் பாடல்

அவரழகு சொன்னழகு
ஆண்டவரின் கிருபையோட
ஏறவேண்டா ஏறவேண்டா
என்னையோடும் வீரையனே
சாமி வீரையனே
மதுரை வீரைய்யனுக்கு
ஜெய மங்கலம் சாமிவீரே**
கட்டுக்கட்டா நீரனந்தா
காதிவசம் மீனளந்தா
புழுகுனந்தா மேனியுள்ள
பொகுகூரி மேலனந்தா
தோளிலே துளசி மணி
தோரணங்க பாடுதிங்கே
சந்தனந்தான் மேனியுள்ள
சாம்பலழகு மேலனந்தா
மதுரை வீரைய்யனுக்கு
ஜெயமங்கலம் சாமிவீரே
மாருளே திருபனந்தா
மதனகைய்யே பாடுதிங்கே
மதுரை வீரைய்யனுக்கு

---

* கூத்துப்பாடல் கட்டியவர் பழனி மகன் சுந்தரம் வயது 60; சக்கலியர், வெட்டுக்காடுபுதூர், பரமத்தி வட்டம், சேலம் மாவட்டம். நாள்: 26.692.

** இருமுறை பாடுதல்

| | | |
|---|---|---|
| நெகுகூரி | - | உலகம் முழுவதும் |
| புழுகுனந்தா | - | புகழான |
| மேலனந்தா | - | பரவியுள்ள |
| நீரனந்தா | - | நீர் (திருநீர்பூசியதான) |
| மீளைந்தா | - | அழகுபடி |

வட்டாரமொழியில் தெலுங்கு கலந்து சொற்கள் இடம்பெறுகின்றன.

ஜெயமங்கலம் சாமிவீரே
மாருளே திருபனந்தா
மதனகைய்யே பாடுதிங்கே
மதுரை வீரைய்யனுக்கு
ஜெயமங்கலம் மதுரைவீரே
கொண்டாடி கொப்புத்தூலங்கி
கோமதீர காளி
தானான தான ன்னா ம்பீரே
தானான தானனன்னா ம்பீரே
எடுத்தோனே எல்லைக்குறைச்சல் ம்பீரே***
பார்த்தவன பல்லப் புடுங்கினே ன்பீரே
தாகத்த தீக்கச் சொன்ன
கணையாலுடைப்பேன்
மோகத்த தீக்கச் சொன்ன
வில்லாலடிப்பேன்
தாலி புடிச்சேன் ஒரு தாகப்பன்
அடிச்சிச் சொன்னேன் ம்பீரே
வீரையனுக்கு ஜெய மங்கலம்
வீரையனுக்கு ஜெய மங்கலம்
வன்னிமரத்திலே பிறந்தவரே
வீரையன் வாளொடு வெற்றி உடுத்தவனே
தென்ன மரத்திலே பொறந்தவனே அவன்
தேவரோடு வெற்றி உடுத்தவனே
மதுரைவீரை யனுக்கு ஜெயமங்கலம்
மதுரைவீரை யனுக்கு ஜெயமங்கலம்
தங்கத் தாம்பூலம் செய்தே
தங்கபுஸ்பமும் செய்தே
தொன்னுத்தெட்டு நாள் தொட்டிமேலே
காத்திருந்த கடமை வீரன்
ஐந்துதலை நாகசர்ப்பம்
ஊருக்கு மேல்புறத்தே
ஐந்துதலை நாகசர்ப்பம்
தொட்டிச்சி மாதீரன் நான்
ஆவரச்செடிக்குள்ளே
வனத்திலே கண்டெடுத்தேன்

*** ம்பீரே - என்பீர்; என்பீரே (என்று சொல்வீரே) கூட்டாக பின் நின்று நடுவோருக்கு, முன்பாட்டாளர் (பாத்திரம் ஏற்போர்) முன்பாட்டுப் பாடுவது.

## மன்னன் வசனம்: (பொம்மண்)

நான் பொறந்து 152ஆவது வருசத்திலிருந்து எனக்குக் குழந்தைகளே இல்லாமல் நான் தவச்சிறந்தேன். பன்னன்டாவது (12) வருசம் வரும் முப்பத்திரண்டாவது, நாப்பத்திரண்டாவது லோகம் சென்று வந்தேன். எனக்கு வயசும் 90 வாலிபம் 300 ஆகி விட்டது. இந்த வயசும் 90 வாலிபம் 300 ஆகியும் எனக்குக் குழந்தை குஞ்சு இல்லாம நான் வருந்தத் தவஞ்சு வரத்துக்குப் போனேன். அங்கே பரமேஸ்வரன் பார்த்துட்டு வேட்டைக்குப் போன இடத்திலே வரம் கொடுத்தார். அப்போது எனக்கு ஐயன் மதுரைவீரன் பிறந்தாள்.

### பாடல்

சக்தியுள்ள சாமி
கட்டுக்கடங்காதவரே
துடியெடுத்த வீரா
காந்தம் எரியுதாம்
கற்பூர வாடை

### வசனம்

இவன் கொடி சுத்திப் பிறந்ததால் கோத்திரத்திற்காகாது. இவன் மாலை சுத்திப் பிறந்ததால் அரண்மனைக் காகாது என இவனைத் தங்கத் தாம்பலத்திலே தங்கப்புஸ்பம் செய்து ஊருக்கு மேக்காலே இருக்கிற ஆவாரஞ் செடிக்கு அடியிலே கொண்டு போய் போட்டுடனும்னு குறிகார்ரர் சொன்னதால் பாவி இதைச் செய்தேனடா.

150 மைல் போன பிறகும் வேட்டையில் சவுக்கில்லை. அப்போது சித்தர்களே எனக்குத்துணை. செஞ்சாங்கபாரு. அவுங்க படை எனக்குத் துணையின்னு எப்போதும் இருந்தானுங்க. சரிபுறப்படுவோமுன்னு சொன்னாங்க.

### மாதிச்சி

தொட்டி சக்கிலி, ஊரச்சக்கிலி, கொய் சக்கிலி, பால் சக்கிலி, நாட்டுச் சக்கிலி, ரெட்டியார் சக்கிலி யானாறும் மாதிச்சி மடி மேலே மன்னவன் மதுரை வீரைய்யன் தவழ்ந்தவன்தான்.

பெண் பீச்சு ஆயிரமானாலும், 2 ஆயிரம் படையையும் துரத்தியடித்தவன் சக்கிலிச்சி பாலுண்ட மதுரை வீரன் ஜெயமங்கலம்.

பந்தங்கட்டவேணுமய்யா
மண்டிபோடவேணுமய்யா
மண்டிபோடலையின்னா
சாமி அடித்துவிடும்.

மதுரை வீரையனுக்கு ஜெயமங்கலம்.

## மதுரைவீரன் பாடல் - வசனம்

வீணாக மடிய வேண்டாம் - பின்னர்
வீடு போய் சேர வேணும்
காலனை மடியச் செய்வேன் - பின்னே
காடு போய் சேரவேணும்
வடக்கே விழுந்தசாடை படுகாடு
பூசை செய்வேன்
தெற்கே விழுந்தசாடை திங்காடு
பூசை செய்வேன்
மேக்கே விழுந்த காடை மேகாடு
பூசை செய்வேன்
வேகமாய்ப் போறேன் நானே
வீராதி வீரன் நானே
பொம்மியைச் சிறை யெடுத்தேன்
பூலோகம் பார்த்துநிக்க
சக்கிலியப் பால் குடித்தவன்
மன்னவன் நான்
சாடை மிக உள்ளவன்
மன்னவன் நானே
காசிராசன் மகன் நான்
காசினியில் காட்டினிலே
கதறியவன்நான்
பாம்பு பாலூட்டவே
பாலகன் நான் தவழ்ந்தவன் தான்

குழந்தைகளைக் காப்பாத்தி, குமரிகளைக் காப்பாத்தி கூடவே நானிருப்பேன். பதினாறு வயசான பத்தினிப் பெண் புள்ளைகளுக்குக் காவல் நானிருப்பேன். எந்தக் காட்டுக்கும் துணையிருப்பேன். இங்கேயுமிருப்பேன் அங்கேயுமிருப்பேன்ப்பா. என்னபத்தி நீங்க கவலப்பட வேணாம். நான் போய் வருகிறேன்.

*பூசாரி (கோமாளி)*

அங்க தொட்டிச்சி காவல் காத்துக்கிட்டிருந்தா இங்க ஒரு அழகான பொண்ணு இருக்குதல்லவா. இவனை சிறை யெடுக்கணும்னு நினைச்சான். தொட்டிச்சிக்கு இவன் காசிராஜன் மகன்னு தெரியாது. மாதிகன்னு நினைச்சிட்டாள். அட மாதிகா. காத்துமலை எரிமலை வர நீ ஆலமரம் இச்சி மரத்துக்கடியிலே

இருந்து நீ தங்கியிருந்து வரலாம். சித்தர்களே புறப்படலாம். தொட்டிச்சி நான் மாதிகன். மாதிகன்னு சொன்னா உனக்கு ஆகாது. உன் கையாலே உன் குடிசையிலே உன் கையால ஒரு துரும்பு கொடுத்துக் கொடு. நான் போகிறேன் என்றான்.

வீரே! மதுரை வீரனுக்கு ஜெயமங்கலம்
கால்மேலே கால்போட்டான் வீரைய்யன்
தோள்மேலே தோள் போட்டான்சாமி வீரைய்யன்

அவன் காசி மகராஜன் மகன்னு அவளுக்கு (பொம்மி) தெரியாது. நானென்ன ஜாதி, நீயென்ன சாதின்னு அவளுக்குத் தெரியாது. நான் உசந்த ஜாதி, நீ மட்டமான சாதின்னு அவநினைச்சா. இவளைச் சிறையெடுக்க 5000 பேர் படையை காசிராஜன் பொம்மன் எல்லாத்தையும் மதுரை வீரன் கொன்னுட்டான்.

## மதுரைவீரன் தரு

எடறாதே வெள்ளையம்மாள்

வடகாலே வன்னிம்மாள்

ஞானப்பாடுகள்ளாம்

மதுரைவீரையனுக்கு ஜெயமங்கலம்

பாண்டிராசன் மகளைச் சிறையெடுத்து

மதுரை மன்னர் ஆணையிட மாறுகால் மாறுகை

வாங்கப்பட்டனே..... மதுரை வீரையனின்

மேன்மை ஜெயமங்கலம். என்னோட வீரையனின்

ஆறாம் அம்ச சோதனைக்கு அன்புடனே நீ

வருவதென்று நான் ஆகாசச் சொப்பனம் பார்க்கிறேன்

மதுரைக்கு நாயகியாம் மீனாட்சி

வாசலிலே குடியிருக்கிறேன். மதுரைவீரன் ஜெயமங்கலம்.

## இணைப்பு: VI

# மதுரைவீரன் கூத்து – சில செய்திகள்

சக்கிலியர் மட்டும் இனவேறுபாடுஇன்றிக் கொண்டாடும் கோயில் விழா இது. நோன்பி திருநாளில் மதுரைவீரன் கூத்து நடைபெறும். 74 பந்தங்கள் (தீ) கட்டி விழாக் கொண்டாடுவதும் வழக்கம். ஆண்டில் பங்குனி மாதத்தில் 'கோயில் சாட்டு' செய்து விழா எடுப்பது வழக்கம். பொம்மிக்குக் குடிசை கட்டுதுல் செய்வதும், மதுரை வீரன் போருக்குச் செல்வதைக் காட்டும் வகையில் பொய்க்கால் குதிரை, கம்பு வைக்கோல்களால் செய்வதும் இன்றளவும் நிகழ்கிறது. தீப்பந்தங்கள் செய்பவர் கோயில் பூசாரியே ஆவார். தீப்பந்தம் கட்டும் போது மண்டி போட்டுச் சடங்கு செய்வது மரபு. சக்கிலியர் குடியிருப்பில் நடைபெறும் இவ்விழாவில் ஊரின் நாயக்கர் சமூகத்தார் வந்து காண மாட்டார்கள். இப்பகுதியில் இந்த ஊரில் மட்டுமே இக்கூத்து நடைபெறுகிறது.

ஈரோடு பகுதிலிருந்து பந்தங்கட்டிச் சித்தர் என்பவர் வரவழைக்கப்பட்டு அவரது பாடல்கள் 1100 வரிகள் கொண்ட பாடல்களே மதுரைவீரன் கூத்துப்பாடல்களாகப் பாடப்பட்டு விழா நடைபெறும். அவரே ரூ.1000 முதல் 2000 வரை சம்பளம் பெற்று ஊராரின் முன் வருவோருக்குப் பாடம் கொடுத்து துணிமணிகள் (வேடம்) வாங்கி வேடம் புனையத் துணைநின்று கூத்தினை நடத்துவார். இக்கூத்து மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும். அண்மைக் காலத்தில் இறந்துவிட்டதால் அவரது துணையின்றி உள்ளூர்ப் பூசாரியின் (படிக்காதவர்) மனத்தில் நிற்கும் பாடல் அடிகளைக் கொண்டு பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டு ஒரு நாள் விழாவாகக் கூத்து, சடங்கு செய்யும் நிகழ்வுகளுடன் இணைத்துப் பாடி நடித்துக் கொண்டாடக் காணமுடிகிறது.

27-6-92<br>
வெட்டுக்காடு

இணைப்பு: **VII**

## தகவலாளர் விவரம்

இரவீந்திரன், எம்.எஸ்.,
கொண்டையூர்,
சிவகங்கை மாவட்டம்.

குமாரராமன், எம்.,
சக்காதேவி கிராமியக்கலைக்குழு
கோணங்கிபட்டி.

சிவதாணு, டி.என்.,
சென்னை.

சீனிவாசன், என்.,
சின்னக்காமன் பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

சுந்தர்ராசன், ஆர்.எஸ்.,
திண்டுக்கல் நாடக நடிகர் சங்கம்
திண்டுக்கல்

தமிழ்ச்செல்வன்,
திண்டுக்கல் நாடக நடிகர் சங்கம்,
திண்டுக்கல்.

தயாளன்,
திண்டுக்கல் நாடக நடிகர் சங்கம்,
திண்டுக்கல்.

பரவை முனியம்மாள்,
பரவை,
மதுரை மாவட்டம்.

பாக்கியநாதன்,
திண்டுக்கல் நாடக நடிகர் சங்கம்,
திண்டுக்கல்.

ஜோதிமாணிக்கம், கே.வி.,
தேனி நாடக நடிகர் சங்கம்,
தேனி.

# துணை நூற்பட்டியல்


கீதா, வ., பலிபீடம் - வரலாற்றை நோக்கிய ஒரு தேடல், **வெளி - நாடக இதழ் - 10**, சென்னை, மார்ச்-ஏப்ரல், 1992.

குணசேகரன், கரு.அழ., நாட்டுப்புற ஆட்டப்பாடல்கள் இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கு, **முனைவர் பட்ட ஆய்வேடு**, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை - 1985.

கேசவன், கோ., பள்ளு இலக்கியம் - ஒரு சமூகவியல் பார்வை.

சுப்பிரமணியம், வ.அய்., நாட்டார் படைப்புக்களில் சொற்பொருள் அமைப்பியல் ஆய்வு. **நாட்டார் வழக் காற்றியல் ஆய்வுகள்**, நாட்டார் வழக் காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 1981.

திருமாவளவன், வே.ச., மதுரைவீரன் கதைகள் - ஓர் ஆய்வு, எழிலகம், புதுவை - 1991.

நீலமோகன், ந., மதுரைவீரன் கதை - ஓர் அறிமுகம், **21வது கருத்தரங்கு - ஆய்வுக்கோவை - தொகுதி 3**, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர் -1989.

புகழேந்திப் புலவர் மதுரைவீர சுவாமி கதை, ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை - 1991.

பெருமாள் ராஜி, V.A., ஒரிஜினல் மதுரைவீரன் நாடகம் - (தாய் ஏடு) கையெழுத்துப்படி, தென்னம்பட்டி, மதுரை மாவட்டம். இரண்டாம் பதிப்பு, 23-6-79.

மார்க்ஸ், அ., மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும்.

வானமாமலை, ந., (தொ.ஆ) தமிழர் நாட்டுப் பாடல்கள்

\- - - - - - - - - - வீரபாண்டிய கட்டபொம்மு கதைப் பாடல், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை, 1971.

\- - - - - - - - - - கட்டபொம்மு கூத்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, 1974.

\- - - - - - - - - - ஐவர் ராஜாக்கள் கதைகள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1974.

ஜெகவீரபாண்டியன் பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் - இரண்டாம் பாகம், சி.வி.என். அச்சகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1959.

\- - - - - - - - - - மதுரைவீரசுவாமி உற்பத்தி பூசாரிப் பாட்டு, ஆர்.ஜி. கம்பெனி, சென்னை.

Scott. P. William Dictionary of Sociology

Encyclopedia Brittannica Vol-2.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| சுவடிப் பதிப்புத் திறன் தொகுதி-1 | 50.00 |
| சுவடிப் பதிப்புத் திறன் தொகுதி-2 | 45.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

**Pub.No. 420** நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் **30.00**